www.padippakam.com

1-15 ஜூன். '93 ரூ. 3.00

# புதிய ஜனநாயகம்





பிரேமதாசா

## கொடூரமாக வாழ்ந்தான் குரூரமாக வீழ்ந்தான்

படிப்பகம்

www.padippakam.com

# ஜெயா - காங்கிரசு அரசியல் லாவணி

சென்னை மத்திய சிறையிலிருந்து கிருபன், சந்திரன், ரவி, விக்டர் ஆகிய ''தடா'' கைதிகளான புலிகளை பட்டுக்கோட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த, ஏப்ரல் 29 அன்று இரவு ஒரு வேனில் போலீசார் அவர்களைக் கொண்டு சென்றனர். வழியில், மாமண்டூர் சாலையோர ஓட்டல் அருகே திடீரென ஒரு காரில் வந்திறங்கிய இரு புலிகள் ஏ.கே.47 ரக துப்பாக்கியால் போலீசாரைச் சுட்டு மூன்று ''தடா'' கைதிகளுடன் தப்பிவிட்டனர். ஓட்டலிலிருந்து சற்று தாமதமாக வந்து பின்தங்கிவிட்ட விக்டர் என்ற புலி மட்டும் தப்பிச் செல்ல முடியவில்லை.

லஞ்ச-ஊழல் போதையில் தமிழக போலீசு மூழ்கிப் போயுள்ளதைச் சாதகமாக்கிக் கொண்டு புலிகள் தப்பியோடியுள்ளனர் என்பதே உண்மை. இரவு உணவுக்காக புலிகளுடன் மாமண்டூரில் இறங்கிய போலீசார் அவர்கள் செலவிலேயே சாப்பிட்டதோடு வயிறுமுட்ட சீமைச்சாராயத்தையும் குடித்துள்ளனர். இந்நிலையில் புலிகள் மட்டுமல்ல; எந்தவொரு கைதியும் எளிதாகத் தப்பிவிட முடியும்.

புலிகள் தப்பியோடிய சம்பவத்தால் அரண்டுபோன ஜெயா, அடுத்த நாளே சம்பந்தப்பட்ட போலீசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இச்சம்பவத்தில் ஏதோ சதி நடந்துள்ளது என்றும் நீதிபதி ஒருவர் தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கப் போவதாகவும் சட்டப் பேரவையில் அறிவித்தார். அமைச்சர் எஸ்.டி.சோமசுந்தரம், ''காங்கிரசு - மத்தியப் புலனாய்வுத் துறையின் கூட்டுச் சதி காரணமாகவே புலிகள் தப்பிச் சென்றுள்ளனர். சிறையிலுள்ள புலிகளை ரகசியமாகச் சந்தித்து மிரட்டி அ.தி.மு.க. அரசுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் வாக்குமூலங்களைப் பெற்றுள்ளார்கள். இது தமிழக அரசு மீது பழிபோட்டு ஆட்சியைக் கவிழ்க்க நடக்கும் சதி'' என்று பகிரங்கமாகச் சாடினார்.

இதன் மூலம் காங்கிரசாரின் வாயை அடைத்துவிடலாம் என்று ஜெயா கும்பல் கருதியதற்கு மாறாக, தமிழக காங்கிரசார் எதிர்தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தனர். ''ஜெயாவுக்கும் புலிகளுக்குமிடையில் ரகசிய பேரம் நடந்துள்ளது. அதனாலேயே தமிழகத்தில் புலிகளின் நடமாட்டமும் அட்டகாசமும் பெருகி வருகிறது. கடற்கரைப் பகுதிகளில் மீண்டும் டீசல் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் கடத்தல் அதிகரித்துள்ளது. மாமண்டூர் சம்பவத்துக்கு முன்னர் சேலம் சிறையிலிருந்து 2 புலிகள் தப்பிவிட்டனர். காஞ்சிபுரம் மற்றும் மதுரை-மேலூர் அகதி முகாம்களிலிருந்து மொத்தம் 7 பேர் தப்பிவிட்டனர். இன்று வரை அவர்கள் பிடிபடவில்லை'' என்று அடுக்கடுக்காகக் குற்றம் சாட்டினர். அண்மையில் மே 19-ந் தேதியன்று ராஜீவ் கொலை வழக்கில் முக்கிய சாட்சியாக கருதப்பட்ட சார்லஸ் நவாஸ் என்கிற புலி, சைதாப்பேட்டை கிளைச் சிறையிலிருந்து தப்பியோடிவிட்டார்.

ஆட்சிக் கலைப்பு பீதியில் உறைந்து போன ஜெயா, ''ஐயோ, புலிகளால் என் உயிருக்கு ஆபத்து!'' என்று அனுதாபம் தேடத் தொடங்கினார். ''நள்ளிரவில் 'கிளைடர்' விமானத்தில் வந்த புலிகள் எனது வீட்டைக் குறிவைத்து வட்டமடித்துள்ளனர். காவலுக்கு நின்ற போலீசார் இதைப் பார்த்துள்ளனர்'' என்று ஆகாசப் புளுகை அவிழ்த்துவிட்டு புலிகளால் தனக்கும்தான் ஆபத்து என அலறி காங்கிரசின் குற்றச்சாட்டை முறியடிக்க முனைந்தார்.

ஜெயாவின் லஞ்ச ஊழல் கொள்ளையை அம்பலப்படுத்தி எதிர்க்கும் காங்கிரசுக்கு புலிகள் விவகாரமும் ஆட்சிக் கலைப்புக்கான இன்னொரு முக்கிய துருப்புச்சீட்டு. புலி பீதியூட்டி முன்பு கருணாநிதி ஆட்சியைக் கலைத்ததைப்போல, இப்போது ஜெயா ஆட்சியைக் கவிழ்க்க புலிகள் விவகாரத்தை அவர்கள் கிளறிவிட்டு வருகிறார்கள்.

● ● ●

அரசு தொட்டில் குழந்தைகளின் மரணச் செய்தி அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. கடந்த அக்டோபர் மாதம் மிகுந்த பரபரப்புக்குள்ளாக்கி ஜெயலலிதா அறிவித்த 'புரட்சி' திட்டம்தான் இது. அனாதை குழந்தைகள் மற்றும் பெண் சிசு கொலைகளை தடுப்பதற்காக அரசு தொட்டில் கட்டி, அதில் போடும் சிசுக்களை அரசே பொறுப்பேற்று வளர்க்கும் திட்டம்! இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குரிய பணம், இடம், பராமரிப்பு, மருத்துவ - சுகாதார வசதியோ, அதற்கான அடிப்படையோ இல்லாமல் வெறுமனே மக்களை கவர்வதற்காக செய்யப்பட்ட அறிவிப்பு என்று பலராலும் எதிர்க்கப்பட்டது. ஆனால், இன்று அதே அடிப்படை வசதி இல்லாத காரணத்தினால் சேலம் மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பத்து குழந்தைகள் அரசு பராமரிப்பு இல்லத்திலும், மருத்துவமனையிலும் இறந்துள்ளன. தற்போது தொட்டிலில் குழந்தைகளைப் போட்டவர்களும் வந்து திரும்பப் பெற்றுச் செல்கிறார்கள். தமது சுயநலத்திற்காக, அற்ப புகழுக்காக கவர்ச்சி திட்டத்தை அறிவித்து, குழந்தைகளின் உயிரோடு விளையாடிய ஜெயலலிதாவைப் பட்டி தொட்டிகளிலும் தாய்மார்களின் வசவுகள் அர்ச்சித்துக் கொண்டிருக்கின்றன.

**ஆட்சிக் கவிழ்ப்பு பீதியில் ஜெயா செய்யும் சித்துவேலைகள் அம்பலமாகி ஜெயாவை மேலும் பீதிக்குள்ளாக்குகின்றன.**



அடுத்து ஜெயலலிதாவை தோலுரிப்பது; ஆசிரியர் பயிற்சி பள்ளிகளுக்கு தாராளமாக அனுமதியளித்து கொள்ளையடித்த விவகாரம். ஆசிரியர் பயிற்சி பள்ளிகள் மூலம் கருணாநிதி அரசு கொள்ளையடித்ததாகச் சாடி, அ.தி.மு.க. அரசு ஆசிரியர் பயிற்சி பள்ளிகளுக்கு அனுமதியே அளிக்காது என்று தம்பட்டமடித்தார் ஜெயா. ஆனால் ஒரு சில மாதங்களுக்குள் 200-க்கும் மேற்பட்ட பள்ளிகள் தொடங்க அனுமதித்து பல கோடிகளை ஜெயா கும்பல் சுருட்டியுள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தில் இது தொடர்பாக சிலர் தொடுத்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதியே ஜெயா அரசின் அதிகார முறைகேட்டைக் கண்டித்துள்ளார்; ஒரு முக்கிய அமைச்சரின் (கல்வி அமைச்சர் அரங்கநாயகம்) நிர்பந்தத்தினால், தூண்டுதலினால்தான் பயிற்சிப் பள்ளிகளுக்கு வரைமுறை மீறி அனுமதி வழங்கப் பட்டுள்ளதாகவும் கூறுகிறார். இப்படி நீதிமன்றமே அரசின் ஊழலை அம்பலப்படுத்திக் கண்டிக்கும் முறை இந்திய வரலாற்றிலேயே இதுதான் முதலாவது எனக் குதிக்கிறார்கள் காங்கிரசுக்காரர்கள். ஜெயலலிதா இதற்கு தார்மீக பொறுப்பேற்று பதவி விலக வேண்டும் என்றும் கோருகிறார்கள்.

ஆட்சிக் கவிழ்ப்பு பீதியில் சிக்கியுள்ள ஜெயா கும்பல் தமது ஆட்சியையும், செல்வாக்கையும் தக்கவைத்துக் கொள்வதற்காக உருவாக்கும் பிரமைகளும், மாயக் கோட்டைகளும் சரிந்து விழுந்து ஜெயாவை மேலும் பீதிக்குள்ளாக்குகின்றன. இத்தோடு நாடாளுமன்ற குதிரை வியாபார முறையில் அ.தி.மு.க., எம்.எல்.ஏ-க்கள் விலை பேசப்பட்டுக் கொண்டிருப்பதால் எந்நேரமும் யாரும் ஓடிவிடலாம் என்ற உத்திரவாதமற்ற நிலை. இதை தவிர்ப்பதற்காக அண்மையில் கூட ஆர்.எம்.வீரப்பன், துணைச் சபாநாயகர் பொன்னுசாமி முதலான 12 பேருக்கு ஜெயலலிதா மந்திரி பதவி கொடுத்து வளைத்துப் போட்டுள்ளார். மக்களிடமிருந்து மேலும் மேலும் தனிமைப்பட்டு அம்மணமாகி நிற்கும் ஜெயா கும்பல், தானே தனது அழிவுக்கு நாள்குறித்து முன்னேறிக் கொண்டுள்ளது.

படிப்பகம்

புதிய ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு

எட்டாம் ஆண்டு

13-14

1 - 15 ஜூன் '93

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# ‘நீதி’த்துறையும் நிர்வாணமானது

மிகவும் அவமானகரமான முறையில் தூக்கியெறியப்பட்டிருக்க வேண்டிய உச்ச 'நீதி' மன்ற 'நீதி'பதி வி.ராமசாமி, மிகவும் கௌரவமான முறையில், வெற்றித் திமிரோடு தானே முன்வந்து பதவி விலகிக் கொண்டுள்ளார். பஞ்சாப் - அரியானா உயர் 'நீதி' மன்றத் தலைமை 'நீதி'பதியாக இருந்தபோது அதிகார முறைகேடுகள் செய்து ஊழல் புரிந்த குற்றத்திற்காக ராமசாமியைப் பதவி நீக்கம் செய்யக்கோரும் கண்டனத் தீர்மானத்தைத் தோல்வியுறச் செய்ததன் மூலம் நாட்டின் மிகப் பெரிய லஞ்ச-உழல் கட்சிகளான காங்கிரசும் அ.தி.மு.க.வும் அந்த ஊழல் பெருச்சாளியைக் காப்பாற்றிவிட்டன. ராமசாமி பஞ்சாப் - அரியானா தலைமை 'நீதி'பதியாக பணியாற்றிய காலத்தில் அவரது வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் விதிப்படி அனுமதிக்கப்பட்ட தொகையை விட ஆறுமடங்கு அதிகமாகக் கணக்குக்காட்டி மரச்சாமான்கள், கம்பள விரிப்புகள், திரைச்சீலைகள், மின்சாதனப் பொருட்கள் வாங்கிக் குவித்தார்; இவற்றுக்குப் போலி ரசீதுகளைக் காட்டிப் பணம் பெற்றுள்ளார்; மேலும் ஏறக்குறைய பதினோரு லட்சம் ரூபாய்க்கு அரசு செலவில், தொலைபேசியையும், வாகனங்களையும் தமது சொந்தத் தேவைக்கு முறைகேடாகப் பயன்படுத்தினார். மூன்றரை லட்சம் ரூபாய்க்கு வெள்ளிச் செங்கோல்கள், வெள்ளித்தடிகளையும் வாங்கிக் கொள்ளையிட்டுள்ளார்; தனக்கு ''வேண்டப்பட்ட'' ஊழியர்களுக்குப் பதவி உயர்வு அளித்தார் - இவையனைத்தும் ஆண்டுத் தணிக்கையின் போது அரசு பொதுத் தணிக்கை அதிகாரியால் கண்டுபிடிக்கப்பட்டன.

இதற்கிடையே பாசிச ராஜீவ் கும்பலால் ராமசாமி உச்ச 'நீதி' மன்ற 'நீதி' பதியாகப் பதவி உயர்வு பெற்றார். ஆனால் ராமசாமியின் மேற்கண்ட அதிகார முறைகேடுகளும் ஊழலும் சந்தி சிரித்தது. அவர் பதவியில் நீடிப்பது 'நீதி'த்துறைக்கே அவமானம், அதன் புனிதம் கெட்டு மக்களின் நம்பிக்கையே போய்விடும், பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று பத்திரிக்கைகளும், எதிர்க்கட்சிகளும் கோரின. உடனடியாக ராமசாமியின் கூட்டாளிகள் அவருக்கு வக்காலத்து வாங்கி வாதாடின. ராமசாமி தமிழர் - பார்ப்பனரல்லாதவர் என்பதால் வடநாட்டுப் பார்ப்பனர்கள் அவருக்கு எதிராகப் பழி போட்டு அவதூறு செய்கின்றனர் என்று கதறினர், தி.க. வீரமணி உட்பட திராவிடக் கட்சியினர். ஆனால் பார்ப்பன ஆதிக்க சக்திகளான சுப்பிரமணியசாமி, ஜி.ராமசாமி உட்பட பாசிச ராஜீவ் கும்பலின் முழு ஆதரவைப் பெற்றிருந்தவர்தான் ராமசாமி. ராமசாமியைப் பதவி விலகக்கோரி இந்திய அளவில் வழக்கறிஞர்கள் சங்கங்கள் போராடின. உச்ச 'நீதி' மன்ற வழக்கறிஞர்கள் வேலை நிறுத்தம் செய்தும் ராமசாமியின் கீழ் வழக்கு நடத்த மறுத்தும் புறக்கணித்தும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதில் எல்லாம் 'ஆரிய - திராவிட' வேறுபாடின்றி வழக்கறிஞர்களிடையே பிளவு ஏற்படுத்தி ராமசாமிக்கு அவரது ஆதரவாளர்கள் துணை நின்றனர். சிறிது காலம் விடுமுறையில் அனுப்பப்பட்டாலும் அவருக்குப் பணி ஒதுக்கக்கூடாது, பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை தலைமை 'நீதி'பதியும், அரசுத் தலைவரும் நிராகரித்தனர்.

தேசிய முன்னணி - வி.பி.சிங் ஆட்சியின் போது ராமசாமியைப் பதவி நீக்கக் கோரும் கண்டனத் தீர்மானம் முன்மொழியப்பட்டு அதை நாடாளுமன்ற சபாநாயகர் ஏற்று மூன்று 'நீதி' பதிகளைக் கொண்ட விசாரணைக் கமிட்டி அமைத்தார். ''விசாரணைக் கமிட்டி உறுப்பினர்கள் என்ன யோக்கியர்களா?'' என்று கேட்டு எதிர்க் குற்றச்சாட்டுகளையும் அவதூறுகளையும் அடுக்கி அறிக்கை விட்டார், ராமசாமி. கமிட்டியின் விசாரணைக்காக மூன்று முறை அழைக்கப்பட்டும் போக மறுத்து அடாவடித்தனம் செய்தார். அவரது விளக்கமின்றியே விசாரணை நடத்திய கமிட்டி ஊழல், குற்றச்சாட்டுகளில் உண்மையிருப்பதாகத் தீர்ப்பளித்தது. அதையும் முடக்கும் நோக்கத்தோடு அரசுத் தலைவர், சபாநாயகருக்கு அனுப்பப்படும் தீர்ப்பு தனக்கும் தரப்பட வேண்டும், கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்துக்கு முன்மொழியப்பட்ட கண்டனத் தீர்மானத்தை புதிய நாடாளுமன்றம் எடுத்துக் கொள்ள முடியாது என்று உச்ச 'நீதி' மன்றத்தில் வழக்குகள் போட்டுத் தோற்றுப் போனார். ராமசாமி விவகாரங்களில் வழக்குகளை விசாரிக்கவே அஞ்சி 'நீதி'பதிகள் ஒதுங்கும்படி செய்தார்.

ஒருவழியாக கண்டனத் தீர்மானம் நாடாளுமன்றத்துக்கு வந்தபோது ஒரு பொறுக்கி அரசியல்வாதிக்குரிய தந்திரங்களில் ஈடுபட்டார், ராமசாமி. தான் செய்தவை அதிகார முறைகேடுகள் - ஊழல்கள் என்றால் இப்போது ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சிகளிலும் உள்ள பழைய, புதிய ஆட்சியாளர்கள், அதிகாரிகள், 'நீதி'பதிகள் ஆகிய 'யார்தான் இவ்வாறு செய்யவில்லை என்று வாதாடி அனைவரின் வாயடைக்கச் செய்தார். பஞ்சாபில் அரசு பயங்கரவாத ஆட்சியின் நடவடிக்கைகள், லஞ்ச-ஊழல்களில் பாசிச ராஜீவுக்கு பக்கபலமாக இருந்தவர் ராமசாமி என்பதை விசுவாசத்தோடு எண்ணிப் பார்த்த காங்கிரசு, நாடாளுமன்றக் கண்டனத் தீர்மானத்தைத் தோல்வியடையச் செய்தது. 'நர ருசித்துத்தான் பார்த்தார், வயிறு புடைக்கத் தின்னவில்லையே!'' என்கிற தோரணையில் ராமசாமியின் ஊழல்களை காங்கிரசு நியாயப்படுத்துகிறது. பிரதமர், முதலமைச்சர்கள், அரசுத்தலைவர்கள், 'நீதி'பதிகள், தலைமைத் தேர்தல் கமிசனர் போன்ற உயர்பதவிகளில் உள்ளவர்களின் குற்றங்களை விசாரிக்கவோ, தண்டிக்கவோ முடியாதவாறு இருக்கும் அரசு அமைப்பைப் பயன்படுத்திக் கொண்டு இவர்கள் அனைவருமே தப்பிவிடுகின்றனர். நாடாளுமன்ற ஆட்சியாளர்கள், அரசு நிர்வாக அதிகாரிகள் மட்டுமல்ல, 'நீதி'த்துறை உயர் அதிகாரிகளான 'நீதி'பதிகள் கூட லஞ்ச-ஊழல் கிரிமினல் குற்றங்களுக்கு அப்பாற்பட்ட புனிதர்கள் அல்ல என்பதை ராமசாமியின் விவகாரம் நிரூபித்து விட்டது. தன்மீதான குற்றச்சாட்டுக்கள் - நடவடிக்கைகளில் இருந்து தப்பிப்பதற்காக ராமசாமியும் அவரது சகபாடிகளும் மேற்கொண்ட ''முயற்சிகள் - போராட்டங்கள்'' மூலம் நாட்டின் ஒட்டுமொத்த அரசியல் அமைப்பையே கேலிக்கூத்தாக்கி அதன் போலித்தனத்தை அம்பலப்படுத்திவிட்டார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# பம்பாய் மாஃபியா ஆதிக்கம் தாவூத் - தாக்கரே மோதல்

பம்பாய் குண்டு வெடிப்புப் பயங்கரத்தை ஒட்டி சில ரகசிய உலகப் பேர்வழிகள் கைதாகியிருப்பதும், அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தின்படி பிரபல இந்தித் திரைப்பட நடிகரான சஞ்சய் தத் கைதானதும் இந்தித் திரைப்பட உலகத்தைப் பீதியில் ஆழ்த்தியுள்ளது. அடுத்து எந்த நடிகர் கைதாவாரோ, தங்களுக்கும் ரகசிய உலகப் பேர்வழிகளுக்கும் இடையிலான கள்ள உறவு அம்பலமாகி விடுமோ என்கிற அச்சமும் பீதியும் அவர்களைப் பிடித்தாட்டிக் கொண்டிருக்கிறது.

காங்கிரசு எம்.பி.யும் பிரபல இந்தி நடிகருமான சுனில் தத் - மறைந்த நடிகை நர்கீஸ் தம்பதிகளின் அருமைப் புதல்வன்தான் நடிகர் சஞ்சய் தத். இன்று இந்தித் திரைப்பட முன்னணி கதாநாயகர்களில் ஒருவர். ஒரு திரைப்படத்துக்கு 50 லட்ச ரூபாய் ஊதியம் கேட்குமளவுக்கு - அல்லது மொத்த லாபத்தில் 20% பங்கு கேட்குமளவுக்கு பெரிய நடிகர். இளமையிலேயே போதை மருந்துக்கு அடிமையாகி, தீவிர சிகிச்சைக்குப் பிறகு இன்று முன்னணி இடத்தைப் பிடித்துள்ளவர். பம்பாய் குண்டு வெடிப்பையொட்டிக் கைதான அனீப், சமீர் ஆகிய திரைப்பட வீடியோ உரிமையாளர்கள் அளித்த வாக்குமூலத்தின்படி, சஞ்சய் தத் அவர்களிடமிருந்து ஏ.கே. 56 ரக எந்திரத் துப்பாக்கியும் ஒரு கைத்துப்பாக்கியும் வாங்கி, சட்டவிரோதமாக தனது வீட்டில் மறைத்து வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு ''தடா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். 17 நாட்கள் சிறையிலடைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட அவர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நடிகர் சஞ்சய் தத்துடன் இந்த விவகாரம் முடிவடைந்து விடவில்லை. பம்பாய் பட உலகமே ரகசிய உலகப் பேர்வழிகளின் பிடியில் சிக்கிச் சீரழிந்து கிடக்கிறது. நடிகர் - நடிகைகள் மட்டுமின்றி திரைப்படத் தயாரிப்பாளர்கள், பைனான்சியர்கள், விநியோகஸ்தர்கள், வீடியோ உரிமையாளர்கள், கேசட் வெளியிடுபவர்கள் என்று எல்லோருமே ரகசிய உலக மாஃபியாக்களுடன் தொடர்புடையவர்கள்தான் என்பதை தற்போதைய கைதுகளும் விசாரணைகளும் நிரூபித்துக் காட்டுகின்றன.

பம்பாயின் பிரபல கடத்தல் பேர்வழிகளான மஸ்தான், யூசுப் பட்டேல் முதலானோர் திரைப்படங்களுக்கு பணம் கொடுக்கும் வோதேவிக்காரர்களாக இருந்தார்கள் என்பது பத்தாண்டுகளுக்கு முந்தைய பழங்கதை. இப்போது திரைப்படங்களில் முதலீடு செய்வது மட்டுமின்றி, அதைக் கட்டுப்படுத்தி இயக்குமளவுக்கு தாவூத் இப்ராஹிம் எனும் மாஃபியா கும்பலின் தலைவன் வளர்ந்து விட்டான். பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் முக்கிய குற்றவாளியாகக் கருதப்படும் தாவூத்தின் ஆட்களே இன்று இந்தித் திரைப்பட உலகத்தை ஆட்டிப் படைக்கிறார்கள்.

**சமீர், அனீப் - ''தடா'' சட்டத்தில் கைதாகியுள்ள இந்தித் திரைப்பட வீடியோ அதிபர்கள்; தாவூத்தின் கூட்டாளிகள்**



சுதாகர் பொகாடே - ஐந்தாண்டுகளுக்கு முன்பு ஏர்-இந்தியா நிறுவனத்தில் சரக்கு ஏற்றுபவராக வேலை பார்த்தவர். இன்று கோடிக் கணக்கில் செலவிட்டு பெரிய நடிகர்களைப் போட்டு ''சாஜன்'' முதலான படங்களைத் தயாரித்துள்ள மிகப் பெரிய புள்ளி. இவர் தாவூத்தின் பினாமி என்பதும், தாவூத்தின் கருப்புப் பணம்தான் அவரது திரைப்படங்களுக்கு மூலதனம் என்பதும் யாவரும் அறிந்த ரகசியம். ரகசிய உலகப் போர்வழிகளுடன் எனக்கு எவ்விதத் தொடர்புமில்லை என்று மறுக்கும் பொகாடே இன்று இந்தித் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்தின் துணைத் தலைவராகவும் வளர்ந்து விட்டார்.

ஏழாண்டுகளுக்கு முன்பு திரைப்படங்களைத் திருட்டுத்தனமாக வீடியோவில் பதிவு செய்து விற்றுவந்த ஹனீப் காடவாலாவும் சமீர் ஹிங்கோராவும் இன்று பம்பாயின் மிகப் பெரிய வீடியோ நிறுவனமான மேக்னம் வீடியோவை நடத்துகின்றனர். கடந்த ஓராண்டுக்குள் 300 திரைப்படங்களை வீடியோவில் வெளியிட்டுள்ள இவர்கள் இன்று திரைப்பட தயாரிப்பாளர்களாகவும் வளர்ந்துள்ளனர். இவர்கள் தாவூத்தின் நெருங்கிய கூட்டாளிகள் என்பதும் தாவூத்தின் கள்ளப் பணம்தான் இந்த வீடியோ அதிபர்களை உருவாக்கியது என்பதும் யாவரும் அறிந்ததுதான்.

ஹனீப்பும் சமீரும் பம்பாய் குண்டு வெடிப்புப் பயங்கரத்தை அரங்கேற்றிய மேமன் சகோதரர்களிடமிருந்து, குண்டு வெடிப்புக்கு முதல் நாளன்று 22 லட்ச ரூபாய் பெற்றுள்ளனர். அவர்கள் ஆயுதங்களைக் கடத்திச் செல்ல வாகன உதவியும் செய்துள்ளனர். தாங்கள் தாவூத்தின் கூட்டாளிகள் என்றும் சஞ்சய் தத்துக்கு துப்பாக்கிகளை வழங்கியதாகவும் ஒப்புக் கொண்டுள்ள அவர்கள் இப்போது ''தடா'' சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

சுதாகர் பொகாடே, மகேஷ் டக்கல், ஷசிலால் நாயக், கமால் ராஜ் முதலான திரைப்பட தயாரிப்பாளர்கள் போலீசாரால் சோதனையிடப் படுகிறார்கள். மந்தாகினி, நாக்மா, ஃபாரா, மதுகபூர், ஜாக்கி ஷெராப், மிதுன் சக்ரவர்த்தி, சங்கி பாண்டே, திலீப் குமார் முதலான நடிர் - நடிகைகள் போலீசாரால் விசாரிக்கப் படுகிறார்கள். துபாய்க்குப் பறந்து சென்று தாவூத் அளித்த விருந்துகளில் கலந்து கொண்ட திரைப்பட உலகத்தினர் எனக்கு எதுவுமே தெரியாது என்று பீதியில் அலறுகிறார்கள்.

''எட்டு தலைமுறையாகக் காணாத மிகப் பெரிய அவமானம் இது. சினிமா உலகம் அழுகிக் கொண்டிருக்கிறது. கடந்த பத்தாண்டுகளுக்குள் பல புதிய தயாரிப்பாளர்கள் கோடிக் கணக்கில் செலவிட்டு படங்களைத் தயாரிக்க வந்துள்ளார்கள். நடிகர் - நடிகைகளுக்கு லட்சம் லட்சமாக ஊதியம் தருகிறார்கள். இவர்களுக்கு எங்கிருந்து பணம் கிடைக்கிறது என்றே தெரியவில்லை. இவர்களின் வருகையால் பாரம்பரிய படத் தயாரிப்பாளர்கள் துடைத்தொழிக்கப்பட்டு விட்டார்கள்'' என்று புலம்புகிறார் பழம்பெரும் படத் தயாரிப்பாளரான

படிப்பகம்

www.padippakam.com

பி.ஆர்.சோப்ரா.

ஆனால், பம்பாய் திரைப்பட உலகத்தினரால் ''பாய்'' என்று மரியாதை கலந்த பயத்துடன் அழைக்கப்படும் தாவூத், திரைப் படங்கள் வெளியாகும்போது துபாயில் கோலாகலமாக விழா நடத்துகிறான். நட்சத்திர இரவுகள், குடி, கூத்து, கும்மாளம், விபச்சாரம், அன்பளிப்புகள் என சினிமா உலகத்தினரை அவன் கிறங்க வைக்கிறான். அவனது விருந்தில் கலந்து கொள்ளாத இந்தி நடிகர் - நடிகைகளே இல்லை எனுமளவுக்கு அவனது செல்வாக்கு கொடிகட்டிப் பறக்கிறது. அவன் திரைப்பட - வீடியோ தயாரிப்பாளர்களுக்கு கோடிக் கணக்கில் கடன் தருகிறான். தயாரிப்பாளர்கள், நடிகர்கள், விநியோகஸ்தர்களுக்கிடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து வைக்கிறான். ''இந்த நிலையில் பம்பாய் பல உலகத்தை தாவூத்தின் பிடியிலிருந்து மீட்டுவிட முடியுமா? குற்றம் சாட்டப்பட்டுள்ள நடிகர்கள் - தயாரிப்பாளர்களை திரைப்படத் துறையிலிருந்து தற்காலிக நீக்கம் செய்வதன் மூலம் இப் பிரச்சினையைத் தீர்க்கத்தான் முடியுமா?'' என்கிறார் திரைப்பட தயாரிப்பாளர் ஓம் பிரகாஷ்.

○○○

கிரிமினல் மாஃபியாக்களின் செல்வாக்கும் ஆதிக்கமும் சினிமா உலகத்தோடு நின்று விடுவதில்லை. அதைவிட அபாயகரமான போக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. இவர்கள் அரசியலிலும் செல்வாக்கு செலுத்துகிறார்கள். இந்திய நாடாளுமன்ற ஜனநாயகம் மரணப் படுக்கையில் வீழ்ந்துவிட்ட நிலையில், அதற்கு தற்காலிக உயிர் கொடுக்கும் மருந்தாக கிரிமினல் அரசியல் வேர்விட்டுப் பரவி வருகிறது. உள்ளூர் பேட்டை ரௌடிகளும் கள்ளச் சாராய கிரிமினல் பேர்வழிகளும் எம்.எல்.ஏ.க்களாவது மட்டுமல்ல; சர்வதேச கிரிமினல் மாஃபியா கும்பல்களுடன் இந்திய ஓட்டுப் பொறுக்கிகள் கள்ள உறவு கொண்டுள்ளதையும், அரசியலில் ஆதிக்கம் செலுத்துமளவுக்கு மாஃபியாக்கள் வளர்ந்து விட்டதையும் பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவம் அம்பலப்படுத்திக் காட்டுகிறது.

● மத்திய விவசாய அமைச்சர் பல்ராம் ஜாக்கரின் மருமகன் - யூசுப், சலீம் ஆகியோரின் நெருங்கிய கூட்டாளி என்று இப்போது அம்பலமாகியுள்ளது. சலீம் என்பவன் பம்பாய் குண்டு வெடிப்புப் பயங்கரத்துக்குக் காரணமான மேமன் சகோதரர்களுக்கு ஆயுதங்களைக் கடத்த வாகன உதவி செய்தவன். கிரிமினல் பேர்வழிகளான லாக்டவாலா சகோதரர்களின் ஓட்டல் மற்றும் கட்டுமான நிறுவனங்களில் ஜாக்கர் குடும்பம் 100 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்துள்ளது என்று ராம்தாஸ் நாயக் எனும் பாரதீய ஜனதா எம்.பி. பகிரங்க குற்றம் சாட்டுகிறார். ஆனால், இன்று வரை ஜாக்கர் அதற்கு பதிலளிக்க வில்லை.

● சலீம் சகாரியா எனும் காங்கிரசு எம்.எல்.ஏ.-வும் மகாராஷ்டிர கல்வி மந்திரி சௌகத் சர்க்காரும் லாக்டவாலா சகோதரர்களின் நெருங்கிய கூட்டாளிகள் என்று இப்போது நிரூபணமாகியுள்ளது.

● பாரதீய ஜனதாவின் ராம் காப்சே என்ற எம்.பி. நாடாளுமன்ற சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தில், முன்னாள் மந்திரியான மதன் பாஃப்னா, முன்னாள் எம்.எல்.சி. யான ஜியாவுதீன் புகாரி ஆகியோர் தாவூத் இப்ராஹிம் - மேமன் கும்பலின் கூட்டாளிகள் என்றும் இதற்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தார். இக்கடிதம் சபாநாயகருக்குக் கிடைத்த ஏப்ரல் 20-ம் தேதிக்கு அடுத்த நாளே புகாரி அவரது வீட்டின் முன்பு கொல்லபட்டார். மராட்டிய முதல்வர் சரத்பவாரின் வலதுகரமாகத் திகழ்ந்தவர்தான் புகாரி. ஜனவரி கலவரத்தின் போது பம்பாயில் ராணுவ வாகனத்திலேயே பவாருடன் சேர்ந்து பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

● மத்திய வான்வழி போக்குவரத்து மந்திரியான குலாம்நபி ஆசாத், தனது செல்வாக்கினால் தனது விசுவாசியான ஜாவீத்கான்



''தடா'' சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட நடிகர் சஞ்சய்தத்

என்பவரை மகாராஷ்டிர மந்திரியாக்கினார். ஜாவீத்கான் வீட்டு வசதி மந்திரியாக இருந்த போது சட்ட விரோதமாக நிலங்களை ஆக்கிரமிக்கவும், அடுக்குமாடிக் கட்டிடங்கள் எழுப்பவும் ரகசிய உலகப் பேர்வழிகளுக்குப் பேருதவி செய்தார். பம்பாய் குண்டு வெடிப்புப் பயங்கரத்தைத் தொடர்ந்து மேமன் சகோதரர்களின் கட்டிடமும், ஆபாச நடிகை மந்தாகினியின் பெயரிலுள்ள தாவூத் இப்ராஹிமின் ''மஹாசபீன் மன்சில்'' மாளிகையும் சலீம் தல்வார் எனும் தாவூத்தின் கையாளின் கட்டிடமும் இப்போது இடிக்கப்பட்டுள்ளது. முன்னாள் மந்திரி ஜாவீத்கான், சலீம் தல்வாரின் நெருங்கிய கூட்டாளி என்பது ஊரறிந்த ரகசியம். போலீசாரால் தேடப்படும் சலீம் இப்போது தலைமறைவாகி விட்டான்.

● மத்திய அமைச்சர் வி.சி.சுக்லா மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த ருஸ்லிம் பத்தான் எனும் ரகசிய உலகப் பேர்வழியின் கூட்டாளி. இப்போது பம்பாய் குண்டு வெடிப்பு பயங்கரத்தை ஒட்டி பத்தான் கைது செய்யப்பட்டுள்ளான்.

● முரளி மனோகர் தியோரா — காங்கிரசுக் கட்சியின் பம்பாய் நகரச் செயலாளர்; நாடாளுமன்றப் பிரதிநிதி, ரகசிய உலகப் பேர்வழிகளுடன் காங்கிரசுக் கட்சியின் சார்பில் பேரம் நடத்தும் முக்கிய புள்ளியாக அவர் நீண்ட காலமாகச் செயல்பட்டு வருகிறார். கடந்த பொதுத் தேர்தலின் போது தியோராவின் தேர்தல் அலுவலகம், தாவூத் இப்ராஹிமின் தம்பி நூராவினால் திறந்து வைக்கப்பட்டது.

● பம்பாய் குண்டு வெடிப்புக்கு முன்னர் ''தடா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட காங்கிரசு எம்.எல்.ஏ.-க்களான பப்பு கலானி, ஹிதேந்திர தாக்கூர் ஆகியோர் ரகசிய உலகப் பேர்வழிகளுடன், குறிப்பாக தாவூத் இப்ராஹிமுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் என்று ஏற்கனவே நிரூபணமாகியுள்ளது.

● முதல்வர் சரத்பவாரின் மைத்துனரான பாதம்சின் பட்டேலுக்கு ஜெட்டா நகரிலிருந்து அடிக்கடி போன் வந்துள்ளது என்று பகிரங்கமாக அம்பலப்படுத்துகிறார் முன்னாள் முதல்வர் சுதாகர் ராவ் நாயக். ''தெரிந்தோ, தெரியாமலோ காங்கிரசுத் தலைவர்கள் ரகசிய உலகப் பேர்வழிகளுடன் தொடர்பு கொண்டுள்ளனர் என்பது உண்மைதான். நமது நாட்டின் எதிரிகள் தமது கேடான நோக்கங்களைச் சாதித்துக் கொள்ள இது வாய்ப்பாக அமைந்து விட்டது'' என்கிறார் அவர்.

○○○

இரகசிய உலகப் பேர்வழிகளுடன் ஓட்டுப் பொறுக்கிகளும் சினிமா உலகத்தினரும் கள்ள உறவு கொண்டிருப்பது ஏற்கனவே அம்பலமான ரகசியம்தான். பம்பாய் குண்டு வெடிப்பையொட்டி நடக்கும் கைதுகளும் விசாரணைகளும் ரகசிய உலக மாஃபியாக்களின் பிடியில் அரசியல் - சினிமா உலகம் சிக்கியிருப்பதை இப்போது மீண்டும் நிரூபித்துக் காட்டியிருக்கிறது. ஆனால், இதையே சாதகமாக்கிக் கொண்டு இந்துவெறி பாசிஸ்டுகள் மேலேறித் தாக்கக் கிளம்பியுள்ளார்கள்.

பம்பாய் குண்டு வெடிப்புக்கு பாகிஸ்தானின் சதி, முஸ்லீம் மாஃபியாக்களின் கூட்டு என்கிற வெறியூட்டும் பிரச்சாரம் செய்து 'தேச' பக்த நாடகமாடுவதோடு மட்டும் இந்து வெறி பாசிஸ்டுகள் முடங்கிவிடவில்லை. பம்பாய் ரகசிய உலகத்தில் முஸ்லீம் மாஃபியாக்களின் மேலாதிக்கத்தை உடைத்து இந்துவெறி மாஃபியாக்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டும் திட்டத்தோடு தமது தாக்குதலைத் தீவிரப்படுத்தி வருகிறார்கள். இதேபோல இந்தி சினிமாத் துறையை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக முஸ்லீம் நடிகர் - நடிகைகள், தயாரிப்பாளர்கள் மட்டுமின்றி, மதச்சார்பின்மையைப் பேசும் திரை உலகத்தினர் மீதும் அவதூறுப் பிரச்சாரம் செய்து, 'தேச' விரோதிகளாகச் சித்தரித்து, அவர்களைத்

படிப்பகம்

www.padippakam.com

# இந்துவெறி போலீசாரின் இரண்டாவது சுற்று அடக்குமுறை

கடந்த ஜனவரி கலவரத்தின்போது முஸ்லீம்களை நரவேட்டையாடிய பம்பாய் போலீசு, இப்போது குண்டு வெடிப்புக் குற்றவாளிகளைத் தேடுவது என்ற பெயரில் முஸ்லீம்கள் மீது இரண்டாவது சுற்று அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. மார்ச் மாத இறுதியிலிருந்து இதுவரை 300-க்கும் மேற்பட்ட அப்பாவி முஸ்லீம்கள் சட்டவிரோதமாகக் கைது செய்யப்பட்டு போலீசுக் கொட்டடியில் தொடர்ந்து சித்திரவதை செய்யப்படுகிறார்கள்.

மெஹ்ருன்னிசா எனும் கல்லூரி மாணவி தனது தந்தை மார்ச் 31-ம் தேதியன்று சட்டவிரோதமாகக் கைது செய்யப்பட்டு போலீசாரின் சித்திரவதைக்கு ஆளாகிவருவதையும், அவரை உடனடியாக உயிருடன் கோர்ட்டில் கொண்டு வந்து நிறுத்துமாறும் கடந்த மே 7-ந் தேதியன்று ஒரு மனுவை பம்பாய் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இதுதவிர நிரபராதிகளான தன்னையும் தனது குடும்பத்தாரையும் போலீசார் பிடித்துச் சென்று மிருகத்தனமாக சித்திரவதை செய்ததையும் மானபங்கப்படுத்தியதையும் விவரித்து, அரசாங்கம் இதற்கு நட்ட ஈடு தர வேண்டும் எனவும் துணிவோடு அம்மனுவில் குறிப்பிட்டுள்ளார். போலீசுக் கொட்டடியில் 25-க்கும் மேற்பட்ட பெண்கள் வதைபடுவதாகவும், அவர்களின் சிலர் கர்ப்பிணிகள், கைக்குழந்தையுடன் தவிக்கும் இளம் தாய்மார்கள் என்றும் கூறியுள்ளார்.

'கொடிய ஆயுதங்களான' நூற்புக் கதிரையும் தறி ஊசியையும் காட்டும் ''தடா'' கைதி மோபின் ஹஸ்பட்டேல் - தனது தாயுடன்.



இக்பால் ஹஸ்பட்டேல் என்னும் 60 வயதான கைத்தறி நெசவுத் தொழிலாளியும் அவரது மகன் மோபினும் நெசவுக்கான ஊசி வைத்திருந்ததை - கொடிய ஆயுதம் வைத்திருந்தாகக் குற்றம் சாட்டப்பட்டு ''தடா'' சட்டத்தின் கீழ் கொட்டடியில் அடைக்கப்பட்டு கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர். இக்பாலின் 50 வயதான மனைவி, மருமகள், ஒன்றரை வயதான பேத்தி உட்பட அவரது குடும்பமே போலீசு காவலில் வதைபட்டது. தற்போது பிணையில் வெளிவந்துள்ள இவர்கள் உடல் முழுவதும் ரணமாகியிருப்பதை மருத்துவ சான்றிதழே உறுதிப்படுத்துகிறது. இதேபோல அப்துல் ரஷீத் என்ற சமையற்காரர் காய் நறுக்கும் கத்தி வைத்திருந்தற்காக ''தடா'' சட்டத்தில் கைது செய்யப்பட்டு மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்பட்டுள்ளார். தற்போது போலீசு கொட்டடியில் வதைபட்டுக் கொண்டிருக்கும் 300-க்கும் மேற்பட்டோர் பிறப்பால் முஸ்லீம்கள் என்பதைத் தவிர வேறெந்த குற்றமும் செய்யவில்லை.

அன்று, பாசிச இட்லர் ''எஸ்.எஸ்'' கொலைப்படையைக் கொண்டு சிறுபான்மை தேசிய இனத்தவரை நரவேட்டையாடினான். இன்று, இந்துவெறி பாசிஸ்டுகளின் நவீன ''எஸ்.எஸ்'' படையாக பம்பாய் போலீசு தன்னை இனங்காட்டிக் கொண்டிருக்கிறது.

---

தனிமைப்படுத்தி வருகிறார்கள். இதிலே ஆளும் காங்கிரசுக் கட்சியினர் தலையிட முடியாதவாறு, அதன் ரகசிய உலகத் தொடர்புகளை பட்டியலிட்டு அம்பலப்படுத்துகிறார்கள்.

பம்பாய் பட உலகம் ஒருபுறம் ரகசிய உலகப் பேர்வழிகளின் (குறிப்பாக தாவூத் இப்ராஹிம்) பிடியிலும், மறுபுறம் கலாச்சார சீரழிவுகளைக் கொண்டதாகவும் இருந்த போதிலும், சில நடிகை - நடிகர்களும் தயாரிப்பாளர்களும் பெயரளவிலான மதச்சார்பின்மையைப் பின்பற்றுபவர்களாக உள்ளனர். பம்பாய் சேரிப் பகுதி மக்களின் நலனுக்கான 'சமூக சேவை'யை தமது பொழுதுபோக்காக மேற்கொள்வது, மதக் கலவரங்களின் போது சினிமா உலகத்தினரைத் திரட்டி அமைதிப் பேரணி நடத்துவது முதலான நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த ஜனவரியில் நடந்த பம்பாய் கலவரத்தின் போது அமைதியை நிலைநாட்டக் கோரி இவர்கள் உண்ணாவிரதமும், பேரணியும் நடத்தியதோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளையும் செய்துள்ளனர். இந்துவெறி பாசிச பயங்கரத்தை முதலாளித்துவ தாராளவாதிகளின் பாணியில் விமர்சித்து கண்டித்துள்ளனர்.

இத்தகைய பெயரளவிலான எதிர்ப்பு கூட இருக்கக் கூடாது என்று இந்துவெறி பாசிஸ்டுகள் கொக்கரிக்கின்றனர். இதற்காகவே நடிகை ஷபனா ஆஸ்மி, நடிகர் ஹங்கல் முதலானோர் மீது எவ்வித ரகசிய உலகத் தொடர்பு இல்லாதபோதிலும் 'தேச' விரோதக் குற்றம் சாட்டியும், பாகிஸ்தானின் கைக்கூலிகள் என்று அவதூறுப் பிரச்சாரம் செய்தும் அவர்களது படங்களைத் திரையிடக் கூடாது என்று திரையரங்குகளையும், விநியோகஸ்தர்களையும் எச்சரித்தனர். இப்போது ரகசிய உலகப் பேர்வழிகளுடன் பம்பாய் பட உலகத்தினருக்கு உள்ள தொடர்பு மேலும் அம்பலமானதும் அதைச் சாதகமாக்கிக் கொண்டு, இந்தி திரைப்பட உலகத்தையே தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரும் நோக்கத்தோடு பகிரங்கமாகத் தாக்குதல் நடத்துகின்றனர்.

நடிகர் சஞ்சய் தத் கைதானதும், அவரை 'தேச' விரோதியாக, மக்கள் விரோதியாகச் சித்தரித்து, அவர் நடித்த எந்தப் படத்தையும் திரையிடக் கூடாது என்று பாரதீய ஜனதா - சிவசேனா குண்டர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். நடிகர் சஞ்சய் தத்தின் திரைப்பட விளம்பரங்கள், கட் அவுட்டுகளையும் அவரது படம் திரையிடப்பட்ட அரங்குகளையும் அடித்து நொறுக்கியுள்ளனர். குறிப்பாக, சஞ்சய் தத்தின் தந்தையான நடிகர் சுனில்தத் பம்பாய் கலவரத்தின்போது அமைதிப் பேரணியில் பங்கேற்று, நிவாரண உதவிகளையும் செய்தவர். அவர் இனிமேலும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று மிரட்டிப் பணிய வைப்பதற்காகவே அவரது மகன் சஞ்சய் தத்துக்கு எதிரான போராட்டத்தை இந்து வெறியர்கள் உக்கிரமாக நடத்தியுள்ளனர்.

இந்துவெறி குண்டர்களின் தாக்குதலுக்கு அஞ்சி, பம்பாய் பட உலகத்தினர் தன்னிலை விளக்கம் அளித்துக் கொண்டிருக்கின்றனர். ரகசிய உலகத் தொடர்புடைய நட்சத்திரங்கள், தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், வீடியோ உரிமையாளர்களை திரைப்படத் துறையிலிருந்து நீக்கு

படிப்பகம்

www.padippakam.com

வதாக பம்பாய் பல உலகத்தினர் தீர்மானமே போட்டுள்ளனர். ஆனாலும், இந்து வெறியர்கள் இத்துடன் மட்டும் திருப்தியடைந்து விடவில்லை.

இந்தி சினிமாவையே இந்து ராஷ்டிரத்தை நிறுவுவதற்கான கலாச்சார சாதனமாக மாற்றும் நோக்கத்தோடு அவர்கள் இப்போது கிளம்பியிருக்கிறார்கள். இராமாயணம், மகாபாரதம் ஆகிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் போன்று, இந்துத்துவ பிரச்சார - கலாச்சார சாதனமாக இந்தி சினிமாவை மாற்றி தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டிய அவசியம் அவர்களுக்கு அதிகமாகவே உள்ளது. இந்த நோக்கத்தோடு, இந்தி சினிமா உலகின் அறிவிக்கப்படாத தணிக்கை குழுவாக இந்து வெறியர்கள் மாறியிருக்கிறார்கள்.

இந்துமத உணர்வுகளை எந்த வகையிலும் கொச்சைப்படுத்துவதாக திரைப்படங்கள் இருக்கக் கூடாது. அயோத்தி மசூதி இடிப்பு பற்றியோ, அதைத் தொடர்ந்து நாடெங்கும் நடந்த கலவரங்களைப் பற்றியோ சினிமா உலகத்தினர் எவரும் கருத்து தெரிவிக்கக் கூடாது. ரகசிய உலகத் தொடர்புடைய அனைவரையும் திரைப்படத் துறையிலிருந்து நீக்க வேண்டும். 'தேச' விரோத நடவடிக்கையில் ஈடுபடாதவர் என்று தெரிந்த பிறகே புதிய நட்சத்திரங்களை நடிக்க அனுமதிக்க வேண்டும். குண்டு வெடிப்புப் பயங்கரத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கு 1993 நவம்பருக்குள் திரை உலகத்தினர் நிவாரண நிதி திரட்டித்தர வேண்டும். — இவற்றை நிறைவேற்றாவிட்டால் பாரதீய ஜனதாவும் சிவசேனாவும் பேராட்டங்களை நடத்தும்; எந்தப் படத்தையும் திரையிட முடியாதபடி செய்யும் என்று இந்து வெறி பாசிஸ்டுகள் பகிரங்கமாகவே எச்சரித்துள்ளனர்.

இதேபோல, பம்பாயின் இந்து வெறி பிடித்த போலீசு - அதிகார வர்க்கத்தின் துணையுடன், முஸ்லீம் மா.ஃபியாக்களின் மேலாதிக்கத்தைத் தகர்த்து, இந்துவெறி மா.ஃபியாக்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டும் முயற்சியில் பாரதீய ஜனதா - சிவசேனா கும்பல் தீவிரமான இறங்கியிருக்கிறது. ஏற்கனவே ஜனவரி கலவரத்தின் போது இந்துவெறி ரியல் எஸ்டேட் மா.ஃபியாக்கள், போலீசு துணையுடன் முஸ்லீம் சேரிப் பகுதிகளைத் தீயிட்டுக் கொளுத்தியும் முஸ்லீம்களை வெட்டிக் கொன்றும் புறம்போக்கு நிலப் பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டனர். அதன் தொடர்ச்சியாக, பம்பாய் குண்டு வெடிப்பைக் காரணம் காட்டி, போலீசை ஏவி முஸ்லீம் ரகசிய உலகப் பேர்வழிகளை மிரட்டிப் பணிய வைத்தோ அல்லது சுட்டுக் கொன்றோ தமது ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகின்றனர்.

ஏற்கனவே, ஜனவரி கலவரத்தின் போது இந்துவெறி போதை தலைக்கேறி ஆட்டம் போட்ட பம்பாய் போலீசு, இப்போது குண்டு வெடிப்புக் குற்றவாளிகளைத் தேடுவது என்ற பெயரில் அப்பாவி முஸ்லீம்கள் பலரைப் பிடித்து சித்திரவதை செய்கிறது. 300-க்கும் மேற்பட்டோரை



நடிகர் சஞ்சய்தத்தின் திரைப்பட விளம்பர கட்-அவுட்டுகளை அடித்து நொறுக்கும் சிவசேனா குண்டர்கள்; இந்துவெறி ஆவேசத் தாக்குதல்.

'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளது. தாவூத் இப்ராஹிமுடன் தொடர்புடையவர்கள் என்று குற்றம் சாட்டி பம்பாயில் பலரது கட்டிடங்கள் இடிக்கப்படுகின்றன. தாவூத்தின் மா.ஃபியா குண்டர்கள் போலீசுடன் நடந்த மோதலில் இறந்ததாக கதை கட்டப்பட்டு சுட்டுக் கொல்லப்படுகின்றனர். பம்பாய் குண்டு வெடிப்புப் பயங்கரத்துக்கு பாகிஸ்தானின் சதியே காரணம்; தாவூத் இப்ராஹிம் மா.ஃபியா கும்பலின் சதி என்றெல்லாம் இந்திய அரசும் இந்து வெறியர்களும் குற்றம் சாட்டினர். சதிச் செயல் என்றால் விரல்விட்டு எண்ணக்கூடிய சிறு கும்பலின் ரகசிய நடவடிக்கையாகத்தான் இருக்க முடியும். அப்படியானால் இப்போது நூற்றுக்கும் மேற்பட்டோரை 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டிய காரணம் என்ன? இந்து வெறியர்களின் நோக்கத்தை நிரூபிப்பதற்கு இதுவொன்றே சான்று கூறப் போதுமானது.

> **பம்பாய் திரைப்பட ரகசிய உலகத்தில் முஸ்லீம் மா.ஃபியாக்களின் மேலாதிக்கத்தை உடைத்து, இந்துவெறி மா.ஃபியாக்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டும் திட்டத்தோடு சிவசேனா, பா.ஜ.க. தமது தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது.**

குண்டு வெடிப்பைக் காரணம் காட்டி இவ்வளவு பேரை 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்யும் பம்பாய் போலீசு, ஜனவரி கலவரத்தின் போது பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு கொட்டமடித்த இந்து வெறி குண்டர்கள் ஒருவரைக்கூட கைது செய்யவில்லை. மதுகார் சர்பாட்தார் எனும் சிவசேனா எம்.எல்.ஏ. தனது குண்டர்களுடனும் ஆயுதங்களுடன் கையும் களவுமாக ராணுவப் படையினரால் கலவரத்தின் போது கைது செய்யப்பட்டார். மாஹிம் பகுதியில் முஸ்லீம் குடிசைகளைத் தீயிட்டு கொளுத்தினார், மிலிந்த் வைத்யா எனும் சிவசேனா மாநகராட்சி உறுப்பினர். ஆனாலும் இவர்கள் மீது ''தடா'' சட்டம் பாயவில்லை. இவர்கள் இன்னமும் சுதந்திரமாகத்தான் உலவுகின்றனர். அதுபோல கலவரத்தின் போது கைதான இந்துவெறி குண்டர்கள் அனைவரும் வழக்கு ஏதுமின்றி விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவையாவும் இந்துவெறி பாசிஸ்டுகளின் தாக்குதல் அரசியலையும், வேர்விட்டுப் பரவும் ஆதிக்கத்தையும் தெளிவாக நிரூபித்துக் காட்டுகின்றன. இவற்றை நன்கறிந்த போதிலும் எந்தவொரு ஓட்டுக் கட்சியும் பத்திரிகைகளும் வாய் திறக்க மறுக்கின்றன. தங்களுக்கும் ரகசிய உலகப் பேர்வழிகளுக்கும் இடையிலான கள்ள உறவு அம்பலமாகி விடுமோ என்கிற பீதியும், இந்துவெறி பாசிஸ்டுகளின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத கோழைத்தனமுமே இதற்குக் காரணம். இவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு, எதிர்ப்பே இல்லாமல் இந்துவெறி பாசிஸ்டுகள் மேலும் மூர்க்கமாக மதவெறிப் பாதையில் முன்னேறுகின்றனர். காங்கிரசு அரசோ இந்துவெறி பாசிச ஓநாய்களின் ரத்தப் பசிக்கு நாட்டு மக்களை பலியாக்கி விட்டு அடிபணிந்து சென்று கொண்டிருக்கிறது.

★ மனோகரன்

படிப்பகம்

www.padippakam.com

# பிரேமதாசா:
# கொடூரமாக வாழ்ந்தான் குரூரமாக வீழ்ந்தான்

இலங்கை அதிபர், ரணசிங்கே பிரேமதாசாவின் கோரக் கொலை தெற்கு ஆசிய, குறிப்பாக இந்திய, இலங்கை அரசு, அரசியல் தலைவர்களுக்குக் குலைநடுக்கத்தையும் மரணபீதியையும் ஏற்படுத்தியிருக்கிறது. இனி அவர்கள் தமது நிழலைக்கூட நம்பமாட்டார்கள். மரணபயம் அவர்களைத் துரத்துகிறது; அவர்களின் முகங்களில் சாவின் களை கப்பியிருக்கிறது.

அரசு, அரசியல் தலைவர்கள் கொலை செய்யப்படுவது, இப்போது புதிதானதோ, அரிதானதோ அல்ல. யாரும் எதிர்பாராததும் அல்ல. எவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் இருப்பினும் அவற்றையும் மீறி, அடுத்தடுத்தும் நடப்பவையாகிவிட்டன. ஆனால் யார் யாரால், எவ்வளவு குரூரமான முறையில் தமக்குச் சாவு வரும் என்கிற பயபீதி அவர்கள் நினைக்கும்போதே காலோடு மூத்திரம் பெய்ய வைக்கிறது. கண்களை மூடினால் தானியங்கித் துப்பாக்கிகளும் மனித குண்டுகளும் அவர்களைக் குறிவைக்கும் காட்சியே தோன்றுகிறது.

ராஜீவ் காந்தி கொலையை அடுத்து, உலகிலேயே இரண்டாவது முறையாக மனிதகுண்டு வெடித்து ரணசிங்கே பிரேமதாசா சிதறிப்போனார். ராஜீவ் காந்திக்காவது சிதைந்த உடல் சிக்கியது. ரணசிங்கே பிரேமதாசாவின் சிதறிய சதைக்கோளத்தையே சவப்பெட்டியில் அள்ளிப்போட்டு மூடினார்கள். கடைசியாகத் தனது கணவனின் முகத்தைக் காண ஹேமா பிரேமதாசா சவப்பெட்டியைத் திறக்க முயன்றார். ஆனால் அதிர்ச்சியில் இருந்து அவரை மீட்க முடியாது என்பதால் பலவந்தமாகத் தடுக்கப்பட்டார்.

கடந்த மே தினத்தன்று, மத்திய கொழும்பில், சுகதாசா விளையாட்டரங்கத்தில் இருந்து புறப்பட்ட தனது ஐக்கிய தேசியக் கட்சிப் பேரணிக்குத் தலைமையேற்றுப் புறப்பட்டார் பிரேமதாசா. ஆர்மர் தெரு சந்திப்பில் அப்பேரணியுடன் இணைந்து கொள்வதற்கு இன்னொரு ஊர்வலம் காத்திருந்தது. திறந்த ஜீப்பில் வந்து கொண்டிருந்த பிரேமதாசா இறங்கி பிரதானப் பேரணியுடன் கிளை ஊர்வலத்தை இணைப்பதற்கான ஆணை பிறப்பித்துக் கொண்டிருந்தார். கிளை ஊர்வலத்தின் முன்னணியில் இருந்த ஒரு சைக்கிள் இளைஞன் பிரேமதாசாவை நெருங்க முயன்றான். அவருக்குச் சில அடிகள் முன்பாக, மெய்க்காப்பாளர்களால் தடுக்கப்பட்டான். உடனே தனது உடம்பில் கட்டியிருந்த சக்திவாய்ந்த ஆர்.டி.எக்ஸ் வெடி குண்டை இயக்கி வெடித்தான் அந்த இளைஞன். மார்போடு அவன் தலை பிய்த்துக் கொண்டுபோய் விழ மாண்டு போனான்.

ஆனாலும் அந்த இளைஞனின் இலட்சியம் நிறைவேறியது. தனது மெய்க்காப்பாளர்கள் தனி அதிகாரிகள் உட்பட 24 பேரோடு சின்னாபின்னமாகச் சிதறிப் போனார், பிரேமதாசா. பல மணி நேரம் திகைத்துப் போய் செயலிழந்தன போலீசும், இராணுவப் படையும். அந்த வட்டாரம் முழுக்கவும் சிதறிய உடல்களும் சதைகளுமாகக் காட்சியளித்தது.

''பிரேமதாசாவின் கொலை குரூரமானது, சிந்தனையற்ற பயங்கரவாதச் செயல், பேரதிர்ச்சியளிக்கக் கூடியது'' என்று அதே போன்ற சாவை எதிர்நோக்கியுள்ள அரசு, அரசியல் தலைவர்கள் கண்டித்துள்ளனர். அதையே அவர்களது பாதந்தாங்கிகளும் எதிரொலித்தனர். ஆனால், இலங்கை மக்கள், குறிப்பாக சிங்கள இனத்தவரே கூட பலர் அதிர்ச்சியும் துக்கமும் அடையவில்லை என்பதுதான் அவர்கள் அனைவருக்கும் பயபீதியை ஊட்டியுள்ளது.

உலகின் பல நாடுகளில், பல இனங்களில் சாவைக் கொண்டாடும் மரபும் பண்பாடும் இன்னமும் நிலவுகின்றது. சிங்கள இனத்தவரிடையே அது கிடையாது. வெள்ளாடை அணிந்து, வெள்ளைக் கொடியேற்றித் துக்கம் கொண்டாடுவதே சிங்களர்களது மரபு - பண்பாடு. ஆனால், பிரேமதாசா கொலைச் செய்தி பரவியதும் இலங்கையின் பல இடங்களில் தொடர்ந்து பல மணி நேரத்துக்கு பட்டாசு கொளுத்தி எதிர்த் தாக்குதல் பயபீதியின்றி மக்கள் தெருக்களில் குழுமி ஆடிப்பாடி மகிழ்ந்து கொண்டாடியிருக்கின்றனர். பிரேமதாசா கொல்லப்பட்டவுடன் இலங்கைத் தீவு முழுவதும் ஊரடங்கு உத்திரவு போடப்பட்டு, கொழும்பில் இராணுவம் ரோந்து சுற்றியது. தமிழர் மீதான சிங்களவர் தாக்கி இனக்கலவரம் நடப்பதைத் தடுக்கவே இந்த ஏற்பாடு என்று சொல்லப்பட்டது. இல்லை, பிரேமதாசா சாவைக் கொண்டாடுவதைத் தடுப்பதற்கே இந்த ஏற்பாடு என்று எண்ணக்கூடிய அளவுக்கு சிங்களவர்களிடையே பிரேமதாசாவின் சாவு மகிழ்ச்சிகரமானதாக அமைந்து விட்டது.

ஏனென்றால் பிரேமதாசா தனது கோரச் சாவினால் அல்ல, தனது கொடூர வாழ்வினால் தன் இலங்கை மக்களுக்கு பேரதிர்ச்சியையும், துக்கத்தையும் விளைவித்து வந்தார். எண்ணற்ற கிரிமினல் கொலைக் குற்றங்களால் இலங்கைத் தீவையே இரத்த வெள்ளத்தில் மிதக்கவிட்டவர்தான் பிரேமதாசா.

> எண்ணற்ற கிரிமினல் கொலைக் குற்றங்களால் இலங்கைத் தீவையே இரத்த வெள்ளத்தில் மிதக்கவிட்டவர்தான் பிரேமதாசா. சிங்களவர்களிடையே இவர் சாவு மகிழ்ச்சிகரமானதாக அமைந்துவிட்டது.

இலங்கையில் முன்னாள் அரசுத் தலைவர்கள் அனைவரும் சேனநாயகா, பண்டாரநாயகா, ஜெயவர்த்தனே போன்றவர்கள் ''கோயிகாமா'' எனும் மேட்டுக்குடி, மேல் சாதிகாரர்கள்தாம். ஆனால் ''சாலகாமா'' எனும் சலவைத் தொழிலாளர் சாதியில் பிறந்த பிரேமதாசா தனது சொந்த உழைப்பினால் முன்னேறி நாட்டின் அதி உயர்ந்த பதவிக்கு வந்தார் எனப் பாராட்டப்படுகிறார். 1950-இல் கொழும்பு நகரவை உறுப்பினராகத் தொடங்கி 1989-இல் நாட்டின் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டது வரை தோல்வியே காணாதவாறு மக்கள் ஆதரவு பெற்றவர் எனப் புகழப்படுகிறார்.

உண்மை என்னவென்றால், எம்.ஜி. ஆரைப் போல பிரேமதாசா ஒரு பாசிச கவர்ச்சிவாத பொறுக்கி அரசியல் தலைவர். வீடற்றவர்களுக்கு வீடு கட்டித் தரும் ''காமுதவா'' எனப்படும் ''கிராம எழுச்சி'' இயக்கம், ஏழைகளுக்கு சுயமூலதனம் திரட்டித் தரும் ''ஜனசவ்யா'' எனப்படும் ''மக்கள் பலம்'' இயக்கம், மக்களிடம் நிர்வாகத்தை எடுத்துச் செல்வது என்கிற பெயரில் அதிபர் செயலகத்தையே நாட்டின் பல மாநிலங்களுக்கும் கொண்டு போய் ''குறை கேட்கும்'' இயக்கம் போன்றவை மூலம் மக்களிடையே ஒருவித கவர்ச்சி மோகத்தை ஏற்படுத்தியிருந்தார்.

ஆனால், இவற்றை எல்லாம் மீறியதாக பிரேமதாசாவின் பாசிச - பயங்கரவாதப் படுகொலைகள் மக்களிடையே ஆத்திரத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியிருந்தது. பிரேமதாசாவின் அரசியல் வெற்றியின் இரகசியம் அவரது அரசியல் எதிரியானாலும் ஈவிரக்கமற்ற, குரூரமான முறையில் படுகொலை செய்வதுதான்.

குறிப்பாக, ஜெயவர்த்தனேயின் பதவிக் காலம் முடிந்து, இலங்கை நாடாளுமன்றம் மற்றும் அதிபர் தேர்தலுக்கான காலம் நெருங்கிய சமயத்தில் எதிர்க் கட்சி பிரமுகர்கள், தலைவர்கள் பலரைத் திட்டமிட்டு கொன்றொழித்தார், பிரேமதாசா. அவரது கொலை வெறிக்குப் பலியாகிவிடும் பயபீதியிலேயே எதிர்க் கட்சி வேட்பாளர்கள் பலர் கட்சி மாறினர், அல்லது போட்டியிலிருந்து விலகினர். இந்தக் கொலைகளைச் செய்வதற்காக அப்போது சக்திவாய்ந்த தலைமறைவு இயக்கமாக வளர்ந்து வந்த சிங்கள இனவெறி டிராட்ஸ்கிய (ஜே.வி.பி.) மக்கள் விடுதலை முன்னணியுடன் இரகசிய உடன்பாடு கொண்டிருந்தார் என்று கூறப்படுகிறது.

அரசியல் எதிரிகளைத் தீர்த்துக் கட்டுவதற்கு என்றே சமூக விரோத கிரிமினல்கள், கூலிக் கொலைகாரர்கள், இராணுவத்தினர், போலீசைக் கொண்ட ''பச்சைப் புலிகள்'' எனப்படும் இரகசிய கொலைக் குழுக்

படிப்பகம்

www.padippakam.com

களை கட்டினார். எதிர்க் கட்சியினருக்குத் தேர்தல் வேலை செய்யவே முடியாதவாறு தொண்டர்களும், வாக்களிக்கவே மக்களும் அஞ்சி நடுநடுங்கி போயிருந்தனர். இத்தகைய பயபீதியை ஏற்படுத்தி, படுகொலைகளை நடத்தி பாசிச முறைத் தேர்தல்களை நடத்தி நாடாளுமன்றம் மற்றும் அதிபர் தேர்தலில் வெற்றிபெற்று அதிகாரத்தைக் கைப்பற்றினார்.

அதிகாரத்துக்கு வந்ததும் முதற்காரியமாக இராணுவம், போலீசு அதிரடிப்படை, இரகசியக் கொலைக் குழுக்களை ஏவி ஜே.வி.பி.-யை அடக்கி ஒடுக்கினார். ஜே.வி.பி. ஆதரவாளர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஆண்கள், பெண்கள், சிறுவர் - சிறுமியர் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் வேட்டையாடப்பட்டனர். நள்ளிரவில் துப்பாக்கி வெடிச்சத்தங்கள், அலறல்கள் எங்கும் எதிரொலித்தன. மறுநாள் ஆறுகள், கால்வாய்களில் நிர்வாணமாக பிணங்கள் மிதந்து வந்தன. கடற்கறைகளில் பிணங்கள் ஒதுங்கின். சாலை ஓரங்களில் தீயிட்டு முகம் கருகிய பிணங்கள் கிடந்தன. தெருக்களின் மின் கம்பங்களில் கட்டப்பட்டு, கழுத்தில் ''டயர்'' மாட்டித் தீயிடப்பட்ட பிணங்கள் தொங்கின.

இறுதியாக ஜே.வி.பி.யின் தலைவர்கள் கூண்டோடு கைது செய்யப்பட்டு ஒரே நாளில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இலங்கை தீவு முழுவதும் அதிர்ச்சியில் உறைந்து போனது. அரசு கொலைப் படைகளுக்கு கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின்றி கொல்லவும், கொல்லப்பட்டவர்களின் சடலங்களை எரித்து விடவும் சிறப்பு அதிகாரம் வழங்கப்பட்டது. இவ்வாறு ஏறக்குறைய எழுபதாயிரம் பேர் தென்னிலங்கையில் மட்டும் காணாமல் போனதாக சர்வதேச மனித உரிமை அமைப்பு கூறுகிறது. மக்கள் திரள் பேரெழுச்சிகள் மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டன. ஜே.வி.பி.-யின் பொது வேலை நிறுத்தங்கள், கடையடைப்புகளுக்கு உடன்படுபவர்களின் சொத்துக்கள் பறிக்கப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்ப்பதாகவும், அது வெளியேறவும் வேண்டுமெனவும் பிரேமதாசா நிர்பந்தித்தாலும், இதே கோரிக்கைக்காக நடத்தப்பட்ட போராட்டங்களையும் ஈவிரக்கமின்றி ஒடுக்கினார். ஒரு குறுகிய காலத்துக்கு புலிகளுடன் சமரசம் செய்து கொண்டிருந்தாலும், 1983 தொடங்கி இன்றுவரை ஈழ மக்கள் மீது இனப் படுகொலைகள் நடத்தி ஒடுக்குவதே பிரேமதாசாவின் கொள்கையாக இருந்தது. அவ்வப்பொழுது புலிகளுடன் பிரேமதாச இரகசிய பேரங்கள் நடத்தி வந்ததைக்காட்டி, அவர் உயிரோடு இருந்திருந்தால் ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருப்பார் என்று கூறுகிறார்கள். ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஒரு நாடாளுமன்ற தெரிவுக் குழுவை நியமித்துவிட்டு, பிறகு அதையும் முடக்கிவிட்டு இராணுவத்தை ஏவிப் புலிகளை ஒடுக்குவதில் முழுமூச்சாக ஈடுபட்டிருந்தார் என்பதே உண்மை.

இறுதியாக, பிரேமதாசாவைப் பற்றி வந்த ஒரு செய்தி அதிர்ச்சியிலும் அதிர்ச்சி தரக்கூடியது. கடந்த ஓராண்டாக தென்னிலங்கையில் பல சிறுவர்கள், இளம் தாய்மார்களும் காணாமல் போனார்கள். பிரேமதாசா தன்னையும், தனது பதவி - சொத்துக்களையும் காத்துக் கொள்வதற்கான பல யாந்திரீக வேள்விகள் - யாகங்கள் நடத்தினார்; அவற்றிற்குப் பலியிடுவதற்காக சிறுவர்கள் கடத்தப்பட்டார்கள். வேள்வி - யாகங்களில் கொல்வதற்கும், பிரேமதாசா தாய்ப்பாலில் குளிப்பதற்கும் பல இளம் தாய்மார்கள் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்கள் என்று சிங்களப் பத்திரிகைகள் எழுதின. யாரும் கடத்தப்பட்டதாகவோ காணாமல் போனதாகவோ புகாரே கிடையாது என போலீசார் மறுத்த போதும் அப்பத்திரிகைகள் ஆதாரங்களை வெளியிட்டன. அவற்றின் ஆசிரியர்களுக்கு கொலை மிரட்டல்கள் வந்தன.

இப்படி அனைத்து மக்களின் வெறுப்பு, ஆத்திரத்துக்குள்ளான பிரேமதாசா தமிழீழ விடுதலைப் புலிகளால்தான் கொல்லப்பட்டதாகக் கூறி ஆதாரங்களைத் தேடுகிறது இலங்கை அரசு. புலிகள் இதை மறுத்ததோடு பிரேமதாசா சாவுக்கு துக்கம் தெரிவித்தும் உள்ளனர். கொலை செய்யப்பட்ட முறை புலிகள் மீதான சந்தேகத்தையே தூண்டுகிறது. அதே சமயம் பிரேமதாசாவைக் கொன்று கணக்குத் தீர்த்துக் கொள்ளத் துடிக்கும் பல எதிரிகளையும் பிரேம்தாசா சம்பாதித்துக் கொண்டிருந்தார்.



இலங்கையில் மே தின நிகழ்ச்சியில் மனித வெடிகுண்டுக்கு பலியான உடல்கள்.

ஜே.வி.பி. இயக்கத்தை ஒழித்துக் கட்டியதில் பிரேமதாசா காட்டிய பாசிச பயங்கரம் காரணமாக அவர்கள் பழிதீர்த்திருக்கலாம். ஜே.வி.பி.யை வேட்டையாடுவதில் பிரேமதாசாவின் நாயாக செயல்பட்ட உடுகம்பொல என்கிற உயர் போலீசு அதிகாரிக்கு பிரேமதாசா துரோகம் செய்துவிடவே அவர் தலைமறைவாக வாழ்ந்து ஜே.வி.பி.க்கே உதவி செய்து பிரேமதாசாவைக் கொன்றிருக்கலாம். இலங்கை அதிபர் தேர்தலில் பிரேமதாசாவை எதிர்த்துப் போட்டியிட இருந்த் பிரபல நடிகரும், சிறிமாவோ பண்டாரநாயகாவின் மருமகனுமான விஜயகுமாரணதுங்கே துப்பாக்கியாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதேபோல இன்னொரு போட்டி வேட்பாளாராக மாறி எதிர்க் கட்சிகள் சார்பாக போட்டியிட இருந்த இலங்கை இராணுவத் தளபதி கெம்பகடுவா உட்பட 12 அதிஉயர் இராணுவத் தளபதிகள் கண்ணி வெடியில் சிக்கி ஒரேயடியாக மாண்டு போயினர். அதே போல ஒரு காலத்தில் பிரேமதாசா சகபாடிகளாக இருந்து, அதிருப்தியுற்று அவரது மந்திரி சபையில் இருந்து விலகி, பிரேமதாசாவை பதவி நீக்கம் செய்ய முயன்று தோல்வியுற்றனர் காமினி திசாநாயகே, பிரேமச்சந்திரா, லலித் அதுலத் முதலி ஆகியோர். அவர்களில் அடுத்த அதிபர் தேர்தலில் போட்டியிட இருந்த லலித் அதுலத் முதலி, பிரேமதாசா கொலைக்கு எட்டு நாட்கள் முன்னதாக ஒரு தேர்தல் மேடையில் வைத்து பகிரங்கமாகவும் துணிகரமாகவும் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலைகளில் சூத்திரதாரி பிரேமதாசாதான் எனச் சந்தேகிக்கும் எதிர்க் கட்சிகள் கூட அவரைக் கொன்றிருக்கலாம் — இப்படி பல ஊகங்கள், சந்தேகங்கள் நிலவுகின்றன.

எவ்வாறாயினும், மனித குண்டாக வந்து ராஜீவ் காந்தியைத் தாணு கொன்றது போல, ரணசிங்கே பிரேம்தாசாவும் கொல்லப்பட்டிருப்பது, அந்த அடையாளம் தெரியாமல் சிதறிப்போன இளைஞனின் துணிச்சலையும், ஆத்திரத்தையும், உறுதியையும் காட்டுகிறது. கிரிமினல் கொலைகளுக்கு மரண தண்டனை வழங்குவது ஆட்சியாளர்களுக்கு மட்டுமே உள்ள அதிகாரம் அல்ல; அது ஆட்சியாளர்களுக்கும் எதிராக வழங்கப்படுவதில் அதிர்ச்சிக்கோ, துக்கத்துக்கோ இடமில்லை. பாசிச பயங்கரவாதப் பாதையில் தொடர்ந்து நடைபோடும் அரசு, அரசியல் தலைவர்களுக்கு இந்திரா, ராஜீவ், ரஞ்சன் விஜயரத்னே, லலித் அதுலத் முதலி ஆகியோரோடு பிரேமதாசாவின் அரசியல் வாழ்வும் சாவுமே பாடமாக அமைகின்றன.

● மாணிக்கவாசகம்

படிப்பகம்

www.padippakam.com




● *பார்ப்பணியம் உயிர் வாழ்வதே "இந்தியா" என்ற ஏகாதிபத்தியக் கட்டமைப்பில்தான். அப்படி இருக்க "இந்தியா" என்ற கட்டாய பிரதேச எல்லையை ஏற்றுக்கொண்டு, பார்ப்பணிய எதிர்ப்பு, பார்ப்பணிய மதவெறி எதிர்ப்பு, பார்ப்பணிய வழக்கொழிந்த சமஸ்கிருத சாம்பலில் இருந்து உருவான இந்திமொழி ஆதிக்கத்தை எதிர்ப்பது என்பது ஒரு மோசடி அல்லவா? தேசிய இன விடுதலை மட்டுமே சரியானதல்லவா?*

*—தமிழன், மண்ணுார்பேட்டை.*

☆ "தேசிய இன விடுதலை மட்டுமே சரியானது" என்கிற குறுகிய - குருட்டுப்பார்வை அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாகாது. "ஏகாதிபத்தியக் கட்டமைப்பு" என்று வேறொரு பொருளைக் குறிக்கும் சொற்றொடரைத் தேசிய இன ஒடுக்குமுறைக்குப் பயன்படுத்துவதாலேயே இதற்கு முக்கியத்துவமளிப்பதாகவும் ஆகிவிடாது. "இந்தியா" என்ற கட்டாய பிரதேச எல்லையை ஏற்க மறுப்பதால்தான் தேசிய சுயநிர்ணய உரிமையைப் புதிய ஜனநாயகப் புரட்சியின் ஒரு பகுதியாகக் கொண்டுள்ளோம். ஆகவே எமது பார்ப்பணீய எதிர்ப்பில் எந்தவித மோசடியும் கிடையாது. ஆனால் "இந்தியா" என்ற கட்டாய பிரதேச எல்லையையும் இந்தியின் ஆட்சிமொழித் தகுதியையும் அரசியல் நிர்ணய சட்டத்தில் ஏற்றி, வழக்காடினாரே அம்பேத்கார் அவரது பார்ப்பணீய எதிர்ப்பை மோசடி என்று கூறிவிட முடியுமா?

● *சமத்துவம் பேசுகின்ற, தனிநபர் 'துதி' பாடுவதை ஏற்றுக் கொள்ளாத கம்யூனிஸ்டுகள், சீனாவில் மாவோ பூத உடலை பாதுகாத்து வைப்பதும், அந்த உடலைத் தரிசிப்பதும் ஏன்?*

*—ஈ.கே.ஜரீத், குளச்சல்*

☆ இல்லை. "துதி", "வழி"பாடு என்கிற முறையில் கம்யூனிஸ்டுகள் கருதுவதில்லை. சிலைகள் வைப்பது, சமாதி எழுப்புவது போன்ற நினைவுச் சின்னமாகவே கருதப்படுகிறது. கார்ல் மார்க்சின் லண்டன் ஹைகேட் கல்லறைக்கும் சென்னை பெரியார் திடலிலுள்ள பெரியார் ஈ.வெ.ராவின் நினைவிடத்துக்கும் போய் மலர்வளையம் வைத்து வணங்குவது போன்றுதான் லெனின், மாவோ ஆகியோரின் உடல்களைத் "தரிசிப்பதும்", அவர்கள் போதித்த சித்தாந்தம், சாதித்த புரட்சிகர நடைமுறை ஆகியவற்றை நினைவுறுத்தி மனவெழுச்சி - உத்வேகம் பெறுவதற்கான ஒரு சின்னம் என்பதாக அவை கருதப்படுகின்றன. சமத்துவம், தனிநபர் 'துதி'பாடுதலை ஏற்காத அதே சமயம் வரலாற்றில் - புரட்சியில் எல்லா மனிதர்களும் சமமான பங்காற்றுவதுமில்லை; சில தனிநபர்களின் முக்கியத்துவத்தை மறுப்பதற்குமில்லை. புரட்சி வெடித்துப் பரவி வெற்றி கொள்வதற்கான சூழ்நிலையும் அவசியமும் 40 கோடி சீன மக்களுக்கும் இருந்தது; அதற்குத் தலைமையேற்று வழிநடத்தப் பல தலைவர்களும்தான் முயன்றார்கள். என்றாலும் மாவோதான் சரியான புரட்சிகரப் பாதை வகுத்து தெளிவோடும் உறுதியோடும் வழிநடத்தி வெற்றிகொள்வதற்குத் தலைமையேற்றார் என்பதை மறுக்க முடியாது.

● *"எந்தவொரு கட்சியும் பிற கட்சியுடன் உடன்பாடு செய்து கொள்ளாமல் நிச்சயம் ஆட்சிக்கு வரமுடியாது. அப்படி ஒரு நிலை ஏற்பட்டாலும் அந்த அரசு நீடித்து செயல்பட இயலாது. எனவேதான் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி தனித்து நிற்கவில்லை. போலிக்கம்யூனிஸ்டுகள், துரோகிகள் என்று எங்களைக் கூறும் நக்சல்பாரி இயக்கம் தீவிரவாதிகளின் புகலிடம். அது அகிம்சையின் வழியின்றி வன்முறைப் பாதையில் ஆட்சியைக் கைப்பற்ற நினைக்கிறது. அந்தக் கொள்கைகளை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்" என்று கம்யூனிஸ்டு கட்சியின் கிளைத் தலைவர் ஒருவர் கூறுகிறார். உங்கள் பதில் என்ன?*

*—லெனின் பிரியன், கடினல்வயல்*

☆ "இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி" என்கிற பெயரில் எப்போதுமே இன்னொரு காங்கிரசாகவே அக்கட்சி இயங்கி வந்தது. மார்க்ஸ், லெனின் பெயரால் சொன்னால் மக்கள் ஏற்க மாட்டார்கள் என்று சோசலிச மகிமையைச் சொல்வதற்கு காந்தி, நேரு, இந்திரா, பாரதி, தாகூர் குரலாக மாறியவர்கள்தானே இவர்கள். இப்போது குருச்சேவ், கோர்பசேவ் பாணி சோசலிச வீழ்ச்சிக்குப் பிறகு "இந்துத்துவ" எழுச்சிக்குப் பொருத்தமாக விவேகானந்தர், சங்கராச்சாரி பாணி சமத்துவம் பேசுகின்றனர். வயிற்றைக் கழுவுவதற்காக முதலாளியிடம் பிச்சையெடுத்துக் கொண்டும், சில 'சீட்டு'க்களுக்காக ஜெயலலிதாவின் முந்தானையைத் தூக்கிக் கொண்டும் திரிகின்றனர். பெயரிலேயே "கம்யூனிஸ்டு" என்று இருப்பதை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், மாற்றி விடுவோம் என்று யோசித்துக் கொண்டிருக்கும் தொடை நடுங்கிகளிடமும், துரோகிகளிடமும் வன்முறைப் பாதையைப் பற்றிப் பேசலாமா? நாடு முழுவதும் வன்முறை பொறுக்கி கிரிமினல் அரசியல்மயமாகி, இந்து மதவெறியும் பாசிச பயங்கரவாதமும் தலைவிரித்தாடும் இந்தச் சமயத்தில் அகிம்சை பேசும் இந்தப் போலிக் கம்யூனிஸ்டுகளை மக்கள் மன்னிக்கவே மாட்டார்கள்.

● *பொதுவுடமை இயக்கத்தின் பெயரில் உள்ள அமைப்புகளை மூன்று விதமாகப் பிரித்து எழுதியிருந்தீர்கள். மார்க்சியத்தின் துணையோடு பலம் பொருந்திய பல்வேறு வர்க்கப் போக்குகளைக் கொண்ட பல்வேறு அமைப்புகளை சித்தாந்தப் போராட்டத்தின் மூலம் லெனின் முறியடித்தார். அதே போல் உங்களால் ஏன் இந்தப் போலிக் கம்யூனிஸ்டுகளையும், போலிப் புரட்சிக் குழுக்களையும் வீழ்த்த முடியவில்லை?*

*—பரமசிவம், அத்திப்பட்டு*

☆ லெனின் - இந்த நூற்றாண்டின் இணையற்ற சிந்தனாவாதி. புரட்சிப் போராளிகள் இருவரில் ஒருவர். அவர் அளவுக்கு சாதனைகளை நிகழ்த்திவிட்டதாக எவருமே உரிமை பாராட்டிக் கொள்ள முடியாது. இருந்தாலும் அவரது பாதையைப் பின்பற்றி போலிகளுக்கு எதிரான சித்தாந்தப் பேராட்டம் நடத்திக் கொண்டுதான் இருக்கிறோம். அதில் கணிசமான அளவு வெற்றியும் கண்டுள்ளோம். இந்த அமைப்பு எழுப்பிய அரசியல் சித்தாந்தப் பிரச்சினைகளும், முன்வைத்த நிலைப்பாடுகளும் பல மாநில புரட்சிகரக் குழுக்களிடையே பாதிப்புகளையும், விவாதங்களையும், மாற்றங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றன. தமிழ்நாட்டில் நாம் மேற்கொண்ட அரசியல், சித்தாந்த முடிவுகளே சரியானவை என்று நிரூபிக்கப்பட்டுள்ளன. இங்கே பிற குழுக்கள் ஒன்று சீரழிந்து, அம்பலப்பட்டுப் போயின; அல்லது சுருங்கியும் செயலிழந்தும் முடங்கிப் போயுள்ளன. ஆனால் இந்த அமைப்பு மட்டுமே புரட்சிகர இயக்கங்களைத் தொடர முடிந்துள்ளதோடு ஆதரவும் பெருகி வருகிறது. அதே சமயம் இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். போலிக் கம்யூனிஸ்டுகளும், போலிப் புரட்சியாளர்களும் புரட்சி வெற்றிபெற்ற பிறகும், லெனினுக்குப் பின்னும் நீடித்திருந்தார்கள். பாட்டாளி வர்க்கத்துக்கு எதிரான முதலாளித்துவ சித்தாந்தமும், சிறு முதலாளித்துவ சமூகத்தரும் நீடிக்கும் வரை போலிகள் தொடர்வது தவிர்க்க முடியாது. எனவேதான் "பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்

படிப்பகம்

www.padippakam.com

தொடர வேண்டிய''தன் அவசியத்தை மாவோ போதித்தார்.

● *அம்பேத்கார், பெரியார் ஆகியோர் சமரசவாதிகள், சீர்திருத்த வாதிகள் என்று முன்பு சொன்னீர்கள். இப்பொழுது அவர்கள் சொன்ன வார்த்தைகள் சரியென்று சொல்லி வருகிறீர்கள். இதைத் தாங்கள் வெளியிடும் பாடல்கள், இதழ்கள் வாயிலாக அறிகிறோம். இந்த நிலை சந்தர்ப்பவாதமாகத் தெரிகிறது. விளக்கம் என்ன?*

*—இரா.கணேசன், சாத்தூர்.*

☆ நிலவுகின்றன சமூக, பொருளாதார, அரசியல் பண்பாட்டு அமைப்பை அடியோடு தூக்கி எறிந்து ஒரு புதிய ஒழுங்கை நிலைநாட்டுவதற்கான புரட்சிகர சித்தாந்தத்தையோ, இயக்கத்தையோ அம்பேத்காரும், பெரியாரும் கொண்டிருக்கவில்லை. இந்த அமைப்புக்குள்ளாகவே சமூக, பொருளாதார, பண்பாட்டு சீர்திருத்தங்கள் கொண்டு வருவதற்கான சித்தாந்தத்தையும், இயக்கத்தையுமே அவர்கள் மேற்கொண்டனர். ஆகவே அவர்கள் புரட்சியாளர்கள் அல்ல, சீர்திருத்தவாதிகள் என்பதையே நாம் முன்பும் இப்போதும் கூறி வருகிறோம். சந்தர்ப்பவாதமாக எமது நிலைப்பாடுகள் எதையும் கைவிடவோ, மாற்றிக் கொள்ளவோ செய்யவில்லை. அவர்கள் புரட்சியாளர்களாக இல்லாது சீர்திருத்தவாதிகளாக இருந்ததாலேயே சமரசவாதிகளாகவும் விளங்கினர். இதற்கான ஆதாரங்களையும் எழுதியுள்ளோம்.

● போலிக் கம்யூனிஸ்டுகளையும் போலிப் புரட்சியாளர்களையும் வீழ்த்த முடியவில்லையே ஏன்?

● இசுலாமை பிற்போக்கு என்று தாக்குவது இந்துராஷ்டிரத்துக்கு துணைபோவதாகதா?

● அம்பேத்கார், பெரியார் பற்றிய உங்களுடைய நிலைப்பாடு மாறிவிட்டதா?

எடுத்துக்காட்டாக ஆங்கிலேய காலனிய ஆட்சியாளர்களின் மிரட்டலைக் கண்டஞ்சி 1935 ஈரோடு திட்டத்தைக் கைவிட்டு நீதிக் கட்சியின் நிலைபாடு எடுத்தார் பெரியார். அதே போல அரசியல் நிர்ணய சபையிலும் அதன் சட்டவரைவுக் குழுத் தலைவராகவும் பின்னர் காங்கிரசு மந்திரி சபையிலும் பங்கேற்று இந்த நாட்டின் கேடுகெட்ட - பிற்போக்கு அரசியல் நிர்ணய சட்டத்தை வகுத்து, நியாயப்படுத்தி வாதாடினார் அம்பேத்கார். அதேசமயம் பெரியார், அம்பேத்காரின் சமூக, பண்பாட்டுச் சீர்திருத்தங்கள் பார்ப்பன - சனாதன - வருணாசிரம - சாதிய ஆதிக்கத்துக்கு எதிராக ஏற்படுத்தியுள்ள சில மாற்றங்களுக்குக் கூட இந்து மதவெறி பாசிசத்தினால் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதை எடுத்துச் சொல்லும் வகையில் பெரியார், அம்பேத்காரின் மேற்கோள்களும், சாதனைகளும் எமது பிரச்சாரங்களில் இடம் பெறுகின்றன.

● *இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஆயுதந்தாங்கி வன்முறையில் ஈடுபட்ட திப்பு சுல்தான், பகத்சிங் போன்றவர்களை ஆதரிக்கின்றீர்கள். ஆனால் தமிழ்நாட்டில் ஆங்கிலேயருக்கு எதிராக அப்படி ஈடுபட்ட வீரபாண்டியன் கட்டபொம்மன், ஜான்சி ராணி, வீரவாஞ்சிநாதன் மற்றும் புரட்சிக்கவி பாரதி போன்றவர்களை ஏன் பெருமைப் படுத்தவில்லை?*

*—கே.கர்ணன், விழுப்புரம்.*

☆ கேள்வியாளர் குறிப்பிடும் பட்டியலில் மற்றவர்களில் இருந்து பகத்சிங் மாறுபட்டவர்; பகத்சிங் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளராக உயர்ந்தவர் என்கிற முறையில் அவர் வீரதீரத்தையும் நாட்டுணர்வையும் வாழ்வையும் தியாகத்தையும் போற்றுகிறோம், கொண்டாடுகிறோம். திப்பு சுல்தான், கட்டபொம்மன், ஜான்சி ராணி (இவர் தமிழ்நாட்டவர் அல்ல, வட நாட்டில் உள்ள ஜான்சியின் அரசி), மருது சகோதரர்கள் போன்றவர்கள் தமது அரசைக் காப்பதற்காகவே என்றாலும் அந்நிய காலனிய ஆட்சியாளர்களுக்கெதிராகப் போரிட்டவர்கள் என்கிற முறையில் போற்றக்கூடியவர்களே. ஆனால் வாஞ்சிநாதன், பாரதி ஆகியோரின் ''இந்திய தேசிய''த்தில் ''இந்து ராஷ்டிர'' நெடி வீசுகிறது.

● *இந்துத்துவ பாசிஸ்டுகள் பயங்கர அடக்குமுறைப் பேய் மதம் என்று கூறி முஸ்லீம்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்துகின்றனர். முஸ்லீம்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்துகின்றனர். முஸ்லீம்களுக்கு எதிரான இந்துத்துவப் பிரச்சாரத்தை எதிர்க்கும் தாங்களும், 'அதிபயங்கர அடக்குமுறை விஷமுள்ள பிற்போக்கு இஸ்லாம்' என்ற நிலைப்பாட்டின் மூலம் இந்துத்துவ பாசிசத்தோடு ஒத்துப்போகத்தானே செய்கிறீர்கள்?*

*—பஷீர், .காயல்பட்டினம்.*

☆ இசுலாமிய மக்களுக்கு எதிராகவே ஒரு மதம் என்கிற முறையில் இசுலாம் மதத்தின் கொடுமைகள் - அடக்குமுறைகள் மற்றும் காலத்துக்கு ஒவ்வாத பிற்போக்குக் கருத்துக்களை நாங்கள் விமர்சிக்கிறோம். உதாரணமாக ''ஷரியாத் என்னும் குடும்ப உறவுச் சட்டம், ஜமாத் தீர்ப்புகள், ''போரா'' போன்ற இசுலாமியப் பிரிவுகளில் மதக் குருமார்களின் ஆதிக்கம் ஆகியவை இத்தகையவைதாம். மாறிய சமூகப், பொருளாதார, பண்பாட்டு உறவுகளுக்கு ஏற்ப இசுலாம் தன்னைச் சீர்திருத்திக் கொள்ளாததால் இசுலாமிய சுன்னத்துகள் பலவும் பெரும்பாலும் சடங்குளாகவும் மத நூல்களிலும், மதகுருமார்களின் போதனைகளுக்குள்ளாக மட்டுமே அடங்குவதாகவும் மாறிப் போய்விட்டன. உதாரணமாக பல்லாயிரக்கணக்கான உழைக்கும் இசுலாமியப் பெண்கள் மதக் கோட்பாட்டின்படியா வாழுகிறார்கள்; அப்படி வாழவும் முடியுமா? அல்லது வட்டிக்கு விடுதல், சாராயம் - போதை மருந்து விற்பது, கடத்தல் - சினிமா முதலிய சீரழிவுக்குப் பலியான இசுலாமியர்களை அம்மதம் விலக்கியா வைக்கிறது. மதக் கோட்பாடுகளுக்கு மாறாக எதிராக நடக்கும் அவர்களையும் ஏற்றுக் கொண்டுள்ளதே ஏன்? அதேபோல இந்துமத பாசிசத்துக்கு எதிராக, அதன் விளைவாக சிறுபான்மை வகுப்புவாத, பயங்கரவாத அமைப்புகளில் இசுலாமியர் தஞ்சம் புகுவதையும் விமர்சிக்கிறோம். இசுலாமிய மத ஆட்சியை நிறுவப் போரிடுவதாகக் கூறிக் கொள்ளும் ஜிகாத், ஐ.எஸ்.எஸ்., ஜமாத்-இ-இசுலாமி போன்றவை இத்தகையவைதாம். இருந்த போதும் இந்த நாட்டில் வாழும் 12 கோடி இசுலாமியரின் மத வழிபாட்டு உரிமை, சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்; அவர்களின் ஜனநாயக, குடியுரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிறோம். அதற்கு மாறாக ''இங்குள்ள இசுலாமியர் அனைவரும் அந்நியர்கள், ஆக்கிரமிப்பாளர்கள், துரோகிகள், நாட்டுப் பற்றும் விசுவாசமும் இல்லாதவர்கள், பாகிஸ்தான் உளவாளிகள்; அனைவரையும் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும்; இரண்டாந்தரக் குடிகளாகவே, இந்துத்துவத்தை ஏற்றுக் கொண்டாலே இந்த நாட்டில் வாழவிட வேண்டும். இல்லையானால் இட்லரின் நாஜிக்கள் யூதர்களை வேட்டையாடியதைப்போல கொன்றொழிக்க வேண்டும்; மொகலாய ஆக்கிரமிப்பாளர்களால் இந்துக்களுக்கு ஏற்பட்ட அவமானங்களுக்குப் பழிதீர்த்தாக வேண்டும்; இந்துவே இந்தியா; இந்தியாவே இந்துதான்'' என்கிறார்கள் இந்துத்துவ பாசிஸ்டுகள். இதற்கு எதிராக எவ்வித சமரசமும் இல்லாமல் போராடி வருபவர்கள் பொதுவுடமைப் புரட்சியாளர்கள்தாம். இப்போது சொல்லுங்கள், எமது நிலைப்பாடு இந்துத்துவ பாசிஸ்டுகளுடன் ஒத்துப் போவதா? எவ்வித விமர்சனமும் இல்லாமல் இசுலாமை ஏற்றுக் கொண்டால்தான் எமது மதச்சார்பின்மையை ஏற்பீர்களா?

படிப்பகம்

www.padippakam.com

# காஷ்மீரில் ராணுவத்தின் பழிவெறி – அழிவுப்போர்

வசந்தகால காஷ்மீரின் அழகை தால் ஏரி மேலும் அழகூட்டிக் கொண்டிருந்த ஏப்ரல் மாதம். வெள்ளிப் பனி உருகி ஜீலம் நதி அமைதியாக நடைபயின்று கொண்டிருந்தது. அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு திடீரென துப்பாக்கிகள் முழங்கும் பேரொலி. போராளிகளுக்கும் இந்திய ராணுவத்துக்கும் இடையே வழக்கமாக நடக்கும் மோதலாக இருக்கும் என்று காஷ்மீரிகள் கருதியதற்கு மாறாக, இப்போது காஷ்மீரி போலீசார் இந்திய ராணுவத்துக்கு எதிராக கலகக்கொடி உயர்த்தி போர்க்கோலம் பூண்டார்கள். ''இந்திய அரசு பயங்கரவாதம் ஒழிக! கொலைகார ராணுவமே காஷ்மீரை விட்டு வெளியேறு!'' என்ற முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன. சக ஊழியர் ஒருவர் ராணுவப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதை அறிந்து கிளர்ந்தெழுந்த ஆயுதப் படை போலீசாரின் போராட்டம் காஷ்மீரின் அரசு நிர்வாகத்தையே செயலிழக்கச் செய்தது. அதோடு காஷ்மீரில் இந்திய அரசு பயங்கரவாதிகள் நடத்திவரும் அட்டூழியங்களையும் திரைகிழித்துக் காட்டிவிட்டது.

ஏப்ரல் 21-ம் நாள். துணை ராணுவப் படையான எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) ஹசரத்பாலிலுள்ள டோபிமொகல்லா பகுதியில் போராளிகளைப் பிடிக்கத் தேடுதல் வேட்டை நடத்தியது. இப் பகுதி முழுவதையும் சுற்றி வளைத்து வேட்டையாடிய போதிலும் போராளிகள் யாரையும் பிடிக்க முடியவில்லை. அந்த ஆத்திரத்தில் ஆசார்-இ-ஷாரீப் மசூதிக்கு அருகிலுள்ள வீடுகளிலுள்ள அப்பாவிகள் சிலரை ராணுவப் படையினர் கைது செய்து இழுத்துச் சென்றனர். அவர்களில் ஒருவர் ரியாஸ் அஹமது கனி. அவர் காஷ்மீர் ஆயுதப் போலீசுக்காரர். உடல்நலக் குறைவு காரணமாக விடுப்பிலிருந்த அவரை ராணுவத்தினர் கைது செய்தபோது, தனது அடையாள அட்டையைக் காட்டி அவர் விளக்கினார். ஆனால் இவ்வேட்டைக்குத் தலைமையேற்ற முதுநிலைக் கண்காணிப்பாளரான ராஜேந்திரன், அவரது விளக்கத்தை ஏற்க மறுத்து வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றார். அடுத்த நாள் காலை அஹமது கனி குண்டுக் காயங்களுடன் பிணமாகக் கிடந்தார்.

### போலீசாரின் போர்க்கோலம்

பாடமாலூவிலுள்ள போலீசு கட்டுப்பாட்டு அறைக்கு அவரது பிணம் கொண்டு வரப்பட்டதும் ஆயுதப்படை போலீசார் கொதித்தெழுந்தார்கள். துப்பாக்கிகளுடன் எல்லைப் பாதுகாப்புப் படை முகாமை முற்றுகையிட்டு, தாறுமாறாகச் சுட்டும், கண்காணிப்பாளர் அலுவலகத்தைக் கல்லெறிந்து தாக்கியும் தமது வெறுப்பை வெளிப்படுத்தினார்கள். அஹமது கனி கொல்லப்பட்ட செய்தி பரவியதும் மாநிலத்தின் ஒட்டு மொத்த ஆயுதப் பிரிவு போலீசார் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். சோன்வாரிலுள்ள ஐ.நா. ராணுவப் பார்வையாளர் அலுவலகத்தை நோக்கி துப்பாக்கி ஏந்தியபடி முழக்கமிட்டுக் கொண்டு ஊர்வலமாகச் சென்ற போலீசார், ஐ.நா. மன்றத்தின் மேற்பார்வையில் தமது சக ஊழியரின் கொலையை விசாரணை நடத்தக் கோரினர். ஐ.நா. பார்வையாளரிடம் அளித்த மனுவில், கண்காணிப்பாளர் ராஜேந்திரன் மீது கொலை வழக்கு தொடரப்பட வேண்டும்; அவரை வேலையிலிருந்து உடனடியாக நீக்க வேண்டும்; ஈராண்டுகளுக்கு முன்பு தடை செய்யப்பட்ட போலீசு சங்கம் மீண்டும் செயல்பட சட்டபூர்வ அனுமதியளிக்க வேண்டும்; தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் என்று அபாண்டமாக முத்திரை குத்தி வேலை நீக்கம் செய்யப்பட்ட போலீசாரை மீண்டும் வேலையில் அமர்த்த வேண்டும் என்றும் கோரினர்.

அஹமது கனியின் 'மர்மமான' சாவு குறித்து போலீசும் ராணுவமும் கூட்டு விசாரணை நடத்துவது, மாண்டுபோன கனியின் குடும்பத்தாருக்கு 1.25 லட்ச ரூபாய் நிவாரணமளிப்பது என்கிற திட்டத்துடன் போலீசாரின் போராட்டத்தைத் தணிக்க காஷ்மீர் அரசு நிர்வாகம் பெருமுயற்சி செய்தது. ஆனால், ஆயுதப் பிரிவு போலீசாருக்கு ஆதரவாக காஷ்மீரி (சாதாரண) போலீசாரும், இன்ஸ்பெக்டர்களும், துணை கண்காணிப்பாளர்களும் போராட்டத்தில் இறங்கியதும் அரசு பயங்கரவாதிகள் பீதியில் உறைந்து போனார்கள். இதோடு போராளி இயக்கங்களில் ஒன்றான ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி, போலீசாரின் நியாயமான போராட்டத்தை ஆதரித்து மக்களைத் திரட்டி மாபெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

> லால் சௌக்கில், ராணுவக் கும்பல் தனது வெறி அடங்கும் வரையில் 2 மணி நேரத்துக்கும் மேலாக மக்களின் மீதும், வீடுகள் - கடைகள் மீதும் கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தியது; போஸ்னியாவில் செர்பிய இனவெறிக் கும்பலின் அட்டூழியத்தையும் விஞ்சுமளவுக்கிருந்தது.

ஏறத்தாழ 35,000 பேரைக் கொண்ட காஷ்மீர் போலீசாரின் இப் போராட்டத்தை வழிநடத்திய கூட்டுப் போராட்டக் கமிட்டியினர், எங்களது கோரிக்கைகளை ஏற்காத வரை அரசுடன் எவ்வித பேச்சுவார்த்தையும் நடத்த முடியாது என்று உறுதியாக நின்றனர். போலீசாரோ பொதுமக்களோ - அப்பாவிகள் யாரேனும் ராணுவத்தினரால் இனிமேல் கொல்லப்பட்டால் பழிக்குப் பழி வாங்குவோம் என்று எச்சரித்தனர். போலீசு வாகனங்களிலேயே துப்பாக்கி ஏந்தியபடி ஸ்ரீநகரின் வீதிகளில் போலீசார் எழுச்சிமிகு ஊர்வலத்தையும் நடத்தினர்.

விடுப்பில் வெளியூர் சென்றிருந்த போலீசுத் தலைமை இயக்குனர் ஏப்ரல் 27-ந் தேதி பணிக்குத் திரும்பியதும் போலீசாரின் போராட்டம் மேலும் தீவிரமடைந்தது. துணை ராணுவப் படையான மத்திய ரிசர்வ் போலீசுப் படையின் பாதுகாப்பில், அவர் வெளியே வராமல் பதுங்கிக் கொண்டார். போராடும் போலீசாரோ போலீசு கட்டுப்பாட்டு அறையை தமது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தனர். தமது கோரிக்கைகளை ஏற்காதவரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று வானை நோக்கிச் சுட்டு எச்சரித்தனர். போராட்டத்தைக் கைவிடாவிட்டால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்ற அரசின் மிரட்டலைத் துச்சமாக மதித்தனர்.

போலீசாரின் போராட்டம் ஒருவார காலமாக நீடிப்பதைக் கண்டு பீதியடைந்த மத்திய உள்துறை பாதுகாப்பு அமைச்சரான ராஜேஷ் பைலட் காஷ்மீருக்குப் பறந்து சென்றார். ஆனால் அவருடன் போலீசு தலைவர்கள் எவரும் பேச்சு வார்த்தை நடத்த முன்வரவில்லை. நிலைமை கைமீறிப் போய்விட்டதை உணர்ந்த ஆட்சியாளர்கள், ராணுவத்தை ஏவி தாக்குதல் நடத்தத் திட்டமிட்டனர். ஏப்ரல் 27-ந் தேதி மாலையிலிருந்தே எல்லைப் பாதுகாப்புப் படையும், மத்திய ரிசர்வ் போலீசுப் படையும் போலீசு கட்டுப்பாட்டு அறையைச் சுற்றி குவிக்கப்பட்டன. ஏவுகணை தாங்கிய நவீன துப்பாக்கிகளுடன் போராடும் போலீசாரைக் குறிவைத்து துணை ராணுவப் படைகள் நின்றன. நள்ளிரவில் குண்டு துளைக்காத கோட்டு அணிந்த 300 பேர் கொண்ட அதிரடிப் படையினர் திடீரென தாக்குதல் நடத்தி, போராடும் போலீசாரை நிராயுதபாணிகளாக்கிக் கைது செய்தனர். ஆயுதப் படை போலீசு கண்காணிப்பாளர் உட்பட 150 போலீசாரை தற்காலிக வேலை நீக்கம் செய்தும், மற்றவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தும் காஷ்மீர் அரசு பழிவாங்கியது.

''தேவையற்ற உயிர்ச் சேதத்தைத் தவிர்க்கவே நாங்கள் பின் வாங்கியுள்ளோம். எங்களது கோரிக்கையை நாங்கள் கைவிட வில்லை. மீண்டும் அடுத்தகட்ட போராட்டத்தைத் தொடர்வோம்'' என்று போராடும் போலீசார் கூறுகின்றனர். அரசு பயங்கரவாதத்துக்கு எதிரான போலீசாரின் போராட்டம் தற்காலிகமாகப் பின்வாங்கியுள்ள போதிலும் இன்னமும் அது நீறுபூத்த நெருப்பாகவே உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

இந்திய ராணுவத்தின் பயங்கரவாதப் படுகொலைகளுக்கு எதிராக காஷ்மீர் போலீசாரின் . போராட்டம் இப்போது முதன்முறையாக நடப்பது அல்ல. இதற்கு முன்பு 1989, 90, 91-ம் ஆண்டுகளில் கலகங்களும் எழுச்சிகளும் நடந்துள்ளன. இப்போராட்டங்களில் பங்கேற்றதற்காகவும், போராளிகளுடன் தொடர்புடையவர்கள் என்று குற்றம் சாட்டியும் இதுவரை 800-க்கும் மேற்பட்ட போலீசார் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். போலீசுத் துறை மட்டுமின்றி, அரசு ஊழியர்கள் பலரும் இவ்வாறு வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். கடந்த மூன்று மாதங்களாகவே காஷ்மீர் கொந்தளிப்பாக உள்ளது. சுயநிர்ணய உரிமைக்கான காஷ்மீரிகளின் போராட்டமும், அதற்கெதிராக இந்திய அரசு பயங்கரவாத ராணுவத்தின் அட்டூழியங்களும் படுகொலைகளும் தீவிரமடைந்து காஷ்மீர் மாநிலமே உள்நாட்டுப் போர் நிலைமையில் உள்ளது. காஷ்மீரில் தொடரும் சமீபத்திய கொலைவெறியாட்டங்கள் இந்திய அரசின் பயங்கரவாத காட்டுமிராண்டித்தனத்தை உலகுக்கு தெளிவாகவே படம் பிடித்துக் காட்டியுள்ளது.

## இந்திய ராணுவத்தின் பயங்கரவாத 'மர்ம'க் கொலைகள்

டாக்டர் கூரூ சௌராவிலுள்ள மருத்துவ விஞ்ஞானக் கல்லூரியில் பணியாற்றிய புகழ் பெற்ற இதய அறுவை சிகிச்சை மருத்துவர். காஷ்மீர் விடுதலையின்பால் மாளாக் காதல் கொண்ட அவர் தன்னை காஷ்மீர் விடுதலை முன்னணியுடன் இணைத்துக் கொண்டு செயலாற்றி வந்தார். தேசிய முன்னணி ஆட்சியின்போது மத்திய உள்துறை அமைச்சர் முப்தி முகமது சையத்தின் மகள் போராளிகளால் கடத்தப்பட்டபோது, போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திப் பிணைக் கைதியை மீட்கப் பாடுபட்டவர். காஷ்மீர் மருத்துவர்கள் சங்கத்திலும், மனித உரிமைக்கான சங்கத்திலும் அவர் ஊக்கமான செயல்வீரராகத் திகழ்ந்தார். அவரது செயல்பாடுகளைக் கண்டஞ்சிய இந்திய அரசு 1991-ல் அவரை 6 மாதங்கள் சிறையிலடைத்தது.

காஷ்மீர் மக்களின் செல்வாக்கு மிக்க பிரமுகராகத் திகழ்ந்த டாக்டர் கூரூ ஏப்ரல் முதல் நாளன்று மருத்துவக் கல்லூரி அருகே குண்டுக் காயங்களுடன் பிணமாகக் கிடந்தார். டாக்டர் கூரூ கொல்லப்பட்ட செய்தி பரவியதும் காஷ்மீர் மாநிலமே கொதித்தெழுந்தது. தலைநகரில் ராணுவ முகாம்கள் மீது மக்கள் கல்லெறிந்து தமது ஆத்திரத்தை வெளிப்படுத்தினர். அவரது இறுதி ஊர்வலத்தின் போது ராணுவ வாகனங்கள் தாக்கப்பட்டன. ஆத்திரமடைந்த துணை ராணுவப் படைகள் சவ ஊர்வலத்தின் மீதே கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தியது. அதில் டாக்டர் கூருவின் மைத்துனர் அஷீக் உசைன் கொல்லப்பட்டார். 50-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

டாக்டர் கூருவின் கொலையையும், சவ ஊர்வலத்தின் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டையும் கண்டித்து ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணி விடுத்த அறைகூவலின்படி இரு நாட்களுக்கு கடையடைப்புப் போராட்டத்தை காஷ்மீரி மக்கள் நடத்தினர். சௌரா மருத்துவமனை மற்றும் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள், மருத்துவர்கள், ஊழியர்கள் அனைவரும் ஏப்ரல் 3-ம் தேதியன்று மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். கொலையாளிகளைக் கைது செய்யாதவரை வேலைக்குத் திரும்பப் போவதில்லை என்று காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர். ஆனாலும் இன்றுவரை கொலைகாரர்கள் கைது செய்யப்படவில்லை.

''காஷ்மீரில் தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை பற்றி இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த டாக்டர் கூரூ தீர்மானித்தார். இதனால் ஆத்திரமடைந்த போராளிக் குழுக்கள் அவரை மார்ச் 31-ந் தேதியன்று கடத்திச் சென்று சுட்டுக் கொன்றுவிட்டு பிணத்தை வீசியெறிந்துவிட்டுச் சென்றுள்ளனர்.'' என்று இந்திய அரசு கூசாமல் புளுகியது. ஆனால் டாக்டர் கூரூ அவ்வாறு எந்தவொரு பேச்சுவார்த்தைக்கோ, துரோக உடன்பாட்டிற்கோ ஒரு போதும் உடன்பட்டதில்லை. போராளி குழுக்கள் மட்டுமின்றி, காங்கிரசின் எதிர்க் கட்சியான தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர்களும் ''இது இந்திய அரசின் கோழைத்தனமான செயல்'' என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

டாக்டர் கூருவின் படுகொலைக்கு 40 நாட்கள் முன்பாக, ஸ்ரீநகரிலுள்ள எலும்பு முறிவு மருத்துவமனையின் தலைமை மருத்துவரான டாக்டர் பரூக் அஹமது அசாய் துணை ராணுவப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். தனது குடும்பத்துடன் அவர் காரில் சென்று கொண்டிருந்த போது, நாடிபோரா அருகே ராணுவத்தினர் மறைந்திருந்து அவரை சுட்டுக் கொன்றுவிட்டு, போராளி குழுக்கள் சுட்டதாக வழக்கம் போலவே புளுகினர்.



அரசு பயங்கரவாதத் தீயில் எரிந்து சுடுகாடாகிக் கிடக்கும் லால் சௌக் பகுதி.

## அகதிகளாக தப்பியோடும் மருத்துவர்கள்

அடுத்தடுத்து நடந்த இப்படுகொலைகளைக் கண்டு அதிர்ச்சி அடைந்த மருத்துவர்கள், இப்போது காஷ்மீரை விட்டே வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். கடந்த ஒருமாத காலத்திற்குள் 100-க்கும் மேற்பட்ட மருத்துவர்களும் மருத்துவப் பணியாளர்களும் காஷ்மீரிலிருந்து வெளியேறி டெல்லி, பம்பாய் முதலான பெரு நகரங்களில் குடியேறியுள்ளனர். ''இதற்கு முன்பு போராளிகளும் அப்பாவி பொது மக்களும்தான் கொல்லப்பட்டார்கள். இப்போது மருத்துவர்கள்கூட கொல்லப்படுகிறார்கள். காஷ்மீரில் இன்று யாருடைய உயிருக்கும் பாதுகாப்பு இல்லை. எனவேதான் சொந்த மண்ணை விட்டு அகதிகளைப் போல இங்கு வந்துள்ளோம்'' என்று வேதனையோடு அவர்கள் கூறுகிறார்கள்.

காஷ்மீரில் இந்து - முஸ்லீம் கலவரம் மூளும் அபாயம் உள்ளதாகப் பீதியூட்டி, இந்துக்களை அகதிகளாக வெளியேற்றிவிட்டு அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டார் முன்னாள் கவர்னர் ஜக்மோகன். இன்று அரசு பயங்கரவாத அடக்குமுறை புதிய எல்லையைத் தொட்டுள்ள நிலையில், நூற்றுக்கணக்கான காஷ்மீரி முஸ்லீம்களோ தமது சொந்த மண்ணை விட்டு அகதிகளாக ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அண்மையில் சோபூரிலும் லால்சௌக்கிலும் நடந்த இனவெறி அட்டூழியங்களே போதும் — இந்திய அரசின் காட்டுமிராண்டித்தனத்தை நிரூபித்துக் காட்டுவதற்கு.

## ஐரோப்பாவுக்கு ஒரு போஸ்னியா இந்தியாவுக்கு ஒரு காஷ்மீர்

லால் சௌக் - ஸ்ரீநகரின் நுழைவாயில் என்று பெருமையாக அழைக்கப்படும் வர்த்தக மையப் பகுதி. அனைத்து அரசியல் இயக்கங்களின் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதி. இந்து

படிப்பகம்

www.padippakam.com



அரசு பயங்கரவாதப் படுகொலையை எதிர்த்து காஷ்மீர் போலீசாரின் போர்க்கோலம்.

வெறி பாசிசத் தலைவரான முரளி மனோகர் ஜோஷி தனது 'ஏக்தா'' யாத்திரையை முடித்து பாதுகாப்புப் படையினர் புடைசூழ இங்குதான் 'இந்திய தேசிய'க் கொடியை ஏற்றினார். காஷ்மீரின் இதயமான லால்செளக் பகுதி இன்று சுடுகாடாகக் காட்சியளிக்கிறது.

ஏப்ரல் 10-ம் நாள். போராளிகளைத் தேடுவது என்ற பெயரில் துணை ராணுவப் படைகள் லால் கௌக் பகுதியில் குவிக்கப்பட்டன. ஒரு கி.மீ.க்கு அப்பால் சாலைகள் மூடப்பட்டன. போராளிகள் தப்பிவிடாதிருக்க வீடுகள், கடைகளின் வெளிப்புற கதவுகள் ஆணியடித்து சீல் வைக்கப்பட்டன. சில வியாபாரிகளும் பொதுமக்களும் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கத் தொடங்கியதும், துணை ராணுவப் படைகள் முன்னெச்சரிக்கை ஏதுமின்றி காட்டுமிராண்டித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதே நாளில் ராணுவத்தின் கொட்டடிக் கொலைகளையும் அதிக்கிரமங்களையும் கண்டித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்த ஆயிரக்கணக்கில் காஷ்மீரி மக்கள் லால் செளக்கில் திரண்டிருந்தனர். இதனால் மேலும் ஆத்திரமடைந்த ராணுவக் கும்பல் தனது வெறி அடங்கும் வரையில் 2 மணி நேரத்துக்கும் மேலாக மக்களின் மீதும், வீடுகள், கடைகள் மீதும் கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தியது.

லால் செளக்கிலுள்ள பெரும்பாலான கடைகளும் வீடுகளும் மரத்தாலானவை. துப்பாக்கிச் சூடு நடந்த அடுத்த சில நிமிடங்களில் கடைகள் தீப்பற்றி எரியத் தொடங்கின. இதுவும் போதாதென்று, வீடுகள் - கடைகள் மீது ராணுவத்தினர் கையெறி குண்டுகளை வீசி தீயைப் பரவச் செய்தனர். தங்கள் வீடுகளில் தீ பரவியதும் மக்கள் அலறித் துடித்தார்கள். கதவுகள் ராணுவத்தினரால் தாளிடப்பட்ட நிலையில் வெளியே தப்பியோடவும் முடியவில்லை. கதவு - சன்னல்களை உடைத்து வெளியேறியவர்கள் மீதும் ராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியது. தீயில் வெந்து கதறியபடியே தப்பியோடிய பலரைச் கொன்று ஜீலம் நதியில் வீசியெறிந்தது.

லால் செளக்கில் தீ பரவிய செய்தியறிந்து அடுத்த ஒரு மணி நேரத்தில் தீயணைப்புப் படையினர் விரைந்து வந்தனர். ஆனால் ராணுவம் அவர்களை முன்னேற விடாமல் வழியிலேயே தடுத்து நிறுத்தியது. ராணுவத்தின் இரக்கமற்ற அரக்கத்தனத்தை எதிர்த்து தீயணைப்புப் படையினர் தடையை மீறிச் செல்ல முற்பட்ட போது, தீயணைப்பு வாகனங்களின் மீது குண்டு மழை பொழிந்து ராணுவம் அதை நிலைகுலையச் செய்தது. தீயணைப்புப் படையினரை மிருகத்தனமாகத் தாக்கி விரட்டியடித்தது. இதேபோல ஆம்புலன்ஸ் வானங்களும் தாக்கப்பட்டன.

**இன்று அரசு பயங்கரவாத அடக்குமுறை புதிய எல்லையைத் தொட்டுள்ள நிலையில், நூற்றுக்கணக்கான காஷ்மீரி முஸ்லீம்களே அகதிகளாக வெளியேறுகிறார்கள்.**

அரசு பயங்கரவாதத் தீ கொழுந்து விட்டு எரிந்தது. இரண்டு சதுர கி.மீ. பரப்பளவுக்கு லால் செளக் பகுதி முற்றாக எரிந்து சாம்பலானது. அதன் பிறகே ராணுவம் அப்பகுதியை விட்டு வெளியேறியது. தீயில் சிக்கி மாண்டவர்களின் சடலங்களைக்கூட மீட்க முடியவில்லை. ராணுவப் படைகள் வெளியேறிய பிறகு தீயணைப்புப் படையினர் 24 மணி நேரம் போராடிய பிறகே தீயை அணைக்க முடிந்தது. தீயில் சிக்கி மாண்டவர்கள், துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்கள், ஜீலம் நதியில் மூழ்கடிக்கப்பட்டவர்கள் என மொத்தம் 70 பேருக்கு மேல் கொல்லப்பட்டிருக்கலாம் என்று பத்திரிகைகள் கூறுகின்றன. பத்திரிகையாளர்கள் கூட இக்கொடூரம் நடந்த 24 மணி நேரத்துக்குப் பின்னரே லால் செளக் பகுதியில் நுழைய அனுமதிக்கப்பட்டனர்.

ஐரோப்பாவிலுள்ள யூகோஸ்லாவியாவில் போஸ்னிய முஸ்லீம்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை நடத்தி வரும் செர்பிய இனவெறியர்கள் கூட இப்படியொரு அட்டூழியத்தைச் செய்திருப்பார்களா என்பது சந்தேகம்தான்! எல்லைப் பாதுகாப்புப் படையினர் லால் செளக் பகுதியிலுள்ள இந்துக்களின் சனாதன தர்ம கட்டிடத்தில் நீண்டகாலமாக முகாமிட்டிருந்தனர். தீ வைப்புச் சம்பவத்துக்கு முன்தினம் தான் அவர்கள் அங்கிருந்து காலி செய்தனர். அக்கட்டிடத்திலும் சுற்றுப்புற கடைகளிலும் வெடிகுண்டுகளைப் பதுக்கி வைத்துவிட்டு திட்டமிட்டே தீமூட்டி இப்பேரழிவை நடத்தியுள்ளனர் என்று லால்செளக் பகுதிவாழ் மக்கள் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

''இங்கே சிந்திய ரத்தத்தை நாங்கள் டெல்லிக்கும், ஏன், இந்தியா முழுவதும் எடுத்துச் சென்று காட்டுவோம்'' என்று உணர்ச்சி பொங்க கூறுகிறார் ஒரு இளைஞர். ''அரசு பயங்கரவாத அட்டூழியங்களின் மூலம் காஷ்மீரை ஒருபோதும் இந்தியாவுடன் இணைத்துவிட முடியாது; எங்கள் தலைவிதியை நாங்களே தீர்மானித்துக் கொள்வோம்'' என்கிறார் இத் தீ விபத்தில் படுகாய மடைந்த முக்தார் என்ற மாணவர். காஷ்மீரிலுள்ள காங்கிரசுப் பெருச்சாளிகளே இக்கொடுஞ்செயலை நியாயப்படுத்த முடியாமல், ''காட்டுமிராண்டித்தனத்தின் உச்சகட்டம்'' என்று சாடுகின்றனர்.

போராளிகளைத் தேடுவது என்ற பெயரில் ஒரு பகுதியை சுற்றி வளைத்து, துப்பாக்கிச் சூடு நடத்தி அப்பகுதியையே தீ வைத்து சுடுகாடாக்குவது என்பதை அரசு பயங்கரவாதிகள் அண்மைக்காலமாக தமது புதிய உத்தியாக வகுத்துக் கொண்டுள்ளனர். கடந்த ஜனவரி மாத மத்தியில் லால் செளக்கைப் போலவே சோபூரின் வர்த்தக - குடியிருப்புப் பகுதிகளையும் துணை ராணுவப் படைகள் தீ வைத்துக் கொளுத்தியுள்ளன. தீவிரவாதிகளுடன் நடத்திய துப்பாக்கிச் சண்டையின்போது இடையில் சிக்கி மாண்டதாகப் புளுகி, 50-க்கும் மேற்பட்ட அப்பாவி மக்களை

படிப்பகம்

www.padippakam.com

டுக் கொன்றன. லால்
ளக்கில் நடந்தது
பாலவே, சோபூரிலும் தீய
ணப்புப் படையினரைத்
டுத்துள்ளன. இந்த அள
க்கு பெருஞ்சேதம் இல்லாத
பாதிலும், குப்வாரா, பார
ல்லா மாவட்டங்களிலும்
தேபோன்ற தீ வைப்புக்
காடுமைகள் நடந்துள்ளன.

### மக்களிடமிருந்து னிமைப்பட்டிருப்பது யார்?

இந்திய ராணுவ அட்டூ
யங்களைப் பற்றி செய்தி
் மெதுவாகக் கசியத்
தாடங்கியதும், ''எல்லாம்
கைப்படுத்தப்பட்ட செய்தி
், நாளொன்றுக்கு 14 மணி
ரம் குளிரிலும் பனியிலும்
மது
யிரைப் பணயம் வைத்துப்
பாராடும் நமது ராணுவத்
தயே இது அவமதிப்பதா
ம். அதேசமயம் தவறி
ழத்த படைவீரர்கள் மீது
ங்கள் நடவடிக்கை எடுத்து
ருகிறோம்'' என்று கொக்க
கிறார் காஷ்மீரின் புதிய
வர்னர் கிருஷ்ணாராவ்.
காஷ்மீரில் அமைதியை
லைநாட்டி தேர்தல் நடத்து
தற்கான சூழ்நிலைக்காக
ங்கள் எடுக்கும் முயற்சியை தீவிரவாதி
் தகர்க்கிறார்கள். ராணுவத்தின் மீது
ண்பழி சுமத்தி அவதூறு செய்கிறார்கள்''
ன்று புலம்புகிறார் மத்திய உள்துறை
ணை அமைச்சரான ராஜேஷ் பைலட்.

ஆனால் இது எவ்வளவு பெரிய
பாய் என்பதை டாக்டர் கூருவின் படுகொ
லயும், அவரது சவ ஊர்வலத்திற்கு
5,000-க்கும் மேலாக மக்கள் திரண்டு நடத்
ய ஆர்ப்பாட்டமும் நிரூபித்துக் காட்டு
ன்றன. உண்மையில் இந்திய அரசு பயங்க
வாதிகளும், ஓட்டுக்கட்சி துரோகிகளும்
ன் மக்களிடமிருந்து முற்றாக தனிமைப்
ட்டுப் போயுள்ளனர். இந்திய 'தேசிய'
ட்டுக் கட்சிகள் அனைத்தும் காஷ்மீரிகளி
ம் செல்வாக்கிழந்து சீண்டுவாரின்றிக்
டக்கின்றன. 'காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்

துல்லாவின் குடும்ப வாரிசுக் கட்சியான தேசிய மாநாட்டுக் கட்சியோ தனது துரோகத்தனத்தால் அம்பலப்பட்டு தனிமைப்பட்டுக் கிடக்கிறது. மக்களிடம் மீண்டும் காலூன்றும் நோக்கத்தோடு காங்கிரசுடன் இனிமேல் கூட்டுச் சேரவே மாட்டோம் என்று பாவமன்னிப்புக் கோருகிறது.

மறுபுறம், இந்திய அரசின் கபட வேடம் உலகம் முழுவதும் அம்பலப்பட்டுப் போயுள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த ''ஆசிய கவனிப்பு'' என்கிற மனித உரிமைக் குழுவினர் அண்மையில் வெளியிட்டுள்ள **''காஷ்மீரில் கற்பழிப்புகள்: ஒரு போர் குற்றம்''** என்ற அறிக்கையில், 1992-ம் ஆண்டில் இந்திய ராணுவத்தின் பாலியல் வன்முறைகளை அம்பலப்படுத்திக் காட்டியுள்ளனர். இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு, காஷ்மீரில் தொடரும் பயங்கரவாதப் படுகொலைகளைக் கண்டித்துள்ளதோடு, ஐ.நா. மன்றத்திலும் இப் பிரச்சினையை எழுப்பப் போவதாக எச்சரித்துள்ளன. எனவேதான் மத்திய உள்துறை இணை அமைச்சரான ராஜேஷ் பைலட் தீவிரவாதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி அமைதியை நிலைநாட்டி காஷ்மீரில் தேர்தல் நடத்தப் போவதாகச் சவடால் அடித்தார். அதேசமயம் உள்துறை அமைச்சர் தேர்தல் நடத்துவற்தகான சூழ்நிலையே இல்லை என்கிறார்.



**அரசு பயங்கரவாத வெறியாட்டத்துக்கு தமது உறவினர்களைப் பறிகொடுத்த காஷ்மீரி பெண்களின் ஆர்ப்பாட்டம்.**

### சுயநிர்ணய உரிமையே ஒரே தீர்வு

காஷ்மீர் பிரச்சினையின் அடிப்படைக் கொள்கையில் இந்திய அரசு மற்றும் அரசியல் தலைவர்களிடையே வேறுபாடுகள் எதுவும் இல்லை. அணுகுமுறையில் மட்டுமே மாறுபடுகிறார்கள். இவர்களுடைய சூழ்ச்சிகள் எதற்குமே காஷ்மீரிகள் பலியாக மறுக்கின்றனர். தொடரும் அரசு பயங்கரவாத வெறியாட்டத்தால் காஷ்மீரிகளின் பொருளாதாரமும் வாழ்வும் சின்னாபின்னமாகிக் கிடக்கிறது. பள்ளி - கல்லூரிகள், வங்கி - வர்த்தக நிலையங்கள், முக்கியத் தொழிலான சுற்றுலா அனைத்துமே முடங்கிவிட்டன. இந்த நிலைமைகள் இருந்த போதிலும் எங்குமே மதக் கலவரங்கள் கிடையாது. ஈராண்டுகளுக்கு முன்பு காஷ்மீரைவிட்டு அகதிகளாக வெளியேறி
விட்ட இந்துக்களின் சொத்துக்களில் ஒரு துரும்பைக்கூட யாரும் தொடவேயில்லை. அரசு பயங்கரவாதத்துக்கு எதிரான சுயநிர்ணய உரிமைப் போரில் மக்களின் உறுதி குலையவுமில்லை.

இந்நிலையில், அரசு பயங்கரவாத்தை மேலும் தீவிரமாக்கியோ, மதவெறி - தேசிய வெறியூட்டி பாகிஸ்தான் மீது போர் தொடுத்தோ, துரோகிகளுக்கு விலை பேசி போலித் தேர்தல் நடத்தி பொம்மை அரசை நிறுவியோ காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க முயலும் இந்திய அரசின் முயற்சிகள் ஒருபோதும் வெற்றி பெறாது. அதே போல ஹிஸ்புல், அல்லா புலிகள் முதலான விசுவாச போராளிக் குழுக்களை ஏவி நாச வேலைகளின் மூலம் காஷ்மீரைத் துண்டாடி தன்னுடன் இணைத்துக் கொள்ள பாகிஸ்தான் செய்யும் முயற்சியும் பலிக்காது. இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுமே தாம் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள பகுதிகளிலிருந்து வெளியேறிவிட வேண்டும். காஷ்மீர் மக்கள் தமது எதிர்காலத் தகுதியைத் தீர்மானித்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அமுலாக்க வேண்டும்.

**O குமார்**

**இந்திய ராணுவத்தின் மர்மக்கொலை: டாக்டர் கூருவின் இறுதி ஊர்வலம்.**



படிப்பகம்

www.padippakam.com

# இடைத்தேர்தல் கூத்து சேஷனின் அதிகாரத்திமிர்

ராணிப்பேட்டை, பழநி தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் மீண்டும் ஒரு முறை அறிவிக்கப்பட்டு தள்ளிவைக்கப்பட்டு விட்டது. இத் தேர்தல் அறிவிப்பு வந்ததுமே தமிழக அரசியல் கட்சிகள் அனைத்தும் தயாரிப்புகளில் குதித்தாலும் காங்கிரசை தவிர ஏனைய கட்சிகளிடம் தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம் இருக்கவே செய்தது. காங். கட்சி தனது வேட்பாளரை கடைசி நேரம் வரை அறிவிக்காமல் இருந்தது இந்த சந்தேகத்தை வலுப்படுத்தியது. இறுதியில் இரண்டு தேர்தல்களும் தள்ளிவைக்கப்பட்டாலும் அதற்காக கூறப்பட்ட காரணங்கள் அ.தி.மு.க. மற்றும் காங்கிரசின் முகத்திரையை கிழித்துக் காட்டுகின்றன.

ஜெயலலிதா, ராணிப்பேட்டை தொகுதிக்கு சென்று 503 கோடி ரூபாய்க்கு அரசு நலத்திட்டங்களை அறிவித்ததும், தென்னாற்காடு மாவட்டத்தைப் பிரித்து ராமசாமி படையாச்சி மாவட்டம் என பெயர் சூட்டியதும் தேர்தல் விதிமுறைக்கு முரணானது என்று கூறி கடந்த ஏப்.26-ந் தேதி ராணிப்பேட்டை தொகுதி தேர்தலை தேர்தல் கமிஷன் ரத்து செய்தது. இமாலய ஊழல்கள், கொடிய அடக்குமுறைகள், ஆடம்பர - ஊதாரி செலவுகள், விலையேற்றம் முதலியவற்றால் தமிழக மக்களிடமிருந்து தனிமைப்பட்டு கிடக்கும் ஜெயா கும்பலுக்கு தோல்வி பயம் பெருமளவிற்கு கவ்வியது.

எப்படியும் வெற்றியீட்ட வேண்டும் என்ற வெறியோடு தேர்தல் தயாரிப்புகளில் இறங்கினார், ஜெயா. அமைச்சர் பட்டாளங்களை தொகுதிகளில் குவித்து இலவச வேட்டி, பொருட்கள் வழங்கி ஓட்டு வேட்டையாடினார். அரசு துறை அதிகாரிக்ளை முடுக்கிவிட்டு சாலை, மின் விளக்கு, குடிநீர் குழாய் போடும் பணிகள் தொகுதிகளில் துரிதமாக நடத்தப்பட்டன. கள்ள ஓட்டு, அடிதடி, ஆள் கடத்தல் போன்ற தில்லுமுல்லுகளுக்கும் தயாரிப்பு வேலையும் நடந்தது. இவற்றில் ஒன்றுதான் 503 கோடிக்கு அரசு நலத் திட்டங்கள் அறிவிப்பும், குறிப்பாக வன்னியர்களை கவர்வதற்காக ராமசாமி படையாச்சி பெயரில் மாவட்ட பிரிப்பும் ஆகும். மற்ற எதிர்க் கட்சிகளும் ஜெயாவைப் போன்றே அனைத்து தயாரிப்புகளில் ஈடுபட்டாலும், ஜெயலலிதா கூடுதலாக அரசு அதிகாரத்தையும் பதவியையும் பயன்படுத்துவதைப் பொறுத்துக் கொள்ள முடியாததால் எதிர்ப்பு தெரிவித்தார்கள். காங்கிரசுக்கோ, பா.ம.க.-வுடன் கூட்டு வைத்து வன்னியர்கள் ஓட்டைப் பெற்று வெற்றியீட்டி விடலாம் என்று போட்ட கணக்கு பொய்த்துப் போனதால் வேட்பாளைரை அறிவிக்காமல் தேர்தலை தள்ளிவைக்க காரணத்தை தேடியது. ஜெயாவின் அதிகார முறைகேடுகள் சிறந்த வாய்ப்பாக அமையவே அதை பிரச்சினையாக்கி தமது மத்திய அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி சேஷனை (தலைமை தேர்தல் கமிஷனர்) பயன்படுத்தி தேர்தலை ரத்து செய்ய வைத்தது.

சாமி மனு மீதான வழக்கில் உயர்நீதி மன்றத்தின் தடை மூலம் சேஷனின் நேர்மையை கேள்விக்குள்ளாக்கி அவமானப்படுத்திய ஜெயாவை பழிவாங்க காத்திருந்த சேஷனுக்கும் இது நல்ல வாய்ப்பாக அமைந்தது. எனவே ஒரே கல்லில் இருவருக்கும் பலன் என்பதால் தேர்தல் ரத்துக்கான காரணத்தின் மூலம் ஜெயலலிதாவை சந்திக்கு இழுத்துவிட்டார்கள். தோல்வியோ, விமர்சனமோ, கீழ் நிலையோ எதையுமே ஏற்றுக் கொள்ள முடியாத தனது பாசிச குணத்தை வெறியோடு தலைகால் புரியாமல் நடைமுறைப்படுத்தினார், ஜெயலலிதா. ஆனாலும், தேர்தல் கமிஷனின் குற்றச்சாட்டுக்குப் பின் அவமானத்தால் ஜெயலலிதா கூனி குறுகிவிடவில்லை. பழநி தொகுதியில் அரசு துறைகளின் மூலம் சாலை போடுவது போன்ற பணிகளை துரிதப்படுத்தி மக்களின் ஓட்டைப் பிடுங்கவே மும்முரமாக செயல்பட்டார்.

காங்கிரசு, தேர்தல் வெற்றிக்காக அரசை - அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தாத புனிதக் கட்சியுமல்ல; சாதி, மத அடிப்படையில் சலுகைகள் மூலம் ஓட்டுப் பொறுக்காத முற்போக்கு கட்சியுமல்ல. ராணிப்பேட்டை தேர்தலை ரத்து செய்த இரண்டு நாள் கழித்து ஹரியானா மாநிலத்தின் கல்கா இடைத் தேர்தலையும் இதே காரணத்திற்காக ரத்து செய்தது தேர்தல் கமிஷன். ஹரியானா காங்கிரசு முதல்வர் பஜன்லாலின் மகன் சந்தர் மோகன் இத்தொகுதியில் போட்டியிட்டார். மகனின் வெற்றிக்காக பஜன்லால் அத்தொகுதிக்கு அரசு நலத் திட்டங்களை அறிவித்தது தேர்தல் விதிமுறைக்கு முரணானது என்று கூறியுள்ளது தேர்தல் கமிஷன். ராணிப்பேட்டை தேர்தல் ரத்து காரணத்திற்கு எதிராக ஜெயா தனது சகபாடிகள் மூலம் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளது போல் பஜன்லாலும் சுயேட்சை வேட்பாளர் ஒருவர் மூலம் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து இடைக்கால தடையும் வாங்கினார். தேர்தல் கமிஷன் இத்தடைக்கு எதிராக உச்சநீதி மன்றம் சென்று இன்று தடை வாங்கியுள்ளது.

மேலும், ராஜீவ் காந்தி ஆட்சியைப் பிடித்தபின் போட்டியிட்ட அமேதி தொகுதி தேர்தலில் அரசு எந்திரம் முழுக்கப் பயன்படுத்தப்பட்டதும், செய்யப்பட்ட அரசு சலுகைகளும் மிகுந்த சர்ச்சைக்குள்ளாகியதை நாடறியும். நரசிம்மராவும் பிரதமராகிய பின் போட்டியிட்ட நந்தியால் தொகுதியிலும் அரசு துறையும், அதிகாரிகளும் தேர்தல் பணிக்கு பயன்படுத்தியது பத்திரிகைகளில் நாறியது.

சாதி, மத அடிப்படையில் உணர்வைத் தூண்டிவிட்டு பிழைப்பு நடத்துவதுதான் காங்கிரசின் பாரம்பரியமே. இந்துக்களின் ஓட்டை கவர்வதற்காக, இந்து வெறியர்கள் தூண்டிவிடும் புதிய புதிய இந்துமத விழாக்களையெல்லாம் அங்கீகரித்து வளர்த்துவிட்டதும், பார்ப்பனீய விழாக்களுக்கும் தேசிய அந்தஸ்து கொடுத்து அரசு விடுமுறைகள் அறிவித்ததும் இக்காங்கிரசு ஆட்சிதானே? பாபர் மசூதியை இடிப்பதற்கு துணை போனதற்கும் திடீர் ராமர் கோயிலுக்கு மேலும் மேலும் சலுகைகள் செய்வதும் இந்துக்கள் ஓட்டை கருதித்தானே? கேரளா காங்கிரசின் நடவடிக்கை இதற்கு மேலும் ஒரு சான்று.

கேரளா - ஒட்டப்பாலம் தொகுதிக்கும் இம்முறை இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. ஒட்டப்பாலம் முஸ்லீம்கள் பெரும்பான்மையுள்ள தொகுதியாகையால், பாபர் மசூதி பிரச்சினையில் காங்கிரசின் துரோகம் காரணமாக முஸ்லீம்கள் ஓட்டு காங்கிரசுக்கு கிடைக்காது என்பது உறுதியானது. எனவே கிலியடைந்த காங்கிரசு, முஸ்லீம்களின் பாதுகாவலன் போல் பல சவடால்கள் அடித்ததோடு தொழுகைக்கு வசதியாக முஸ்லீம் நிர்வாகத்திலுள்ள பள்ளிக்கூடங்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் அரசு விடுமுறை விடுவதாக அறிவித்தது.

ஆனால், இக்காரணத்தைக் குறிப்பிட்டு இத்தொகுதி தேர்தல் தள்ளிவைக்கப்பட வில்லை; சட்டம் - ஒழுங்கு பிரச்சினையைக் காரணமாகக் கூறி தேர்தலை தள்ளிவைத்துள்ளது, தேர்தல் கமிஷன். உண்மையில் இத்தொகுதியிலும், பழநி நாடாளுமன்ற தொகுதியிலும் காங்கிரசு தோற்றுவிடும் நிலையறிந்தே தேர்தல் தள்ளிவைக்கப்பட்டது.

பழநி, ஒட்டபாலம் தொகுதி தேர்தல்கள் தள்ளிவைப்பை இந்திய அளவில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் எதிர்த்தன; கண்டித்து மாநிலங்களவையில் வெளிநடப்பும் செய்தன. ஜெயா கும்பலுக்கும் இத்தேர்தல் தள்ளிவைப்பால் மகிழ்ச்சிதான் என்றாலும், காங்கிரசை எதிர்ப்பதற்காக எதிர்த்து சவடாலடிக்கிறது. ''வறட்சி காரணமெல்லாம் பொய், காங்கிரசுக்கு தோல்வி பயம் வந்துவிட்டது'' என்று தம்மை மறந்து குதிக்


**தமிழக இடைத் தேர்தல்கள் தள்ளிவைக்கப்பட்டாலும் அதற்காக கூறப்பட்ட காரணங்கள் அ.தி.மு.க. மற்றும் காங்கிரசின் முகத்திரையை கிழித்துக் காட்டுகின்றன. காங்கிரசு, அ.தி.மு.க. இரண்டுக்கும் தோல்விபயம் இருந்தாலும் காங்கிரசை எதிர்ப்பதற்காகத்தான் அ.தி.மு.க. தேர்தல் தள்ளிவைப்பை எதிர்க்கிறது.**

படிப்பகம்

...றார்கள், ஜெயா துதிபாடிகள். வறட்சி காரணம் கூறி ஏற்கனவே பழநி தேர்தல் மூன்று ...றை தள்ளி வைக்கப்பட்டது. அப்பொ...து காங்கிரசுடன் கூட்டு இருந்ததாலும் ...மக்கும் ஆதாயம் இருந்ததாலும் ஜெயா ...ம்பல் முன்வாயையும் பின் வாயையும் ...ழுத்து மூடிக்கொண்டு நின்றது.

இடைத் தேர்தலை பொறுத்தவரை எப்...பாதும் மத்திய ஆட்சியாளர்கள் வைப்பது ...ன் சட்டமாக உள்ளது. தேர்தல் கமிஷன் ...யேட்சையானது என்பதெல்லாம் மத்திய ...ட்சியாளர்களின் விருப்பத்திற்கு உட்...ட்ட அர்த்தத்தில்தான் பொருள்கொள்ள ...வண்டும். ஆளுங்கட்சியின் வெற்றிக் ...ன வாய்ப்பு இருந்தாலே தேர்தல் நடத்தப் ...டுகிறது. தேர்தல் விதிமுறைக்கு முரணாக ...திகார முறைகேடுகள், இலவசப் பொருட் ...ா - விளம்பரம் மூலம் பணத்தை வாரியி...றைப்பது, கள்ள ஓட்டு - ஆள் கடத்தல் - ...டிதடி முதலான தில்லுமுல்லுகள் - கிரிமி...ல் செயல்கள் எல்லா தேர்தல்களிலும் ...தாரணமாக நடத்தப்படுகின்றன. மத்திய ...மாநில ஆளுங்கட்சிகள் ஒரே கட்சியா...வோ, கூட்டணி கட்சியாகவோ இருந்...ல் இவர்களுக்குள் பிரச்சினை எழுவ...ல்லை; கோஷ்டிபூசல்கள் அளவில் நின்று ...டுகிறது. எதர்க்கட்சிகளாக இருந்தால் தத் ...அதிகாரத்தைப் பயன்படுத்தி பலப்ப...ைசை செய்கிறார்கள்; அதிகார மோதலில் ...டிந்தவரை ஒருவரையொருவர் காலை ...ரிவிட்டு அம்பலப்படுத்திக் கொள்வது ...க்கிறது. காங்கிரசு, அ.தி.மு.க. நிலை ...த்தகையதே.

தேர்தல் கமிஷனின் அதிகாரம், ...லைமை தேர்தல் கமிஷனரிடமே உள்ளது. ...லைமை தேர்தல் கமிஷனரோ நியமன ...ழுப்பினராக இருப்பதால் பெரும்பாலும் ...ந்திய ஆளுங்கட்சியின் கைப்பாவையா...தான் இருக்கிறார்; இருக்க முடியும். அது ...ம் காங். விசுவாசியான சேஷன் இம்மி ...ம் பிசகாமல் தற்போது செயல்பட்டு வரு...றார். ஆனால் ஹரியானா காங். முதல்வர் ...ஜன்லால் அரசு மீது குற்றஞ்சாட்டி கல்கா ...டைத்தேர்தலை சேஷன் ரத்து செய்ததைக் ...காண்டும் திரிபுராவில் காங்கிரசின் ...டைக்கால அரசு, அரசை கேடாகப் பயன் ...டுத்தி தேர்தல் தயாரிப்பு செய்ததால் ...திர்க்கட்சிகளின் கோரிக்கைக்கு இணங்கி ...ன்பு திரிபுரா. தேர்தலை சேஷன் ரத்து ...ய்ததைக் கொண்டும் காங்கிரசுக்கும் ...ஷனுக்கும் மோதல் நிலவுவதாக கூச்சல் ...ாடுகிறார்கள். ஆனால், காங்கிரசிலுள்ள ...ாஷ்டி சண்டைகள், காங்கிரசின் சிறு...ன்மை ஆட்சி - உத்திரவாதமற்ற நிலை ...ான்றவற்றால் கிடைத்துள்ள வாய்ப்பை ...ன்படுத்தி சேஷன் தமது சுயேட்சை அதி...ரத்தை மேலான ஒன்றாக நிலைநாட்டிக் ...ாள்ள முனைகிறார் என்பதும் காங்கிர...ா கைக்கூலி என்று தனக்கு நிலவி வரும் ...வமானத்தைப் போக்கி தான் நடுநிலை...யாளனே என்று காட்டிக் கொள்ள ...னைகிறார் என்பதுமே உண்மை. மேலும் ...து காங்கிரசு விசுவாச ஊழிய நடவடிக்...களை மூடிமறைத்து ஏய்ப்பதற்கும் இத்த...ய காங்கிரசின் மீதான நடவடிக்கையை ...ன்படுத்திக் கொள்கிறார். மாநில காங்கி-



**காங்கிரசிலுள்ள கோஷ்டிச் சண்டைகள், காங்கிரசின் சிறுபான்மை ஆட்சி - உத்திரவாதமற்றநிலை போன்றவற்றால் கிடைத்துள்ள வாய்ப்பை பயன்படுத்தி சேஷன் தமது சுயேட்சை அதிகார ஆதிக்கத்தை நிலைநாட்ட முனைகிறார்.**

ரசில் தனிப்பெரும் செல்வாக்குடன் திகழும் பவார், பஜன்லால் போன்றவர்கள் 'கலகம்' புரிந்து தலைமைக்கு அச்சுறுத்தலாகவே இருப்பதால் அவர்களை மட்டம்தட்டி வைப்பது ராவ்வின் பதவிக்கு பாதுகாப்பு. எனவே, பஜன்லாலுக்கு இது ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும் என சேஷனின் நடவடிக்கையை கண்டுகொள்ளாதவர் போல் விட்டுள்ளார், ராவ்.

சேஷன் அப்பட்டமான ஒரு காங்கிரசு விசுவாசி என்றாலும் பார்ப்பனனாக இருப்பதால் அந்த விசுவாசத்தோடு பா.ஜ.க.வுடனும் உறவு கொண்டுள்ளார். பா.ஜ.க. தேர்தல் சின்னம் (தாமரை) தொடர்பாக எழுந்த பிரச்சினையிலும் பா.ஜ.க.விற்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியதும், இந்து மதவெறியைத் தூண்டி அரசியல் நடத்துவது தேர்தல் விதிமுறைக்கு முரணானது என்று பா.ஜ.க.வுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை கிடப்பில் போட்டதும் இந்த அடிப்படையிலேயே. காங்கிரசுக்கு எதிரான சேஷனின் தற்போதைய நடவடிக்கைக்கு, சேஷன் பா.ஜ.க. ஆதரவாளராக மாறிவருவதுதான் காரணம் என்று பத்திரிகைகள் கூறுகின்றன. இதில் பகுதியளவு உண்மை இருந்தாலும், சேஷனை காங்கிரசுக்கு எதிரானவராக சித்தரிப்பது அபத்தம். காங்கிரசு ஆட்சியிலிருக்கும் வரை காங்கிரசின் ஊழியனாக இருப்பதே சேஷனின் நடைமுறையாக இருக்கும்.


ஆளும் வர்க்க கும்பலுக்கிடையிலான வேறுபட்ட பிரிவின் சுயநலன்கள், அதிகார - பதவிவெறி மோதல்கள் இப்படி ஆளுங்கட்சிகளுக்கிடையேயும், ஆளுங்கட்சியின் கோஷ்டிகளுக்கிடையேயும்; சட்டமன்றம் - பாராளுமன்றம், கவர்னர் - ஜனாதிபதி, தேர்தல் கமிஷன், நீதித் துறை அமைப்புகளுக்கிடையேயும் மோதல்களாக வெளிப்படுகின்றன. இத்தகைய அமைப்புகளுக்குள்ள வரம்புக்குட்பட்ட அதிகாரங்களும் சிதறிக்கிடப்பதாலும், அமைப்பு விதிமுறைகள், சட்ட - திட்டங்களில் உள்ள கோளாறு - ஓட்டை காரணமாகவும் அதிகாரம் - பதவிகளில் உள்ள கிரிமினல்கள், குற்றவாளிகள் எளிதாக தப்பித்துக் கொள்வதுதான் நடக்கிறது.

''தேர்தலில் நடக்கும் தில்லுமுல்லுகள், வரம்புமீறி பணத்தை செலவு செய்வது தெரிந்திருந்தும் நடவடிக்கை எடுப்பதற்குரிய அதிகாரம் போதிய அளவு தேர்தல் கமிஷனுக்கு இல்லை'' என சேஷன் பேட்டிக் கொடுக்கிறார். தேர்தல் கமிஷனுக்கு இருக்கும் அதிகாரத்தைக் கூட நடைமுறைப்படுத்த முடியாத வண்ணம் தேர்தல் கமிஷனின் தேர்தல் ரத்து முடிவை எதிர்த்து அரசியல்வாதிகள் நீதிமன்றத்தில் தடை வாங்குகிறார்கள். தேர்தல் கமிஷனுக்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இல்லை என்று வழக்கு தொடுக்கிறார்கள். குற்றச்சாட்டுகளை தேர்தல் கமிஷனர் விசாரிப்பதற்கே தடை விதிக்கப்படுகிறது. தலைமை தேர்தல் கமிஷனரும் தமது விருப்பப்படி அல்லது ஒரு கும்பலின் நலனுக்காக தேர்தலை அறிவிப்பதும் சாக்குகூறி தள்ளி வைப்பதையும் எளிதாக செய்கிறார். இந்த வகையில் இவர்கள் எல்லோருமாக சேர்ந்து இந்த அமைப்பு முறையையும், இந்திய ஜனநாயகத்தையும் தோலுரித்துக் காட்டுகிறார்கள். தேர்தல் நடந்து மோசடிகள், தில்லுமுல்லுகள் அரங்கேறித்தான் இந்திய ஜனநாயகத்தின் முகம் கிழிபட வேண்டும் என்றில்லை; தேர்தல் நடக்காமலே வெறும் அறிவிப்பு, தள்ளிவைப்புகள் மூலமே கிழிந்து தொங்க முடியும் போலிருக்கிறது!

● ராசு

www.padippakam.com

★ கழிப்பிடங்களைச் சுத்தம் செய்யும் தொழிலாளர்களை வேறு வேலைகளில் அமர்த்துவது மற்றும் உலர் கழிப்பிடங்கள் கட்டுவதைத் தடை செய்யும் மசோதா நடப்பு பாராளுமன்றக் கூட்டத் தொடரில் நிறைவேறவுள்ளது. ஆயினும் இதுநாள் வரை இந்த இழிதொழிலை ஒழிக்க அரசு எடுத்து வருவதாகச் சொல்லப்படும் நடவடிக்கைகள் கேலிக் கூத்தாகவும், அத்தொழிலாளர்களை அதே இழிநிலையில் இருத்தி வைக்கும் மோசடித்தனமாகவும் தான் உள்ளன. வருடத்திற்கு 20 லட்சம் உலர் கழிப்பிடங்களை நவீனரக கழிப்பிடங்களாக மாற்றினால் தான் அரசின் திட்டமிடுதலின்படி எட்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்குள் இந்த இழிதொழிலை ஒழிக்க முடியும். ஆனால், அரசோ வருடத்திற்கு 1 லட்சம் உலர் கழிப்பிடங்களைத்தான் நவீன கழிப்பிடமாக மாற்றி வருகிறது. மேலும் நவீன கழிப்பிடங்களிலுள்ள மலக் குழிகளைச் சுத்தம் செய்வதற்கு 'விலை கூடுதல்' என்ற காரணத்தைக் காட்டி இயந்திரங்கள் வாங்குவதைத் தவிர்த்து, மனிதர்களையே பயன்படுத்துவதால் அத்தொழிலாளர்களின் வேலை நிலையிலும் எவ்வித மாற்றமும் கிடையாது. இதைவிடக் கொடுமை என்னவென்றால், அரசின் கீழ் இயங்கிவரும் பல்வேறு புகைவண்டி நிலையங்கள், சிறைகள், இராணுவக் குடியிருப்புகளில் இன்னும்கூட உலர் கழிப்பிடங்கள்தான் உள்ளன.



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்


★ மார்க்சிஸ்டுகள் வங்காள மொழியில் வெளிவரும் தங்களது கட்சி நாளிதழான 'கன சக்தி'யை 'அனைத்துத் தரப்பினரும்' விரும்பும் முறையில் ஒரு 'முழுமையான' பத்திரிகையாக கொண்டு வரத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளனர். இதன்படி, மே 1-லிருந்து பங்கு சந்தை விவரங்களுக்காகத் தேவையான பத்திகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதற்கு அடுத்த மாதத்திலிருந்து 'மணமக்கள் தேவை' விளம்பரங்கள் அறிமுகப்படுத்தப்படும். இதன் முன்பே நடுத்தர வர்க்கத்தினரைத் திருப்தி செய்வதற்காக கிரிக்கெட் செய்திகளுக்காகப் பத்திகளை ஒதுக்கி வந்தனர்; பங்கு சந்தையின் வீழ்ச்சி குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்து தலையங்கள் தீட்டினர். தங்களது அணிகள் வான்வழித் துறையில் தனியார் நுழைவதை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடத்திக் கொண்டிருந்த பொழுது, 'ஈஸ்ட்-வெஸ்ட் வானூர்தி' நிர்வாகம் தனது தொழிலைத் துவங்கியதையொட்டி விளம்பரம் வெளியிட்டு இலாபத்தை அதிகரிக்கத் துடித்தனர். தற்பொழுது எல்லா குறுகிய தடைகளையும் உடைத்தெறிந்துவிடும் நோக்கத்துடன் பிற முதலாளித்துவ பத்திரிகைகளுடன் போட்டியிட களத்தில் குதித்துள்ளனர். 'கடைசியாக கிளாஸ்நாஸ்ட்டும், பெரஸ்த்ரோய்காவும் 33, அலிமுதீன் தெருவுக்கும் - இப்பத்திரிகையின் அலுவலக முகவரி - வந்துவிட்டது' எனக் கிண்டலாக விமர்சிக்கின்றனர் சில பத்திரிகையாளர்கள்.

★ போஸ்னியாவில் நடைபெற்றுவரும் இனப்படுகொலைகளைத் தடுத்து நிறுத்த ஐ.நா. தயாரித்த திட்டத்தை — போஸ்னி
யாவை 10 பிரதேசங்களாகப் பிரிப்ப
மற்றும் போரில் செர்பியர்கள் ஆக்கிர
திருக்கும் முஸ்லீம் பகுதிகளை போஸ்
யாவுக்குத் திருப்பித் தருவது — போஸ்
யாவில் உள்ள செர்பிய பாராளுமன்
நிராகரித்துவிட்டது. இத்திட்டத்தை
றுக் கொள்ளாவிடில் செர்பிய பகு
ளைத் தாக்குவது, போஸ்னிய முஸ்
ளுக்கு ஆயுதம் வழங்குவது எனும் மு
களைக் கொண்டு அமெரிக்கா மிரட்
ருந்தும் திட்டத்தை ஏற்றுக் கொள்ளா
டன், போஸ்னியாவில் செர்பியர்
வாழும் பகுதியில் வாக்கெடுப்பு நடத்தப் போவதாக அறி
துள்ளது. ஐ.நா.-வின் திட்டமே இனரீதியாக போஸ்னியாவை
பிளவுபடுத்துவதாக உள்ளதுடன், செர்பியர்கள் இதனை நிர
ரிப்பதற்கு முக்கிய காரணங்களுள் ஒன்று வளைகுடா பிரச்சி
யைப் போல போஸ்னியா பிரச்சினையில் அமெரிக்காவிற்கு
பிற மேற்குலக நாடுகளுக்கும் ஒத்த கருத்தில்லை என்பதுதா
பிரான்சும், பிரிட்டனும், ரசியாவும் கூட அமெரிக்கா எடுப்பத
அறிவித்துள்ள இராணுவ நடவடிக்கையை ஆதரிக்கவில்ல
இந்நிலை செர்பியர்களை மேலும் தங்கள் ஆக்கிரமிப்பு நடவ
கையையும், இனத்தூய்மை படுகொலையையும் அதிகரித்தல
ணம் செயல்படுத்தவே தூண்டும்.

★ துன்பமயமான வாழ்க்கையிலிருந்து விடுபட ஒரு பு
வழியைக் காட்டுவதாக பிரச்சாரம் செய்து வந்த தீவிர கிறிஸ்
மதப் போதகனிடம் சிக்கியிருந்த 86 பேரை மீட்பதற்காக அ
ரிக்க போலீஸ் எடுத்த நடவடிக்கையில் டேவிட் கோரேஷ் எ
அந்த மத போதகன் தான் தங்கியிருந்த இடத்திற்கு தீ வை
86 பேருடனும் தானும் இறந்து போயுள்ளான். இறந்தவர்க
15 குழந்தைகளும் அடங்குவர். உடனடியாக நடவடிக்கை எ
காமல் மதப் போதகன் இருந்த பகுதியை சூழ்ந்துக் கொண்டு
நாட்களாக அவனுடன் கண்ணாமூச்சி ஆடியது அமெரி
போலீசு. 'வாழ்க்கைக்குப் புது அர்த்தத்தைக் காண்பிப்பதா
கூறும்' புதுவகை மதக் கும்பல்கள் அமெரிக்கா முழுவதும்
சல் போல் இருப்பதுடன், இது போன்ற உயிரை மாய்த்
கொள்வதும் நடந்து வருகின்றன. 1978-ல் இது போன்ற
றொரு மதக் கும்பலிடம் சிக்கியிருந்த 900 பேர் ஒட்டு மொ
மாக தற்கொலை செய்து கொண்டுவிட்டனர். பெருகிவரும்
முறை, வாழ்க்கையின் மதிப்பீடுகள் சிதைந்து போவது போ
எதிர்விளைவுகள், என்னதான் விஞ்ஞான வளர்ச்சியில் சாத
கள் புரிந்திருந்தாலும், சமூக வாழ்வின் அடிப்படையைப் பற்
மூடக் கருத்துக்கள் மன அமைதி தேடும் மக்களை இத் திசை
தான் நெட்டித் தள்ளுகிறது.

★ ரசியத் தலைநகர் மாஸ்கோவில் கடந்த மே 1 அன்று நட
தொழிலாளர் பேரணியை 1917-க்குப் பின் முதன்முறை
செஞ்சதுக்கத்தினுள் நுழையவிடாது போலீசார் தடுத்த
டுத்து மூண்ட கலவரத்தில், ஊர்வலத்தில் கலந்து கொ
500-க்கும் அதிகமான மக்கள் காயமடைந்துள்ளனர். 1
ஆகஸ்ட் புரட்சிக்குப் பின் நடந்துள்ள போலீசாருக்கும் பெ
மக்களுக்குமிடையேயான மோதல்களில் இது ஒன்றுதான்
வும் உக்கிரமான முறையில் நடந்துள்ளது. 'மோதலை ஏற்பட
வேண்டும் என்ற நோக்கத்தினூடேயே தெரு நாய்களைப் பி
கும் வாகனங்களைக் கொண்டு ஊர்வலத்தினரைத் தடுத்து
னர்' என ரசிய மக்கள் அனைவரும் ஒருமுகமாக யெல்ட்
நிர்வாகத்தின் மீது குற்றஞ் சுமத்தியுள்ளனர். சமீபத்தில் நட
கருத்து வாக்கெடுப்பில் இரு விசயங்களில் 50 சதவீதத்துக்
அதிகமான் வாக்குகள் பெற்றதையடுத்து 'பாராளுமன்றத்தி
உடனே தேர்தல் நடத்த வேண்டும்' எனத் தன்னிச்சையாகத்
செய்த அறிவிப்பைக்கூட ஒத்திவைக்கும் அளவு தற்பொ
ரசியாவெங்கும் யெல்ட்சின் எதிர்ப்பலை வீசுகிறது. இ
டையே நாஜிகளின் மீதான வெற்றியைக் குறிக்கும் மே-9
ஊர்வலத்தில், யெல்ட்சினின் மிரட்டலையும் மீறி தொழிலா

**அடுப்பெரிக்க அல்ல; உணவுக்காக காட்டு வேர்களை தேடி எடுத்துவரும் களகாந்தி பெண்மணி.**



படிப்பகம்

www.padippakam.com

ின பேரணியைக் காட்டிலும் கூடுதலாக ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். செங்கொடி, ஒருங்கிணைந்த ரசியாவின் அரசு சின்னம் ஆகியவற்றை ஏந்தி வந்ததுடன், 'மாஃபியாக்களின் தலைவன் யெல்ட்சின் ஒழிக' என கோஷமிட்டு தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

★ கொடிய பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பகுதியிலிருப்போருக்கு ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு ரூ.22/- வீதம் செலவழிப்பதாக அரசின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. சென்றமுறை பட்டினிச் சாவுகள் ஏற்பட்டதிலிருந்தே, ஒரிஸ்ஸா மாநிலம் காளகந்திக்கென்றே தனியாக ஒரு திட்டத்தைத் தயாரித்திருந்தது அரசு. இது தவிர கடந்த 15 வருடங்களாக அப் பகுதியில் பஞ்சத்தை நீக்க 200 கொடி செலவிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இருப்பினும் காளகந்தியில் மிகச் சமீபத்தில் பட்டினியால் 14 பேர் இறந்து போயுள்ளனர். பீகாரின் பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட பகுதிகளுக்கு 180 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக செய்திகள் கூறினாலும், இது வரை 60 பேர் இறந்து போயுள்ளனர். பி.ஜே.பி. ஆட்சியிலிருந்த பொழுதே அதன் மறுப்பையும் மீறி ம.பி.-யில் பஞ்ச நிவாரண நடவடிக்கைகள் எடுத்ததாக ராவ் அரசு கூறியது. ஆனால் கடந்த 5 மாதங்களில் மட்டும் 1,200 பேர் பட்டினியால் இறந்து போயுள்ளனர். இங்கு ஒரு நாளைக்கு சராசரியாக 10 பேர் இறந்து போவதாக செய்திகள் வருகின்றன. தற்பொழுது உ.பி.-யின் வாரணாசி பகுதிக்கும் பட்டினிச் சாவுகள் பரவ ஆரம்பித்துள்ளது. ராஜீவ் காலத்திலிருந்தே காளகந்தியில் பட்டினிச் சாவுகள் தொடர்கதையாகிப் போயின; இப்பொழுது இக் கொடுமை நாட்டின் வடபகுதியின் முக்கியமான மூன்று மாநிலங்களிலும் பரவத் தொடங்கி விட்டது. இவையாவும் அரசு அளித்ததாகக் கூறும் உதவித் தொகையும், நிவாரணமும் அதன் கோப்புகளிலேயே முடங்கிப் போயுள்ளன என்பதைத்தான் நிரூபிக்கின்றன.



**மே தினம் பேரணியைத் தடுத்து நிறுத்திய போலீசாருடன் மோதும் ருஷ்யத் தொழிலாளர்கள் - உரிமைக்கான போராட்டம்.**

★ ஒரிஸ்ஸா மாநில அரசு ஊழியர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டிருந்த சில பணச் சலுகைகளை அரசு ஒருதலைப்பட்சமாக நிறுத்திக் கொண்டதையடுத்து, அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக கடந்த மே 6-ல் ஒட்டுமொத்த விடுப்புப் போராட்டத்தை அறிவித்திருந்தனர். அன்று தலைமைச் செயலகத்தில் கூடித் தங்களின் போராட்டத்தின் நியாயத்தை சக ஊழியர்களிடம் எடுத்துப் பேசிக்கொண்டிருக்கையில் அதிகாரிகள் படைசூழ அங்கு வந்த காங். முதல்வர் பிஜூபட்நாயக், ஊழியர்கள் ஆத்திரமடையும் அளவு போராட்டத்தை எதிர்த்துப் பேசியுள்ளதுடன், 'மாநிலத்தின் நிதிநிலையைக் கருதி அச் சலுகைகளை அரசு வழங்காது' எனத் தெரிவித்துள்ளார். இதனால் கோபங்கொண்ட ஊழியர்கள் வெறுங் கைகளாலும், செருப்புகளாலும் பிஜூபட்நாயக்கையும், பிற அதிகாரிகளையும் சூழ்ந்து கொண்டு தாக்கி விரட்டியுள்ளனர். தற்பொழுது அரசு 'ஊழியர்களிடம் ஒழுக்கமில்லை' எனக் குற்றம் சுமத்தி 50 பேருக்கும் மேலானோரைக் கைது செய்துள்ளது. நிதி நெருக்கடியைப் பற்றி ஒப்பாரி வைக்கும் இதே முதல்வர்தான் தனது பிறந்த தினமான மார்ச் 5-ந் தேதியை 'பஞ்சாயத்து தினம்' எனப் பெயர்சூட்டி அரசு விடுமுறையாக அறிவித்தார்; அன்று ஒரு நாள் மட்டும் சுமார் 3 கோடி ரூபாய் செலவழித்தார். இச் சம்பவம் பற்றி பிறர் கருத்து தெரிவிக்கும் பொழுது, 'ஊழல் அதிகாரிகளைப் பொது மக்கள் சூழ்ந்துகொண்டு தாக்க வேண்டும்' என ஒருமுறை பிஜூபட்நாயக் கூறினார். அதைத்தான் இப்பொழுது அரசு ஊழியர்கள் வேறு வழியில் நிறைவேற்றியுள்ளனர், வேறொன்றுமில்லை எனக் கூறுகின்றனர்.

★ கடைசியாக, 'பதிலுக்குப் பதில்' என்ற பஞ்சாப் போலீசின் தந்திரத்தை அஸ்ஸாம் போலீசும் கடைப்பிடிக்கத் துவங்கிவிட்டது. கடந்த ஏப்ரல் 8-ல் டாடா டீ நிறுவன அதிகாரியைத் தடை செய்யப்பட்ட போடோ பாதுகாப்புப் படையினர் கடத்திச் சென்றுள்ளதற்கு பழிவாங்கும் முகமாக அவ்வமைப்பின் தலைவரின் இரு சகோதரிகளையும், நெருங்கிய இரு உறவினர்களையும் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றுள்ளது போலீசு. இக் கடத்தல் சம்பவமாக போலீசு நடவடிக்கை எதுவும் எடுக்காமலிருப்பது, கடத்தப்பட்ட நிறுவன அதிகாரியை போராளிகள் நிச்சயமாக விடுவித்துவிடுவார்கள் என்ற வாக்குறுதியை அடுத்தடுத்து கூறிக் கொண்டிருப்பது, வேறு போராளி அமைப்புகள் இந் நால்வரின் கடத்தலுக்கு உரிமை பாராட்டாமலிருப்பது போன்றவை போலீசுதான் இக்கடத்தலுக்கு முழு பொறுப்பு என்பதை உறுதி செய்துள்ளன. அதே சமயம், போலீசாரின் இது போன்ற அத்துமீறல்கள் பாராதூரமான எதிர்விளைவுகளைத்தான் ஏற்படுத்தும் என் அரசியல் விமர்சகர்கள் சைக்கியா அரசை விமர்சித்துள்ளனர்.

★ சீன அரசு தற்பொழுது அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் எண்ணெய் வகைகளை பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கி வந்ததை நிறுத்திக் கொண்டு விட்டது. அதனுடன் இப்பொருட்களின் மீது விதிக்கப்பட்டிருந்த விலைக் கட்டுப்பாட்டினையும் ரத்து செய்துள்ளது. தனது ஊழியர்களுக்கு வழங்கி வந்த ரேஷன் கார்டுகளுக்குப் பதிலாக இனி விலைவாசி உயர்வுக்கு ஏற்ப பஞ்சப்படியை உயர்த்திக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளது. சீன அரசின் இந்நடவடிக்கையின் காரணமாக, பால் உள்ளிட்ட அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் 12 முதல் 40 சதவீதம் வரை உயரும் வாய்ப்புள்ளது. ஆனால், அரசோ தனியார் கடைகளிலும் பொருட்கள் நியாயமான விலையில் கிடைத்து வருகின்றன; எனவே பெரிய பாதிப்பு ஏற்படப் போவதில்லை என தனது செயலுக்கு நியாயம் கற்பித்துள்ளது.

★ நகர அபிவிருத்திக்காக நஷ்ட ஈடும், வேறு இடத்தில் நிலமும் தருவதாக வாக்களித்து விவசாயிகளிடமிருந்து கைப்பற்றிய நிலத்தை ஒரு ஏக்கர் 11 லட்சம் என்ற விலையில், 188 ஏக்கர் நிலத்தை 'டெல்கோ' எனும் டாடா நிறுவனத்திற்கு விற்று 20 கோடி லாபம் சம்பாதித்துள்ளது மகாராஷ்டிர மாநில அரசு நிறுவனமொன்று. இம்மோசடி புனேயின் அருகில் நடந்துள்ளது. நிலத்தைக் கைப்பற்றும் பொழுது பத்திரங்களில் என்ன எழுதியிருக்கிறது என்பதைக் கூடச் சொல்லாமல் விவசாயிகளிடமிருந்து கையெழுத்துப் பெற்றுள்ளது. மேலும், இது நாள்வரை விவசாயிகளுக்கு மாற்று ஏற்பாடு ஏதும் செய்து கொடுக்காததால், அவ்விவசாயிகள் அதே நிலங்களில் தான் விவசாயம் செய்து வருகின்றனர். மாநில முதல்வர் பவார்தான் இந்த விற்பனையை பகிரங்கமாக அறிவித்தவர். ஓர் இடைத் தரகனைவிடக் கேவலமாக நடந்துள்ள இந்த அரசினை எதிர்த்து நாங்கள் இரத்தம் சிந்தியாவது எங்கள நிலத்தைத் திரும்பப் பெறுவோம் என ஆவேசத்துடன் கூறியுள்ளனர் பாதிக்கப்பட்ட விவசாயிகள்.

படிப்பகம்

www.padippakam.com

# பாக். ஆட்சிக் கவிழ்ப்பு மீண்டும் ராணுவ ஆட்சி

பாகிஸ்தானில் மீண்டும் ஜியா சகாப்தம் தொடங்கிவிட்டது. இரண்டரை ஆண்டுகளுக்குள் பிரதமர் நவாஸ் ஷெரீபின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு அரசுத் தலைவரின் அவசரநிலை ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் 11 ஆண்டுகால ராணுவ சர்வாதிகாரி ஜியாவின் கொடுங் கோலாட்சிக்குப் பிறகு பெனாசிர் ஆட்சிக்கு வந்ததும் ஜனநாயகம் துளிர்விடத் தொடங்கியுள்ளதாக முதலாளித்துவவாதிகள் பூரித்துப் போனார்கள். ஆனால் 20 மாதங்களுக்குள் பெனாசிர் ஆட்சி கவிழ்க்கப்பட்டதோடு, இப்போது நவாஸ்ஷெரீபின் ஆட்சியும் கவிழ்க்கப்பட்டுள்ளது. "ஆளும் இஸ்லாமிய ஜனநாயகக் கூட்டணியில் 6 அமைச்சர்கள் நவாஸ்ஷெரீபின் தலைமையை ஏற்காமல் பதவி விலகியுள்ளார்கள்; ஷெரீபின் சர்வாதிகாரப் போக்கை எதிர்த்து எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒட்டு மொத்தமாக பதவி விலகப் போவதாக அறிவித்துள்ளார்கள். அரசு எந்திரத்தைக் கேடாகப் பயன்படுத்தி ஷெரீப் அரசு வரைமுறையற்ற ஊழல் மோசடிகளில் இறங்கிவிட்டது. நாட்டின் பிரச்சினைகளைச் சமாளிக்கத் தகுதியிழந்து அரசே செயலிழந்து கிடக்கிறது" என்று அடுக்கடுக்காக குற்றம் சாட்டி கடந்த ஏப்ரல் 18-ம் நாளன்று அரசுத் தலைவர் இஷாக்கான், ஷெரீபின் ஆட்சியைக் கலைத்தார்.

சட்டபூர்வமாகவே நடந்த இந்த ஆட்சிக் கவிழ்ப்பைத் தொடர்ந்து, ஷெரீபுக்கு எதிராகத் திரும்பிய அவரது முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்தவரும் பெரும் நிலப்பிரபுவுமான பால்க்ஷேர் மசாரி இடைக்கால அரசின் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜூலை 14-ம் தேதியன்று பொதுத் தேர்தல் நடைபெறும் என்றும், நவாஸ்ஷெரீபின் ஊழல்கள் குறித்து சிறப்பு விசாரணை நடத்தப்படும் என்றும் அரசுத் தலைவர் இஷாக்கான் அறிவித்துள்ளார். சுருக்கமாகச் சொன்னால், பாகிஸ்தானில் நிலவும் நாடாளுமன்ற அராஜகத்தைப் பயன்படுத்திக் கொண்டு அரசுத் தலைவரின் பின்புலமாக உள்ள ராணுவக் கும்பலே மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது.

ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தும் ராணுவக் கும்பல் வழக்கமாகக் கூறும் குற்றச்சாட்டுக்கள்தான் இவை என்று இவற்றை ஒதுக்கி விட முடியாது. ராணுவக் கும்பலின் நோக்கம் ஆட்சிக் கவிழ்ப்பாக இருந்தாலும், நவாஸ்ஷெரீப் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துவிடவும் முடியாது. நவம்பர் 1990-ல் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த நவாஸ் ஷெரீப், ராணுவக் கும்பலின் தயவில் தேர்தல் தில்லுமுல்லுகள் மூலமே ஆட்சியைப் பிடித்தவர். சிந்து, பலூச்சிஸ்தான் தேசிய இனங்களின் ஜனநாயகத்துக்கான போராட்டங்களை மிருகத்தனமாக ஒடுக்கியதோடு, எதிர்க் கட்சியான பெனாசிரின் கட்சி ஊழியர்கள் மீது வன்முறைப் படுகொலைகளை ஏவிவிட்டவர். இஸ்லாத்தின் பெயரால் மிகக் கொடூரமான பழங்கால தண்டனை முறைகளைத் திணித்த கொடுங்கோலர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, நவாஸ் ஷெரீபின் "இடே பாக்" குடும்பமும் அவரது கட்சியும் அதிகாரத்தைக் கேடாகப் பயன்படுத்தி ஊழல் கொள்ளையில் மூழ்கித் திளைத்தது. ஆசியாவிலேயே மிகப்பெரிய நவீன சர்க்கரை ஆலையும், பாகிஸ்தானிலேயே மிகப்பெரிய இரும்பு - எஃகு ஆலை, 5 துணி ஆலைகள், அதிநவீன வசதிகள் கொண்ட நட்சத்திர மருத்துவமனை மற்றும் ஏராளமான ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் முதலானவற்றைக் கொண்டுள்ள நவாஸ்ஷெரீபின் "இடே பார்க்" குடும்பம் இன்று பாகிஸ்தானின் மிகப்பெரும் முதல் பணக்கார கும்பலாக வளர்ந்துள்ளது. கடந்த இரண்டரை ஆண்டு காலத்தில் ஷெரீப் கும்பலின் ஊழலும் கொள்ளையும் மக்களிடம் அம்பலப்பட்டு, வெறுக்கத்தக்க ஆட்சியாகச் சீரழிந்து போனது. அவரது பஞ்சாப் மாநிலத்திலேயே செல்வாக்கிழந்து போயுள்ளதோடு, ஊழல் கொள்ளையில் உரிய பங்கு கிடைக்காததால் அவரது கட்சியே பிளவுபட்டுப் போயுள்ளது.

நவாஸ்ஷெரீபின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு அதிபர் இஷாக்கானின் பொம்மையாட்சி நிறுவப்பட்டதற்கு பாகிஸ்தான் ராணுவக் கும்பலின் அதிகாரப் பசியே முக்கிய காரணம். பாக். வரலாற்றில் கடந்த 46 ஆண்டுகளில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து ராணுவ ஆட்சியே நீடித்தது. 5 முறை ராணுவம் பகிரங்கமாகவே ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தியது. பாக். பிரதம மந்திரிகளில் 12 பேரில் ஒருவர் தவிர, மற்ற அனைவரும் ராணுவக் கும்பலால் பதவியிலிருந்து விரட்டப்பட்டனர் அல்லது சுட்டுக் கொல்லப்பட்டனர். ராணுவக் கும்பலின் அதிகாரத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதற்காகவே 1985-ல் 8-வது அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. அரசுத் தலைவருக்கு வரைமுறையற்ற அதிகாரத்தை வழங்கும் இச்சிறப்புச் சட்டத்தைக் கொண்டுதான், அதிபர் இஷாக்கான் பெனாசிர் ஆட்சியையும் இப்போது ஷெரீப் ஆட்சியையும் கலைத்துள்ளார்.

பாகிஸ்தானில் சர்வாதிகாரி ஜியாவின் சாவைத் தொடர்ந்து நடந்த ஜனநாயகத்துக்கான போராட்டங்களைச் சாதகமாக்கிக் கொண்டு ஆட்சிக்கு வந்த பெனாசிர், ராணுவ கும்பலுக்கு எதிராக ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடவில்லை. ராணுவக் கும்பலுடன் சமரசம் செய்து கொண்டு தனது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதிலேயே குறியாக இருந்தார். அதுவே அவரது ஆட்சியைக் காவு கொண்டது. அதே போலத்தான் நவாஸ் ஷெரீபும் ராணுவக் கும்பலுக்கு விசுவாசமாகச் செயல்பட்டார். இருப்பினும் ராணுவக் கும்பல் இத்தகைய பெயரளவிலான ஜனநாயக ஆட்சியைக் கூட சகித்துக் கொள்ள முடியாமல் அதிகாரப்பசியோடு அவரது ஆட்சியையும் தூக்கி யெறிந்துள்ளது.

பாக். ராணுவ - அதிகாரவர்க்க கும்பலின் விசுவாசியாக நவாஸ் ஷெரீப் செயல்பட்ட போதிலும், அவர் ஆட்சியைத் தூக்கியெறிவதற்கு காரணம் இல்லாமல் இல்லை. தமது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளும் சுயநலன் காரணமாக, ராணுவக் கும்பலின் விருப்பத்துக்கு மாறாக அதிகார வர்க்கத்திலும் ராணுவ தலைமைப் பொறுப்பிலும் தனது விசுவாசிகளை அவர் நியமிக்கத் தொடங்கினார். இதனால் அதிபர் இஷாக்கானும் அவருக்குப் பின்புலமாக உள்ள ராணுவக் கும்பலும் எரிச்சலடைந்தனர். அதிபருக்கும் நவாஸ் ஷெரீப்புக்குமிடையே முரண்பாடும் அதிகாரப் போட்டியும் தீவிரமடையத் தொடங்கியது. குறிப்பாக, 1992-ல் ராணுவத் தலைமைத் தளபதியாக நவாஸ் தெரிவு செய்தவரை நியமிக்காமல், தனக்கு விசுவாசமான ஜான்ஜுவாவை நியமித்தார் இஷாக்கான். 1993-ல்

கூடிகுலாவிய நேரத்தில் இஷாக்கான், நவாஸ் ஷெரீப்



படிப்பகம்

www.padippakam.com

தலைமைத் தளபதி மாரடைப்பால் காலமானதும், மீண்டும் நவாஸ் தெரிவு செய்தவரைப் புறக்கணித்துவிட்டு, வரிசைப் பட்டியலில் ஆறாவது இடத்திலிருந்த அப்துல் வாஹீதை தலைமைத் தளபதியாக இஷாக்கான் நியமித்துள்ளார்.

இதன் தொடர்ச்சியாக, 1993 இறுதியில் பதவிக் காலம் முடிவடையும் அதிபர் இஷாக்கானை மீண்டும் ஐந்து வருடம் அதே பதவியில் தொடர ஆதரிக்க மாட்டோம் என்று நவாஸ்ஷெரீப் முரண்டு பிடிக்கத் தொடங்கினார். இதனால் ஆத்திரமடைந்த அதிபர் நேரடியாகவே அரசியலில் தலையிட்டு காய்களை நகர்த்தத் தொடங்கினார். சிந்து, பலூச்சிஸ்தான், வடமேற்கு எல்லைப் பிராந்திய மாநில அரசுகளை நவாஸ் ஷெரீப்புக்கு எதிராகத் திரும்பச் செய்தார். நவாஸின் கோட்டையாக கருதப்பட்ட பஞ்சாப் மாநிலத்தில் அவரது ஆதரவாளரான முதல்வர் குலாம்ஹைதர் வைன் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரச் செய்து இஷாக்கானின் ஆதரவாளரான சபாநாயகர் மன்சூர் அஹமது முதல்வராக்கப்பட்டார். பாக். முஸ்லீம் லீகை இஷாக்கான் இரண்டாக உடைத்ததன் விளைவாக இன்று நவாஸின் இஸ்லாமிய ஜனநாயகக் கூட்டணி நொறுங்கி சிதறிக் கிடக்கிறது. மீண்டும் நவாஸ் ஷெரீப் கூட்டணி கட்ட முடியாதபடி முஸ்லீம் லீகின் ஒரு பிரிவுக்கு இடைக்கால அரசில் பதவிகள் தரப்பட்டுள்ளன. இதுதவிர ஷெரீபிடமிருந்து பிரிந்து தேசிய ஜனநாயக முன்னணி அமைத்த குலாம் முஸ்தபா ஜடோய்க்கும், பலூச்சிஸ்தானின் மிகப் பெரிய கட்சியான ஜமூரி வாட்டன் கட்சிக்கும் இன்னும் பல உதிரிக் கட்சிகளுக்கும் மந்திரி பதவிகள் தரப்பட்டுள்ளன. இஷாக்கான் நடத்திய மிகப்பெரிய 'குதிரை வியாபாரத்தால்'' ஏப்ரல் இறுதிக்குள் இடைக்கால அரசு இருமுறை விரிவு படுத்தப்பட்டுள்ளது.

அதிபர் இஷாக்கானின் நடவடிக்கைகளைக் கண்டு அரண்டு போன நவாஸ் ஷெரீப், ஆட்சிக் கவிழ்ப்புக்கு முன்பு இஷாக்கானிடம் கெஞ்சிப் பார்த்தார். மீண்டும் அவரையே அதிபராக்க ஆதரவு தெரிவித்தார். ஆனால், ஆட்சிக் கவிழ்க்கப்பட்டதும் திடீரென 'பல்டி' அடித்து அதிபருக்கு எதிராக வீர வசனம் பேசுகிறார். ஜனநாயகப் படுகொலை என்று கூப்பாடு போடுகிறார். 1990-ல் பெனாசிரின் ஆட்சியைக் கவிழ்த்தப் போது, அவரும் இதே போலத்தான் வீரவசனம் பேசினார். மீண்டும் அதே நாடகம்தான். பழைய பாத்திரங்களில் புதிய நடிகர்கள் நடிக்கிறார்கள்.

இதிலே, வேடிக்கை என்னவென்றால் பாக். மக்கள் கட்சியின் தலைவியான பெனாசிர், இஷாக்கானுடன் சந்தர்ப்பவாதமாக கூட்டுச் சேர்ந்து கொண்டுள்ளார். நேற்றுவரை அதிபர் இஷாக்கானின் சர்வாதிகாரத்தையும், அதிபருக்கு எல்லையற்ற அதிகாரத்தைத் தரும் சட்டத் திருத்தத்தையும் எதிர்த்து சவடால் அடித்து வந்த பெனாசிர், இப்போது நவாஸ் அரசு கலைக்கப்பட்டதும் பெட்டிப் பாம்பாகிவிட்டார். அதிபரின் சட்டவிரோத ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கையை எதிர்த்துப் போராட நவாஸ் அழைப்பு விடுத்தும்கூட பெனாசிர் அதை ஏற்கவில்லை. பெனாசிருக்கும் அதிபருக்கும் ஏற்பட்ட ரகசிய பேரத்தின் விளைவாக. கிரிமினல் வழக்குகள் தொடுக்கப்பட்டு குற்றம் சாட்டப்பட்ட பெனாசிரின் கணவருக்கு இடைக்கால அரசில் மந்திரி பதவி அளிக்கப்பட்டுள்ளது. ''கிழக்கின் திருமகள்'', ''ஜனநாயக விடிவெள்ளி'' என்று பெருமையாக அழைக்கப்பட்ட பெனாசிரின் ஜனநாயக துரோகத்தைக் கண்டு அவரது கட்சியினரே பகிரங்கமாகச் சாடுகின்றனர்.

**சந்தர்ப்பவாத அரசியல்: பெனாசிர்**



தேர்தல் வைத்தால் எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெறமுடியாத அளவுக்கு பாக்.கில் எல்லாக் கட்சிகளும் மக்களிடம் அம்பலப்பட்டு தனிமைப்பட்டுக் கிடக்கின்றன. போதாக்குறைக்கு கட்சித் தாவல், கட்சிக்குள்ளேயே கோஷ்டி தகராறுகள், அரசு பதவிகளையும் சலுகைகளையும் 'கைப்பற்றிக் கொள்ள பகிரங்கமாக நடக்கும் அரசியல் விபச்சாரம், ஜனநாயகப் படுகொலை, லஞ்ச ஊழல் கிரிமினல் நடவடிக்கைகள் என பாக்.கில் நாடாளுமன்ற அராஜகம் புழுத்து புரையோடிப் போய் கிடக்கிறது.

இத்தகைய கேடுகெட்ட நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கொண்டு ராணுவ சர்வாதிகாரத்தை ஒருக்காலும் வீழ்த்த முடியாது. அதிகாரச் சுவை கண்ட ராணுவக் கும்பலும் சைவப் புலியாக மாறி ஜனநாயகப் பாதைக்குத் திரும்பிவிடாது. ஏற்கனவே பிலிப்பைன்சிலும், மியான்மாரிலும் (பர்மா) ராணுவக் கும்பல் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டதைப் போலவே இப்போது பாகிஸ்தானிலும் திரும்பவும் நடக்கிறது.

கடைசியில், ராணுவ சர்வாதிகாரத்துக்கு எதிராக பாக். மக்கள் நடத்திய போராட்டங்கள் விழலுக்கு இறைத்த நீராகி விட்டன. அவர்கள் போராடிப் பெற்ற அற்ப உரிமைகளும் பெயரளவிலான ஜனநாயகமும் மீண்டும் ராணுவக் கும்பலின் காலடியில் வைக்கப்பட்டு விட்டது. ● நிரஞ்சன்

## சிவப்பஞ்சலி!

நெய்வேலி தொழிலாளர் பிரச்சாரக் குழுவின் உறுப்பினரும் பாட்டாளி வர்க்கப் போராளியுமான **தோழர் செழியன்**, கடந்த மே 13-ம் நாளன்று அகால மரணமடைந்தார்.

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக மார்க்சிய - லெனினிய புரட்சிகர இயக்கத்தில் உற்சாகத்துடன் பணியாற்றி வந்த தோழர் செழியன், நெய்வேலியில் புதிய கலாச்சார வாசகர் வட்டத்தையும் அதன் பிறகு தொழிலாளர் பிரச்சாரக் குழுவையும் கட்டியமைப்பதில் முக்கிய பங்களித்தார். நெய்வேலி உர ஆலையில் இளநிலைப் பொறியாளராக இருந்தபோதிலும், தொழிலாளி வர்க்கத்துடன் ஐக்கியப்பட்டு புரட்சிகர அரசியலைப் பிரச்சாரம் செய்வதிலும் மக்களின் விடுதலைக்காகப் போராடுவதிலும் முன்னணித் தோழராகத் திகழ்ந்தார். ஈழ விடுதலைப் போராட்டத்தை ஆதரித்த குற்றத்திற்காக பாசிச ஜெயா அரசினால் சிறையிலடைக்கப்பட்டார்.

கல்லீரல் கோளாறு காரணமாக கடந்த ஈரா[illegible]டுகளாக நோய்வாய்ப்பட்டிருந்த போதிலும், சிறிதும் சோர்வடையாமல் [illegible]களுக்கு வழிகாட்டுவதிலும் அ[illegible] முன்னெடுத்துச் செல்வதிலும் முன்னணிச் செயல்வீரராக விளங்கினார். சக தோழர்கள் பாசிச ஜெயா கும்பலின் அடக்குமுறைக்கு ஆளாகி, ''தடா'' சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்ட போதும் உணர்வு குன்றாமல் உற்சாகத்துடன் பணியாற்றினார். நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டு நடக்க முடியாத நிலையிலும்கூட மே-1 சிறீரங்கம் கருவறை நுழைவுப் போராட்ட இயக்க வேலைகளில் ஊக்கமாகப் பங்கேற்றார்.

கம்யூனிச உணர்வுமிக்க போராளியாகத் திகழ்ந்த தோழர் செழியன், சிகிச்சை பலனளிக்காமல் தனது 32-வது வயதிலே அகால மரணமடைந்துவிட்டார். சாதி, மத, சடங்கு, சம்பிரதாயங்கள் இன்றி புரட்சிகரமான முறையில் திருமணம் செய்துகொண்டார். அவரது விருப்பப்படியே, மதச் சடங்குகள் ஏதுமின்றி புரட்சிகரமான முறையிலேயே அவரது இறுதிநாள் நிகழ்ச்சிகளும் நடந்தன. அவரது இறுதி ஊர்வலத்திலும் அதன் பின்னர் நடைபெற்ற இரங்கல் கூட்டத்திலும் நெய்வேலி இளநிலை பொறியாளர் சங்கம், பட்டதாரி பொறியாளர் சங்கம், தொழிலாளர் பிரச்சாரக் குழு, விவசாயிகள் விடுதலை முன்னணி (திருவெண்ணெய்நல்லூர்) மற்றும் பிற ஜனநாயக - தொழிற்சங்க அமைப்புகளும், ஆசிரியர்களும் அவரது குடும்ப உறவினர்களும் கலந்து கொண்டு தோழரது கம்யூனிச உணர்வையும் புரட்சிகர அரசியல் பணியையும் நினைவுகூர்ந்து, அவர் விட்டுச் சென்ற கடமைகளை நிறைவேற்ற சூளுரைத்தனர்.

தோழர் செழியனுக்கு எமது வீரவணக்[illegible]!

படிப்பகம்

www.padippakam.com

# கோயில் கருவறை நுழைவுப் போராட்டம் இந்துத்துவம்: பார்ப்பனீயமே நிரூபணம்

**மே 1** சீரீரங்கம் கோயில் கருவறை நுழைவுப் போராட்டம் பார்ப்பன இந்துமதவெறி எதிர்ப்புப் போராட்டங்களின் வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்று விட்டது.

மார்ச் இரண்டாவது வாரம் முதல் தமிழகமெங்கும் நடைபெற்ற பிரச்சாரம் லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் பெருத்த ஆதரவையும், எதிர்பார்ப்பையும் தூண்டிவிட்டது. அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் சிற்றூர்களிலும் செய்யப்பட்டிருந்த விரிவான சுவரெழுத்து விளம்பரங்கள் இந்தப் பிரச்சார இயக்கத்தில் பெரும்பங்கு ஆற்றின.

கருவறை நுழைவுப் போராட்டத்தின் சுவரெழுத்து வாசகங்கள் பார்ப்பன மோசடியைத் தோலுரித்தன. மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றன. ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கோ ஆத்திரத்தைக் கிளறின. குறிப்பாகத் திருச்சி நகரில் திரும்பிய இடங்களிலெல்லாம் தன்னை வெருட்டிய சுவரெழுத்துக்களை சமாளிக்க போட்டியாக ஒன்றிரண்டு இடங்களில் எழுத முயன்று தோற்றது இந்து முன்னணி. காசு பணத்திற்குப் பஞ்சமில்லை. ஆயிரக் கணக்கில் செலவு செய்து ஆள்வைத்தும் எழுதலாம்; ஆனால் என்ன எழுதுவது?

பதில் சொல்ல முடியாத கேள்விகளை அழித்துவிடுவது தானே - அவாளின் பரம்பரை யுக்தி! ம.க.இ.க-வின் சுவரெழுத்துக்கள் எழுதப்பட்டிருந்த தூய ஜோசப் கல்லூரி, அரசு மருத்துவமனை, மற்றும் பிற அரசு அலுவலகங்களுக்கு பிராமணர் சங்கத்திலிருந்து கடிதம் பறந்தது. ''எங்கள் சமூகத்தைப் பற்றி உங்கள் சுவற்றில் இழிவாக எழுதியிருக்கிறது. இது குறித்து காவல் துறையிடம் புகார் செய்து உடனே நடவடிக்கை எடுங்கள்.'' என்று வேண்டுகோள் விடுத்தார். அக்கிரகாரத்தின் ஆட்சியில் அவாளின் வேண்டுகோளை (மிரட்டலை) மறுக்க முடியுமா?

சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் போலீசுக்குப் புகார் செய்ய விரும்பாமல் வெள்ளை அடித்தனர். ஆனால் மீண்டும் மீண்டும் அவற்றின் மீது எழுத்துக்கள் தோன்றுவதை அவர்களால் தடுக்க முடியவில்லை.

ஏப்ரல் முதல் வாரத்தில் இந்துமுன்னணித் தலைவர் இராம. கோபாலன் திருச்சியில் பொதுக்கூட்டம் போட்டு கருவறை நுழைவைக் கண்டித்தார். ஆலயம் காப்போம் என்று இந்து முன்னணி சுவரொட்டி ஒட்டியது. பார்ப்பனத் திமிர்பிடித்த இராம. கோபாலன் ''மே 1 கோயிலைக் கொள்ளை அடிக்க வரப் போகிறார்கள்'' என்று தனது பழக்கமான பாணியில் பொய்ப்பிரச்சாரம் செய்தார். ஆனால் இதை எல்லாம் கேட்பதற்கும், கைதட்டுவதற்கும் கூடியிருந்த கூட்டத்தில் பார்ப்பனர்களைத் தவிர வேறு யாருமில்லை.

இராம. கோபாலனின் வரவுக்குப்பின் புது நம்பிக்கை பெற்ற சிறீரங்கத்து இந்து முன்னணிப் பார்ப்பனக் கும்பல் இரவு நேரத்தில் திருட்டுத்தனமாக சிறீரங்கம் பகுதியில் எழுதப்பட்டிருந்த சுவரெழுத்துக்களை அழித்தது. யார் கேட்கப் போகிறார்கள் என்ற திமிரில் அழித்துக் கொண்டிருந்தபோது, அவர்கள் சற்றும் எதிர்பாராமல் அந்தப் பகுதியின் தி.மு.க. இளைஞர்கள் வந்து தடுத்து நிறுத்தினர். எழுதியதை அழிக் கூடாதென்றும், வேண்டுமானால் உங்கள் கருத்தை தனியே வேறிடத்தில் எழுதுங்கள் என்றும் கூறினர். கும்பலாக வந்திருந்த பார்ப்பனக் கூட்டம் கொஞ்சம் திமிர்த்தனமாகப் பதில் சொல்ல முனைந்த போது அவர்கள் ''முழுசாக வீடுதிரும்ப முடியாது'' என்று எச்சரித்தனர் தி.மு.க. இளைஞர்கள். திடீரென அங்கே தோன்றிய சிறீரங்கம் போலீசார் பார்ப்பனர்களைப் பாதுகாப்பாக மீட்டுச் சென்றார். சிறீரங்கம் எஸ்.ஐ. தனது விசுவாசத்தைக் காட்டும் வகையில் தி.மு.க. இளைஞர்களை மிரட்டி அனுப்பினார்.

இதனால் தைரியம் பெற்ற இந்து முன்னணி கருவறை நுழைவை எதிர்த்து கோயிலைச் சுற்றி கண்டன ஊர்வலம் நடத்தியது. ஊர்வலத்தில் கலந்து கொண்டவை உச்சிக்குடுமிகள் மட்டுமே. ஊர்வலம் கோயிலைச் சுற்றியுள்ள முதல் இரண்டு பார்ப்பனர் தெருக்களைக் கடந்து பார்ப்பனர் அல்லாதார் வீதியில் நுழைந்தவுடனே அங்கிருந்த இளைஞர்கள் ''இந்தத் தெருவுக்குள் நுழையக் கூடாது'' என்று தடுத்துத் திருப்பி அனுப்பினர். இதனால் ஆத்திரம் கொண்ட பார்ப்பனக் கும்பல் கோயில் வட்டாரத்தில் கட்டியிருந்த தி.க.தட்டிகளையும், பெரியார் படத்தையும் கிழித்தெறிந்தது. அதற்குப் பதிலடியை தி.க. இளைஞர்களிடமிருந்து மறுநாளே உரிய முறையில் பெற்றுக் கொண்டனர். பார்ப்பனக் கும்பலின் எடுபிடியான எஸ்.ஐ. வழக்கம் போலவே தி.க.-வினர் மீது வழக்கு பதிவு செய்ததுடன், போலீசு நிலையத்தில் வைத்து அவர்களைத் தாக்கினார்.

மேற்கூறிய நிகழ்ச்சிகள் போன்று தமிழகத்தில் பல நகரங்களிலும் நடந்தன. பல சம்பவங்களில் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த மக்களும், கட்சிசாராத நபர்களும் தாமாகவே முன்வந்து இத்தகைய ஆதரவு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஏதோ ஒரு அமைப்பு நடத்துகின்ற போராட்டம் என்ற வரம்பைக் கடந்து மக்கள் போராட்டமாக இது மாறிவிட்டதை மேற்சொன்ன சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

**கருவறை நுழைவுப் போராட்டத்தின் எதிரொலி; சிறீரங்கம் கோயிலுக்குள் நுழைபவர்கள் 'மெட்டல் டிடெக்டர்' மூலம் சோதனையிடப்பட்டனர்.**



பிரச்சார இயக்கத்தை ஒட்டி லட்சக் கணக்கான துண்டுப் பிரசுரங்கள், ஆயிரக்கணக்கான வெளியீடுகள் மக்கள் மத்தியில் வினியோகிக்கப்பட்டன. தெரு முனைகளிலும் பேருந்துகளிலும் ரயில்களிலும் நிதிவசூல் செய்யும் போதும், வெளியீடுகளை விற்கும் போதும் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் ஆங்காங்கே ஆட்சேபித்தனர்; ஆத்திரமாய்க் குறுக்கிட்டனர். அத்தகைய சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர்கள் வாயடைக்க மக்களிடமிருந்து பலர் தாமாகவே

படிப்பகம்

www.padippakam.com

ன்வந்தனர்.

தமிழகம் முழுவதும் )0 இடங்களில் பொதுக் ட்டங்கள் நடைபெற்றன. காவை, வடஆற்காடு, நமபுரி மாவட்டங்களில் ட்டும் பொதுக் கூட்டங் ர் அனுமதிக்கப்பட ல்லை. எனவே கோவை லும், திருப்பூரிலும் ரங்குக் கூட்டமாக நடந் து; பொதுக்கூட்டம் நடை பற்ற பல இடங்களில் 00, 2000 பேர் என்ற ளவில் கூடியிருந்த மக் ர் இறுதிவரை அசையா ல் நின்று கேட்டனர். பல டங்களில் கூட்டம் டிந்த பின் பார்வையா கள் தங்கள் ஊரில் பொதுக்கூட்டம் நடத்த ஏற்பாடு செய்வதா வும், பேச்சாளரை அனுப்புமாறும் கோரினர். குறிப்பாக, தாழ்த் பட்ட மக்கள் மத்தியில் இவ்வியக்கம் பெரும் தாக்கத்தை ற்படுத்தியது.




**சிறீரங்கம் கோயிலில் 144 தடையை அறிவிக்கும் போலீசின் பதாகை; பீதியின் உச்சத்தில் போலீசு.**

பல்வேறு இடங்களில் அம்பேத்கார் இயக்க இளைஞர்கள் தற்கு ஆதரவு தெரிவித்ததுடன் போராட்டத்திலும் கலந்து காண்டனர். தி.க., தி.மு.க., பா.ம.க. கட்சிகளைச் சேர்ந்த ணிகளும் பெரும் ஆதரவும் ஒத்துழைப்பும் கொடுத்தனர். .ம.க-வைச் சேர்ந்த வடிவேல் இராவணன் போடியில் நடை பற்ற பொதுக்கூட்டத்தில் பேசினார். மதுரை, இராமநாதபுரம் வட்டங்களில் திருமாவளவன் தலைமையிலான தலித் சிறுத் தகள் இயக்கம் (DPI), சந்திரபோஸ் தலைமையிலான தியாகி மாணுவேல் பேரவை ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்த தாழர்கள் பெரும் உற்சாகத்துடன் ஆதரவளித்தனர். (இமாணு வல் பேரவையைச் சேர்ந்தவர்கள் 30 பேர் போராட்டத்தில் ந்துகொண்டு கைதானார்கள்). இவையன்றி திராவிடர் கழகம் ராமகிருஷ்ணன் பிரிவு), தமிழக இளைஞர் இயக்கம், முற் ாக்கு இளைஞர் அணி (RYL) ஆகிய அமைப்புக்களைச் ர்ந்த தோழர்கள் ஆங்காங்கே பொதுக்கூட்டங்களில் பங்கேற் ர். பார்ப்பன இந்துமத வெறிக்கெதிராக ஒடுக்கப்பட்ட, தாழ்த் பட்ட மக்களின் மனத்தில் குமுறிக் கொண்டிருக்கும் வெஞ்சி ம் இவற்றிலெல்லாம் வெளிப்பட்டது.

கருவறை நுழைவுப்போராட்ட தினத்தன்று அதை எதிர்த்து காயிலுக்குள்ளே கூட்டுவழிபாடு நடத்தப் போவதாக இந்து ன்னணி செய்திருந்த றிவிப்பும், பிராமனர் சங் அறிவித்திருந்த கண் ா ஊர்வலமும் மக்களின் ாபத்தை அதிகரிக்கவே வியது. தேங்காய் டைப்பு வழிபாடு என்ற யரில் தேங்காய்க்குள் ாகாய்த் தூள் கலந்த தண் ரை நிரப்பி ஊர்வலத்தி மீது வீசுவோம் என் , ஆயுதங்கள் - ஆசிட் புகளால் தாக்குவோம் றும் இந்து முன்னணி ப்பியிருந்த வதந்தி மக்க ன ஆத்திரத்தை மேலும் கிகரிக்கச் செய்தது. ாராட்டத்தின் களமா

கிய சிறீரங்கத்தை அடுத்த திருவானைக்காவல் பகுதி யில் போராட்டத்திற்குப் பெருகிவரும் மக்கள் ஆதர வைக் கண்டு இந்து முன் னணி மட்டுமல்லாது, அர சும் போலீசும் பீதியடைந் தன. விளைவு மறுநாள் சிறீ ரங்கத்தில் நடத்த அனுமதி தரப்பட்டிருந்த பொதுக் கூட்டத்திற்கு திடீரென அனுமதி மறுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 144 - தடை உத்தரவும் பிறப்பிக் கப்பட்டது.

போலீசு அதிகாரி ஒரு வர் வெளிப்படையாகக் குறிப்பிட்டார்: ''பார்ப்பன எதிர்ப்பு சக்திகள் எல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டன. இனி சிறீரங்கத்தில் சட்டம் ஒழுங்கை (அதாவது இந்து முன்னணி பார்ப்பனக் கும்பலை) பாதுகாப்பது கடினம்'' ஆம்! பார்ப்பன ஆதிக்க சக்திகள் மற்றும் மேல் சாதியி னர் ஒருபுறம்; பார்ப்பன மதவெறி எதிர்ப்பாளர்கள் இன்னொரு புறம் என சிறீரங்கம் வட்டாரமும், திருச்சி நகரமும் இரு கூறாகப் பிரிந்து நின்றன. போராட்டத்தைப் பகிரங்கமாக எதிர்க்கத் துணிந்தவர்கள் மூன்றேபேர் பி.ஜே.பி., பிராமணர் சங்கம், இந்து முன்னணி பார்ப்பனக் கும்பலின் அவதார வேடங்கள் கலைந்து அதன் சாதி ஆதிக்க வெறி அம்பலமானது. போராட்டத்தை எதிர்த்து இந்து முன்னணி எடுக்கும் எந்த அரைவேக்காட்டு நடவடிக்கையும் விபரீதமான, கட்டுப்படுத்த முடியாத எதிர்வி ளைவுகளைத் தோற்றுவிக்கும் என்பதை போலீசு புரிந்துகொண் டது.

ஏப்ரல் 30 அன்று திருச்சி வெல்ல மண்டியில் நடைபெறவி ருந்த பொதுக்கூட்டத்திற்கு சட்டம் ஒழுங்கைக் காரணம் காட்டி அனுமதி மறுக்கப்பட்டது. இதை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் தொடுத்த வழக்கில் இம்முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. உயர்நீதி மன்ற உத்தரவை குப் பைத் தொட்டியில் வீசி எறிய முடிவு செய்த போலீசு 144 தடை உத்தரவை திருச்சி நகரம் முழுமைக்கும் விரிவாக்கியது; ஊர்வ லமும் தடை செய்யப்பட்டது. பார்ப்பனக் கும்பலுக்கு ஆதரவ ளிக்க அரசு மும்முரமாகச் செயல்பட்டது; போலீசு அறிவித்த 144 தடை தவிர, தமிழக அரசே 144 தடை உத்தரவை பிறப்பித் தது.

**கடுமையான 144 தடுப்புக் காவலை மீறி மேலப்புதூர் வீதியில் திடீரென நூற்றுக்கணக்கானோர் கூடி பார்ப்பன எதிர்ப்பு முழக்கமிட்ட காட்சி.**



தினத் தந்தி, மாலை மலர் ஆகிய ஏடுகளி லேயே குறிப்பிட்டுள்ள தைப் போல வரலாறு காணாத வகையில் திருச்சி யில் போலீசு குவிக்கப்பட் டது. தலைமைச் செயல ரும் சூரப்புலி தேவாரமும் திருச்சியில் முகாமடித்த னர். சிறீரங்கத்து பார்ப்ப னக் கும்பல் மத்தியில் பீதி பரவத் தொடங்கியது. போலீசு அதிகாரிகள் ஏற் பாடு செய்த கூட்டத்தில் கூட்டு வழிபாடு வேண் டாம் என்று பெரும் பான்மை பார்ப்பனக் கும் பல் பீதியில் பின்வாங்கி

படிப்பகம்

www.padippakam.com

யது. அரங்கநாதனை சூத்திரர்களிடமிருந்தும் தாழ்த்தப்பட்டவர் களிடமிருந்தும் பாதுகாக்க ஆயுத போலீசு, குண்டுச் சோதனைக் குழு (Bomb Squad) என்று ஆயிரக்கணக்கில் போலீசு பட்டாளம் சுற்றி வளைத்தது. கோயில் கதவுகள் இழுத்து மூடப்பட்டு 144 தடை உத்தரவு என்ற அறிவிப்பு கொண்ட பதாகை கோபுர வாயிலிலேயே இழுத்துக் கட்டப் பட்டது. இதை ஒரு மிகச் சாதாரண கோரிக்கை என்று நிராகரித்த மக்கள் சிலருக்கு பிரச்சினையின் உண்மை நிலை தெரிந்தது.



பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்த இடிமுழக்கங்களுடன் 'சூத்திரர்களும்' 'பஞ்சமர்களும்' அலை அலையாக திரண்ட காட்சி.

30.4.93 அன்று 144 - பொதுக்கூட்டத் தடையை மீறி மேடை அமைக்க முயன்ற தோழர்கள் கைது செய்யப்பட்டனர். ஆனால் அதற்கு 3 அடி தூரத்தில் அ.தி.மு.க-வின் (அமைச்சர் கண்ணப்பனுக்கு) மே தினக் கூட்டத்திற்கு மேடை; தயாராகிக் கொண்டிருந்தது. தடைபற்றி விவரம் தெரியாமல் பல ஊர்களிலிருந்தும் பொதுக் கூட்டத்திற்கு வந்தவர்கள் போலீசால் மிரட்டி விரட்டப்பட்டனர். லாரி, வேன்களில் வெளியூரிலிருந்து வந்த தோழர்கள் மடக்கிக் கொண்டு செல்லப்பட்டனர்; ஊருக்கு வெளியே திருப்பி அனுப்பப்பட்டனர். எல்லாத் திசைகளிலிருந்தும் திருச்சி நகருக்குள் நுழையும் சாலைகளில் போலீசு காவல் போடப்பட்டது. அதுமட்டுமின்றி புறப்படும் இடங்களிலேயே லாரிகளை போலீசு மடக்கி நிறுத்தத் தொடங்கியது. இதனால் போராட்டத்தில் பங்கேற்க விரும்பிய ஆயிரக்கணக்கானோர் வரமுடியவில்லை, பேருந்துக்குச் செலவு செய்ய வாய்ப்பிருந்தவர்கள் மட்டுமே வரமுடியுமென்ற நிலைமை உருவானது.

மே தினத்தன்று அதிகாலையிலேயே ஊர்வலம் தொடங்கவிருந்த மேலப்புதூரில் நூற்றுக் கணக்கில் போலீசும், போலீசு உயர் அதிகாரிகளும் குவிந்திருந்தனர். பொதுமக்கள் அந்த வட்டாரத்தைக் கூட நெருங்க முடியாமல் விரட்டப்பட்டனர்.

எல்லா வழிகளையும் அடைத்துவிட்டோம் என்ற கணிப்பில் ஒருபுறமும், மறுபுறம் எப்படியும் வந்து ஏதாவது செய்துவிடுவார்களோ என்ற பீதியுமாய் நின்ற போலீசு அதிகாரிகளுக்குச் சவாலாய் தோழர்கள் திட்டமிட்ட ஒழுங்கோடு வந்து சேர்ந்தார்கள். பீதியடைந்த போலீசு, தோழர்களை உடனே மடக்கி கைது செய்து வேனில் ஏற்றியது. அப்போதே பெரும்பகுதி தோழர்கள் கைதாகினர். தோழர்கள் கம்பீரமாக முழக்கங்கள் கொடுத்தார்கள். அடுத்த ஓரிரு மணி நேரத்துக்குள் சத்திரம் பேருந்து நிலையம், மையப் பேருந்து நிலையம், சிறீரங்கம் என்று திருச்சியில் பல திசைகளிலிருந்தும் எமது அமைப்புகளின் பதாகைகள், கொடிகள் பிரிக்கப்பட்டு ஊர்வலங்கள் திடீர் திடீரென தொடங்கி நடத்தப்பட்டன. விண்ணதிர முழக்கங்களோடு ஒன்றன்பின் ஒன்றாய் வந்த அத்தனை தோழர்களையும் கைது செய்தது போலீசு. சிறீரங்கம் கோயில் நுழைவாயிலுக்குள் கைதுகள், கடும் சோதனைகளை மீறி ஏழு தோழர்களால் மட்டுமே நுழைய முடிந்தது. கோயிலின் மூன்றாவது நுழைவாயில் வந்ததும் திடீரென ஏழு பேரும் முழக்கமிட்டதும் பீதியின் உச்சத்திற்குச் சென்ற போலீசு எந்திரத் துப்பாக்கிகளின் முனையில் தோழர்களை கைது செய்தது.



போராடிய மக்களை கைது செய்து பேருந்தில் திணித்தது போலீசு; கைதுகளும் சிறைகளும் கொதித்தெழும் உணர்வினை தடுக்க முடியாது.

ஏறக்குறைய 300 பெண்கள், 100 குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் உள்ளிட்டு 1500-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டார்கள். மே 1 அன்று, நாள் முழுவதும் காவலில் குழந்தைகள் முழுப்பட்டினியில் வதைக்கப்பட்டார்கள். பெரியவர்களுக்கும் அதே கதி தான். பெண்கள், குழந்தைகளின் தேவைகளை முன்வைத்து சிறைக்குள் நடத்திய போராட்டத்தின் விளைவாக அன்றிரவு 1 மணிக்கு விடுவிக்கப்பட்டனர். கைதான பலநூறு தோழர்களையும் 'எந்த விசாரணையுமில்லாமல்' அன்றிரவே விடுவித்துவிட்டது போலீசு. மொத்தம் 700 பேர் மீது வழக்குப் போட்டனர். மற்றவர்களை பதிவே செய்யாமல், கணக்கு காட்டாமல் வைத்தனர் அல்லது விடுவித்தது எதற்காகத் தெரியுமா? ஆயிரக்கணக்கில் கைதானதாகக் கணக்கு காட்டுவதைத் தவிர்ப்பதற்காக.

போடப்பட்ட வழக்குகள் ஜாமீனில் விடமுடியாத 151, 188, 7-1 A குற்றப்பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டன. கைதானது அறிந்தவுடன் முன்பின் தெரியாத ஆதரவு சக்திகள் கைதைக் கண்டித்து ''சீறிரங்கம் கோயில் கருவறைக்குள் செல்லப் போராடியதற்காக 3000 'சூத்திர்கள்' 'பஞ்சமர்கள்' கைது!'' என்ற முழக்கங்களோடு சுவரொட்டிகள் ஒட்டினர். தமிழகமெங்கும் இப்படிப்பட்ட கண்டனச் சுவரொட்டிகள் காணப்பட்டன.

சிறைக்குள் பூட்டப்பட்டபோதும் தோழர்கள் ஓய்ந்திருக்கவில்லை. அங்கேயே பொதுக் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்தினர்.

சிறைகள் மக்கள் சக்தியை ஒடுக்க முடியாது. பார்ப்பன இந்து மதவெறிக் கும்பலுக்கு எதிராக நமது அணியின் முதல் கட்டப்போர் வெற்றிகர மாக நடந்திருக்கிறது. மக் கள் பெரும் திரளாக இதில் கலந்து கொண்டதும், பார திய ஜனதா, இந்து முன் னணி, பிராமணர் சங்கப் ஆகிய கும்பல் எதிர்த்த அம்பலப்பட்டு தனிமைப் பட்டுப் போனதும், அரசுப் போலீசும் போராட்டத்தை ஒடுக்கி தனது பார்ப்பனீய - இந்துமத விசுவாசத்தை திரைகிழித்து காட்டிக் கொண்டதுமே போராட் டத்தின் வெற்றிக்குச் சான்று.

—மக்கள் கலை இலக்கிய கழகம், தமிழ்நாடு

படிப்பகம்

www.padippakam.com



# ஆர்.எஸ்.எஸ்.-ன் 'தேச' துரோக பார்ப்பன - பாசிச பாரம்பரியம்

இந்து மதவெறி பாசிஸ்டுக ளின் தாய் அமைப்பாகிய ஆர்.எஸ்.எஸ்.-இன் இந்துத்துவ சித்தாந்தம், கொள்கை மற் றும் நாசவேலைகளைப் பற்றி அறிந்திருக் கும் பலருக்கும் கூட அதன் வரலாற்றுப் பின்னணி மற்றும் அமைப்பு முறைகள் எப் படிப் பார்ப்பன - பாசிசத் தன்மை உடை யன என்பது தெரியாது.

"ஒரு மராத்தா" என்கிற புனைப் பெயரில் வீர் சவார்கர் "இந்துத்துவா! யார் இந்து?" என்ற நூலை 1923-இல் வெளி யிட்டார். அதுதான் ஆர்.எஸ்.எஸ். சித்தாந் தத்தின் முதல் நூல். "இந்துத்துவ" ஒழுங்கு முறையின் கீழ் கொண்டு வர முடியாதபடி பல்வேறு பிரிவுகள், சடங்குகள் நிலவுவ தைக் கண்ட சவார்கர் அதையே தனது பல மாக மாற்றினார். இந்துச் சின்னம், சடங்கு எதையும் விலக்கிவிடாதவாறு அனைத்தை யும் கலந்து ஒரு "பொதுக் கலாச்சாரம்", "பொது நாகரீகம்", "பொது பாரம்பரியம் - வரலாறு" உருவாக்கி அதையே புனிதப்ப டுத்துவது சரியென்று வாதிட்டார். ஒரு தேசிய மற்றும் இனக் கண்ணோட்டத்துடன் கூடியவை என்று "தீபாவளி, ராகி, விஜயத சமி, ராமநவமி" போன்ற இந்துப் பண்டி கைகள் மற்றும் இந்து புனிதத்தலங்களைத் தெரிவு செய்தார். இவற்றை தேசியப் பண்டி கைகளாகவும், தேசியச் சின்னங்களாகவும் கொண்டாடுவதன் மூலம் இசுலாமிய, கிறித் துவ மதத்தினரை அந்நியப்படுத்த முடியும் என்று நம்பினார்.

குறிப்பாக ராமனை ஒரு தேசியச் சின் னமாக நிலை நிறுத்துவதை அப்போதே சவார்கர் வலியுறுத்தினார். "நம்மில் சிலர் ராமனை அவதாரமாகக் கருதி வழிபடுகி றோம். சிலர் ஒரு போர் தளபதியாக, நாயக னாகக் கருதி அருமை பாராட்டுகிறோம். நமது (பூர்வகுடி) இனத்தின் புகழ்மிக்க பிர திநிதித்துவ அரசனாகக் கருதி அனைவ ருமே ராமனை நேசிக்கிறோம்" என்றார்.

ஆர்.எஸ்.எஸ்.-இன் அதிகாரபூர்வ ஏடு "ஆர்கனைசர்" இருபத்திரண்டு ஆண் டுகளுக்கு முன்பே, முஸ்லீம்கள் ராமரைத் தமது நாயகனாக ஏற்றுக் கொள்ளட்டும். அப்புறம் வகுப்புவாதப் பிரச்சினைகள் எல் லாமே முடிவுக்கு வந்துவிடும்." (ஜூன் 20, 1971) என்று எழுதியது. ஆகவே, ராம ஜென்ம பூமி மீட்பு இயக்கம் என்பது நாட் டின் பெரும்பான்மை மக்களின் தன்னெழுச் சியான கோரிக்கை என்று இந்துமத வெறி பாசிஸ்டுகள் வாதிடுவது பித்தலாட்டமே. அது "இந்துத்துவ" சித்தாந்தத்தின் ஓர் அங் கமாகத் திட்டமிட்டு ஆரம்ப முதலே வளர்க் கப்பட்டதுதான்!

இந்து பாசிசத்தின் சின்னமாக ராமனை முன்னிறுத்தும் நோக்கத்தைக் குறிக்கும் வகையில், ராவணனை ராமன் வென்றதாகக் கருதிக் கொண்டாடப்படும் விஜயதசமி அன்று, 1925 -இல் ஆர்.எஸ். எஸ். நிறுவப்பட்டது. ராமனது பிறந்த நாளாகக் கருதப்படும் ராமநவமி அன்று, 1927-இல் அந்த அமைப்புக்கு ராஷ்ட்ரிய சுவயம் சேவா சங்' என்கிற பெயரும், ராம னின் கொடியாகக் கருதப்படும் காவிக் கொடியும் ஏற்கப்பட்டன. பார்ப்பன சனா தன குலதர்மத்தைக் காப்பதற்காகப் போரா டியவனே ராமன் என்கிற இதிகாச அடிப்ப டையைப் புரிந்துகொண்டாலே அதன் சித் தாந்தமும் விளங்கிவிடும்.

சவார்கர், இந்துத்துவத்திற்கு விளக்க மளித்த இரண்டு ஆண்டுகளில் இன்னொரு மராத்திய பார்ப்பனர் ஹெட்கேவார், நாகபு ரியில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை நிறுவி னார். அந்தச் சமயத்தில், அதுவும் மராட்டி யத்தில் ஏன், எதற்கு ஆர்.எஸ்.எஸ். அமைப்பு நிறுவப்பட்டது என்பதற்கு சில முக்கிய காரணங்கள் உண்டு.

1922 ஆம் ஆண்டு ஃபிப்ரவரியில் ஒத் துழையாமை இயக்கத்தை நிறுத்திவிடுவது என்று காந்தி அறிவித்தார். அதனால் காங்கி ரசு - கிளாபத் கூட்டு பலவீனமடைந்து முறிந்து போனது. அதைத் தொடர்ந்து, முன் னெப்போதும் கண்டிராதவாறு 1923-27 ஆகிய நான்காண்டுகளில் வடமேற்கில் உள்ள கேஹாட் முதல் டாக்கா வரை அலை அலையாக மதக் கலவரங்கள் வெடித்தன. குறிப்பாக உ.பி.யில் மட்டும் 91 மதக்கலவ ரங்கள் ஏற்பட்டன. கீழ்சாதி மக்களிடையே இசுலாமிய சக்திகள் ஊடுருவி விட்டன என்று கூறி இந்து மதத்தை புனிதப்படுத்தி அமைப்பாக்கும் இயக்கத்தை ஆரிய சமா ஜம் துவக்கியது. குறிப்பாக பிற்படுத்தப் பட்ட, தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த மக்கள் மதம் மாறுவது அப்போது பெருமள வில் நடந்தது. இதைத் தடுத்து அம்மக்களை இந்து மத ஆதிக்கத்தின் கீழ் தக்கவைத்துக் கொள்ளவும், இசுலாமிய, கிறித்துவ மற்றும் சீக்கிய மத வளர்ச்சியைத் தடுக்கவுமே ஆரிய சமாஜம் அந்த இயக்கத்தைத் துவக்கி யது.

**சிறுவர்களுக்கு உடற்பயிற்சியோடு இந்து வெறியையும் ஊட்டுகிறார்கள்**



மத மாற்றங்களால் இந்து மக்கள் தொகை குறைந்துவிட்டது, இந்து (பூர்வ குடி) இனம் அழிந்து போகாமல் தடுக்க வேண்டுமானால் "தீண்டாமை" வழக்கத் தைக் கைவிட வேண்டும் என்று ஆரிய சமா ஜத்தின் அன்றைய தலைவர் சிரதானந்த் "இந்து அமைப்பு: அழியும் (இந்து பூர்வ குடி) இனத்தின் காவலன்" என்கிற நூலை 1926-இல் வெளியிட்டார். மீனாட்சிபுரம் மதமாற்றத்தைத் தொடர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களைச் சமாதானப்படுத்தி, மேல்சாதி இந்துமத ஆதிக்கத்தில் தக்க வைத்துக் கொள்வதற்கு விசுவ இந்து பரிசத் மேற் கொண்ட முயற்சிகளைப் போலவே அப் போதும் நடந்தது. சவார்கரின் "இந்துத்துவ" விளக்கத்தை உடனடியா கவே ஏற்றுக் கொண்ட இந்து மகா சபை அதுவரை ஆண்டுதோறும் மாநாடுகள் மட் டுமே நடத்தி வந்தது. ஆனால் 1926-ல் காசியில் கூடிய இந்து மகா சபை, இந்துத் தற்காப்புப் படை திரட்டப்பட வேண்டும் என்று தீர்மானம் போட்டது.

அதாவது, கிளாபத் இயக்கத்தின் மூலம் இந்திய சுதந்திரப் போராட்ட இயக் கத்தில் இசுலாமியர்கள் பெருமளவில் பங் கேற்று முக்கியத்துவம் பெற்றதையும், விடு தலை இயக்கங்களினால் விழிப்புற்று, இந்து ஆதிக்கத்தில் இருந்து விடுபட முயலும் "கீழ்சாதி" மக்களிடையே இசுலாமிய செல் வாக்கு பரவியதையும் முறியடிக்கவே இந் திய அரசியலை வகுப்புவாதமயமாக்கு வது என்று இந்துமத பாசிஸ்டுகள் முடிவு செய்து பெற்றடுத்ததுதான் ஆர்.எஸ்.எஸ்.

மராட்டியத்தில் இசுலாமிய மதத்தினர் மிகச் சிறுபான்மையினர் இந்து மதத்துக்கு ஆபத்தாகவும் இல்லை; அப்போது அம்மா நிலத்தில் பெரிய அளவு வகுப்புக் கலவரம் எதுவும் நடக்கவும் இல்லை; என்ற போதும் 1920-களில் மராட்டியத்தில் "இந்துத்துவ" சித்தாந்தமும் அமைப்பும் தோன்றுவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்பது பல ருக்கு வியப்பாகவே இருக்கும். காரணம் இதுதான். 1870-களில் மகாத்மா ஜோதிபா பூலே "சத்ய ஷேடக் சமாஜ்" என்ற அமைப் பைத் தொடங்கியதில் இருந்து பிற்படுத்தப் பட்ட சாதி மக்களது சக்தி வாய்ந்த பார்ப் பன எதிர்ப்பு இயக்கங்களை மராட்டியம் கண்டது. 1920-களில் அம்பேத்கார் தலை மையில் தாழ்த்தப்பட்ட மக்கள் அணி திரண்டு பார்ப்பன எதிர்ப்பு இயக்கங்களை முன்னெடுத்தனர். இவற்றை எதிர்த்து முறி

படிப்பகம்

www.padippakam.com

யடிப்பதற்காகவும், பார்ப்பன - மேல்சாதி ஆதிக்கம் கைநழுவிப் போவதைத் தடுக்கவும் அவர்களுக்கு ஒரு பலமிக்க படை தேவையாக இருந்தது. காங்கிரசில் அதிருப்தியுற்றிருந்த (பார்ப்பனீய) தீவிரவாதிகளான சித்பவன் பார்ப்பன திலகரின் வாரிசுகளும், சவார்கர் ஹெட்கேவாருடன் இணைந்தனர். இப்படிப் பார்ப்பன சனாதன குலதருமத்தைக் காப்பதற்காகத் திரண்ட கும்பல்தான் ஆர்.எஸ்.எஸ்.-ஐ நிறுவியது.

ஆர்.எஸ்.எஸ். நிறுவனர் ஹெட்கேவாரே பகிரங்கமாக இதை ஒப்புக்கொள்ளும் வகையில் பின்வருமாறு எழுதியுள்ளார்:

''மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தின் விளைவாக (தேசியத்திற்கான) உற்சாகம் நாட்டில் குறைந்து கொண்டே போகிறது; அந்த இயக்கம் சமூக வாழ்வில் தோற்றுவித்த தீய சக்திகள் அபாயகரமான முறையில் தலைதூக்குகின்றன. தேசியப் போராட்டத்தின் அலை ஓய்ந்த போது ஒருவருக்கொருவர் மனத்தாங்கலும் பொறாமையும் மேலுக்கு வந்தன. எங்கும் தனிப்பட்ட பூசல்கள் வெடித்தன. பல்வேறு வகுப்புகளுக்கிடையே மோதல்கள் துவங்கின. பிராமணர் - பிராமணர் அல்லாதார் மோதல் அப்பட்டமாகத் தெரிய வந்தது. ஒருங்கிணைந்த அல்லது ஐக்கியப்பட்ட அமைப்பு எதுவுமில்லை. ஒத்துழையாமை இயக்கம் என்கிற பாலை வார்த்து வளர்க்கப்பட்ட நச்சுப்பாம்புகள் தமது நச்சுக் காற்றை ஊதி தேசத்தில் கலகங்களை மூட்டுகின்றன.'' (சி.பி.பிஷிகார் எழுதிய, கேசவ்: சங்கத்தின் நிறுவனர்)

ஹெட்கேவாரின் மேற்கண்ட உரையை எழுதி பின்வருமாறு அதற்கு விளக்கம் தருகிறது ஆர்.எஸ்.எஸ்.-இன் அதிகாரபூர்வ வரலாற்று நூல்.

''நாடு முழுவதும் ஒரு மாற்றம் வந்து கொண்டிருந்தது. 1921 இயக்கத்துக்குப் பிந்தைய நிகழ்ச்சிகள் டாக்டர்ஜி ஹெட்கேவாருக்கு ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்தின. துருக்கியில் கிளாபத் இயக்கம் கைவிடப்பட்டதும் இந்திய தேசிய சுதந்திரத்துக்கான கூட்டு இயக்கத்தில் இருந்து, இந்திய முஸ்லீம்கள் விலகிக் கொண்டதன் மூலம் அவர்கள் தாம் முதலாவதாக முஸ்லீம்கள், இரண்டாவதாக மட்டுமே இந்தியர்கள் என்று நிரூபித்தார்கள். சூழ்நிலை மொத்தமும் முஸ்லீம் வெறியினால் சூடேற்றப்பட்டது. ''அல்லா ஹூ அக்பர்'' என்கிற கோஷமே எங்கெங்கும் கேட்டதே தவிர, ''பாரத மாதா கி ஜே'' அல்ல. உடனடியாகவே பன்னு, கேஹாப் மல்டான், நாகபுரி, கான்பூர் மற்றும் பல இடங்களிலும் முஸ்லீம் கலவரங்கள் வெடித்தன. ''இவை இந்து முஸ்லீம் கலவரங்கள்தாம்; ஏனெனில் ஒவ்வொன்றும் முஸ்லீம்களால் துவக்கப்பட்டது. அவர்கள்தான் தாக்குதல் தன்மையுடன் இருந்தார்கள்'' இந்தக் கலவரங்கள் மாப்ளா அட்டூழியமாக மாறி கொலை, கொள்ளை, சூறையாடுதல், கற்பழிப்பு, கட்டாய மதமாற்றமாக முடிந்தன. தேசமே அதிர்ச்சிக்குள்ளானது. 'இது (ஒழுங்கை நிலைநாட்டும்) கிளாபத்தா? அல்லது (அனைவருக்கும் அழிவை விளைவிக்கும்) அகிளாபத்தா' என்று டாக்டர்ஜி வியந்தார். பாரதத்தில் இந்துக்களே தேசம், இந்துத்துவமே நாட்டு - அரசு சித்தாந்தமாக இருக்க முடியும் என்பது நிரூபணமானது. தேசிய அரசியல் கட்டுமானத்தின் மீது எழுதப்பட்டுள்ள விதியைக் காண்பதற்கு கற்பனாவாதிகள் மறுத்து நாடகமாடிய அதேசமயம் யதார்த்தவாதியான டாக்டர்ஜி ஹெட்கேவார் பகற்கனவுகளில் மூழ்கிப்போக மறுத்தார். உண்மை வெளியில் வந்தது. இந்துஸ்தானத்தை இந்துக்கள் மட்டுமே விடுவிக்க முடியும்; இந்துக் கலாச்சாரத்தை அவர்கள் மட்டுமே காத்திட முடியும். இந்து பலம் மட்டுமே நாட்டைக் காத்திட முடியும். இந்த உண்மையின் தர்க்கத்தில் இருந்து தப்ப வழியே கிடையாது. சொந்த - தனிப்பட்ட ஒழுக்கம் மற்றும் தாய் நாட்டின் மீது முழுப் பற்று ஆகியவற்றைக் கொண்ட



சிவாஜி; ஆர்.எஸ்.எஸ். வெறியர்களின் வீர நாயகன்!

இந்து இளைஞர்கள் அமைப்பாக்கப்பட வேண்டும். வேறு வழியே கிடையாது. மகாத்மா (ஹெட்கேவார்)வின் மனவேதனைதான் ராஷ்ட்ரிய சுவயம் சேவாக் சங்கை நிறுவுவதாக வெளிப்பட்டது. ஐந்து நண்பர்களோடு ஆர்.எஸ்.எஸ்.-இன் அன்றான திட்டத்தை அவர் தொடங்கினார். 1925 விஜய தசமி சுபதினமே அந்த மாபெரும் நாள்'' (பிஷிகார் பக்.25)

காங்கிரசின் சவசவத்துப்போன ஒத்துழையாமை இயக்கத்தை போர்க்குணமிக்க பேரெழுச்சியாக மாற்றியதே கிளாபத் இயக்கத்தினர் நுழைந்ததுதான். அது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் கடுமையாக எதிர்த்ததற்காக ஒருபுறம் நச்சுப் பாம்புகள் தலை தூக்குவதாகச் சாடுகிறார் ஹெட்கேவார். பின்னர் அதே இயக்கத்தில் இருந்து இசுலாமியர்கள் விலகிக் கொண்டதாகக் கூறி துரோகப் பட்டம் கட்டுகிறார். உண்மை என்னவென்றால் ஒத்துழையாமை இயக்கம் வன்முறையுடன் கூடிய பேரெழுச்சியாக வெடித்துக் காலனிய ஆட்சிக்கே ஆபத்தாக வளர்ந்துவிட்டதைக் கண்டஞ்சி காந்திதான் போராட்டத்தை நிறுத்துவதாக அறிவித்தாரே தவிர, கிளாபத் இயக்கத்தினர் அதிலிருந்து பின்வாங்கவில்லை.

முஸ்லீம் கலவரங்களின் விளைவாக வெடித்ததுதான் ''மாப்ளா அட்டூழியம்'' என்று ஆர்.எஸ்.எஸ். வரலாற்றுப் புரட்டு செய்கிறது. உண்மையில் அது கிளாபத் இயக்கத்தை ஒடுக்குவதற்காக ஆங்கிலேயே காலனியவாதிகள் கேரள பார்ப்பன நம்பூதிரி ஜென்மிகள் -நிலப்பிரபுக்களுடன் கூட்டுச் சேர்ந்தபோது எழுந்த ''மாப்ளா உழவர்களின் பேரெழுச்சி''யாக 1921-இல் வெடித்தது. அதற்குப் பல ஆண்டுகள் பின்னர் நடந்த இந்து - முஸ்லீம் கலவரங்களைக் கூடப் பட்டியலிட்டு மாப்ளா கலகத்துக்கு காரணமானவை என்று புளுகுகிறது ஆர்.எஸ்.எஸ்.

ஹெட்கேவார் மூளையில் உதித்த ஒரு ''அற்புத'' திட்டத்தினால் நண்பர்களுடன் சேர்ந்து உருவானதுமல்ல, ஆர்.எஸ்.எஸ். 1923 நாகபுரி கலவரத்துக்குத் தலைமையேற்ற நாகபுரி இந்து மகா சபையின் ''தொண்டர் படை''களான ''இந்து சுவயம் சேவாக் சங்'' மற்றும் ''இந்து சம்ரக்சன் சங்'' ஆகியவற்றின் தளபதிகளுடன் சேர்ந்து துவங்கப்பட்டது.

1925 விஜயதசமி அன்று நாகபுரியில் கூடிய ஐந்து இந்து மதவெறி பாசிஸ்டுகள் - ஐவரும் வசதிபடைத்த மேட்டுக்குடி பார்ப்பனர்கள் — ''படித்த மேல்சாதி இந்துக்கள் தமது பாதுகாப்புக்கு கீழ்சாதி இந்துக்களைச் சார்ந்து நிற்பது சரியல்ல; குறிப்பாக பார்ப்பனர் -பார்ப்பனரல்லாதார் மோதல்கள் அதிகரித்துவரும் இந்தச் சமயங்களில் கீழ்சாதி இந்துக்களை நம்ப முடியாது; எனவே அவர்களைச் சார்ந்து நிற்பதைக் கைவிட்டு நாமே தாக்குதல்கள் நடத்துவதற்கான பயிற்சி பெற வேண்டும்'' என்று தீர்மானித்தனர். முக்கியமாக இசுலாமியர்கள் மற்றும் கீழ்சாதி இந்துக்களால் தாக்கப்படுவோம் என்கிற பயபீதியைக் கிளப்பி நடுத்தர வர்க்க பார்ப்பன - பனியா இளைஞர்களைத் திரட்டுவதையே இன்னமும் ஆர்.எஸ்.எஸ். தனது உத்தியாகக் கொண்டிருப்பதே அதன் நிறுவனர்களின் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகிறது.

''ஒவ்வொரு நாளும் 15 நிமிடம் கூட்டு வழிபாடு நடத்துங்கள்; இந்து சமூகம் வெல்ல முடியாததாகிவிடும்'' என்று விவேகானந்தரின் பெண்சீடர் நிவேதிதா போதித்தார். இதையே தமது சடங்கு -வழிபாடு மற்றும் உடற்பயிற்சியுடன் கூடிய அமைப்புத் திட்டத்தின் வேத வாக்காகக் கொண்டார் ஹெட்கேவார். சர்வோதயம், குறித்த நேர வழிபாடு, சடங்கு ஆகியவை மூலம் ஆன்மீக சக்தி பெறுவது என்பது கண்ணுக்குப் புலப்படாத சக்தியை மதவழிபாடு மூலம் அடைவது என்கிற கண்ணோட்டத்தைக் கொண்டு வகுக்கப்பட்டது.

அதேபோல அமைப்புக்கான ஆள் சேர்ப்பும், பயிற்சியும் சடங்கு மற்றும் குரு குல அடிப்படையிலானது. வளர்ச்சியடைந்த மனிதர்கள் பல்வேறு சிந்தனையும் குடும்பப் பொறுப்புகளில் சிக்கியவர்களாகவும் இருப்பார்கள் என்பதால் விடலைப்

படிப்பகம்

www.padippakam.com

...களைத் தெரிவு செய்வதில் கவனம் ...துவது என்று ஹெட்கேவார் கும்பல் ... செய்தது. துணிச்சலான அதிரடித் ...ல்களில் அவர்களைத்தான் நம்பி ...விட முடியும்; மத குருமார்கள் மற் ...பங்கரவாதிகள் பின் பற்றிய அதே ...ான். உடற்பயிற்சியோடு இந்து ...ரிய மகிமைகளையும் அவர்களுக்கு ... வளாப்பது என்றும் தீர்மானித்தார்

...யிற்சிப் பொறுப்பேற்ற ஹெட்கே ...2 முதல் 15 வயது வரையிலான ...ன - பனியா பள்ளிச் சிறுவர்களைக் ...ட குழு ஒன்றை உருவாக்கினார். ...சிபூர்வமான, பாசமுடைய, கேள் ...மற்ற விசுவாசிகளாக, குருபக்தி மிக் ...ாக அவர்களை வளர்க்கத் திட்ட ...ர். ஆரம்பத்தில் பெயரோ, ...யோ, அதிகாரபூர்வ சடங்கோ, ...ா, பதவிப் பொறுப்புகளோ கிடை ... உடற்பயிற்சியோடு முஸ்லீம்களை ...துப் போரிட்ட இந்து நாயகர்கள் ...சிவாஜி, ரானா பிரதாப் போன்றவர்க ...தைகள் போதிக்கப்பட்டன.

...925 ராமநவமி அன்று ஆர்.எஸ். ...ன்ற பெயரும் முன்பு ராமனாலும், ... சிவாஜியாலும் பயன்படுத்தப்பட் ... கூறப்படும் காவிக் கொடியும் ... மராத்தி கலந்த ஒரு வழிபாட்டுப் ...ம் தெரிவு செய்யப்பட்டன. அப்பா ...ு ''தேசிய குரு சமார்த் ராமதாசுக்கு ...'பாரத மாதாவுக்கு ஜே!'' என்கிற ...ங்களும் முழங்க வேண்டும் என்று ...ிக்கப்பட்டது; சிவாஜி, அவரது ...ர் குரு ராமதாஸ், அவரது கொடி ...வற்றுக்கு ஆர்.எஸ்.எஸ். சடங்கில் ...த்துவமளிப்பதன் மூலம் ஒரு சக்தி ... மராத்திய சாயம் பூசப்பட்டது.

...927-இல் முதன்முறையாக ஒரு 20 ...ஸ்.எஸ். குண்டர்களுக்கான பயிற்சி ... நடத்தப்பட்டது. கம்பு, வாள், கட் ...ட்டி முதலிய ஆயுதங்களில் பயிற்சி ...டது. இந்த ஆயுதங்கள் எதுவும் ...ஷ் இராணுவத்தையோ, போலீ ... எதிர்த்துப் போரிடப் போதுமா ...அல்ல; அதேசமயம் சக இந்திய நாட் ... எதிர்த்துத் தெருச்சண்டை கலவரங் ...த்துவதற்கானவை என்பது குறிப்பி ...குந்தது. அக்குண்டர்கள் கபாடி, ... போன்ற உள்ளூர் விளையாட்டுக் ...ஈடுபடுத்தப்பட்டனர். இந்து தேசி ...ந்து அல்லாதவர்களின் விசுவாச ..., காந்தியிசத்தின் கையாலாகாத்த ...ந்துக்களின் கடந்தகால வீரதீர சாக ...றி சொற்பொழிவுகள் நடத்தினர். ...பு ரீதியில் திரளாதது, தாராள - ...சிந்தனை, அமைதி வழி ஆகியவை ...இந்துக்களின் துயரங்களுக்குக் கார ...இந்துக்கள் போர்க்குணமிக்க, பலம் ... சக்தியாக வளர வேண்டும்; அதற் ...ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்புத் ... என்பன திரும்பத் திரும்ப போதிக் ...டன.

...ந்த ஆண்டு மீண்டும் காலனிய ...ப் போராட்டங்கள் வெடித்தன. சைமன் கமிசன் எதிர்ப்பு, மாணவர் - இளைஞர் மற்றும் தொழிலாளர்களின் எழுச்சி ஆகியவற்றை நாடு கண்டது. இவை எதிலும் ஆர்.எஸ்.எஸ். கலந்து கொள்ள வில்லை. மாறாக 1927 செப்டம்ப ரில் நாகபுரியில் ''முஸ்லீம்களின் தாக்குதல் - சதியை இந்து இளைஞர்கள் வெற்றிகர மாக முறியடித்தனர்; தக்க பதிலடி கொடுத்த னர்; இந்து சமூகத்தின் ஒற்றுமையும் போர்க்குணமும் சுயநம்பிக்கை ஊட்டுவதாக அமைந்தது'' என்று ஆர்.எஸ்.எஸ். நடத்திய முதல் மத வெறிக் கலவரம் பற்றி அதன் வரலாறு பீற்றிக் கொள்கிறது.

அந்த ''வெற்றி''யை உறுதிப்படுத்திய ஹெட்கேவார் நாகபுரியைச் சுற்றி மட்டுமல்ல, வேறு மாநிலங்களிலும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கிளைகளைப் பரப்பத் துவங்கினார். அமைப்புக்கும், இந்து தேசியத்துக்கும் உயிரையே தியாகம் செய்வதாக உறுதிமொழி எடுக்கும் வழக்கத்தையும் புகுத்தினர். வல்லபாய் பட்டேல் போன்ற காங்கிரசில் இருந்த இந்து வெறியர்கள் ஆர்.எஸ்.எஸ். பயிற்சி முகாம்களுக்கு அழைக்கப்பட்டனர். காசி இந்துப் பல்கலைக் கழகத்துக்குப் போய் ஆர்.எஸ்.எஸ். கிளைகளை நிறுவுவதற்கு நாகபுரியில் இருந்து மூன்று ''சுவயம் சேவகர்கள்'' அனுப்பப்பட்டனர். பணக்காரர்கள் பலர் நிதியும், இன்னொரு காங்கிரசு இந்து வெறியர் மதன் மோகன் மாளவியா இடவசதியும் தந்து ஊக்குவித்தனர்.



ஆர்.எஸ்.எஸ். நிறுவனர் ஹெட்கேவார்

**இசுலாமியர்கள் மற்றும் கீழ்சாதி இந்துக்களால் தாக்கப்படுவோம் என்கிற பயபீதியைக் கிளப்பி நடுத்தர வர்க்க பார்ப்பன - பனியா இளைஞர்களை திரட்டுவதையே ஆர்.எஸ்.எஸ். உத்தியாகக் கொண்டுள்ளது.**

நாட்டின் பிற பகுதிகளுக்கு ஆர்.எஸ்.எஸ். பரவத் தொடங்கியதை அடுத்து வெவ்வேறு மட்டத் தலைமைப் பிரச்சினை எழுந்து, அதற்கு உடற்பயிற்சித் திட்டத்தை வகுத்தளித்த அண்ணா கோஹனி அமைப்பில் இருந்தே விலகினார். அதன் பிறகு 1929 நவம்பரில் ஆர்.எஸ்.எஸ். பிரமுகர்கள் கூடி அமைப்பு முறை பற்றி முடிவு செய்தனர். இந்து கூட்டுக் குடும்பம் மற்றும் வாழ்க்கை முறைக்குப் பொருத்தமாக அதி உயர் இயக்குநர் (சர் சங் சலக்) ஒருவர் ஆயுள் தலைவராக நியமிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்தனர். அவருக்குப் பின்னர், அடுத்த தலைவர் வாரிசு முறைப்படி நியமிக்கப்படுவாரே தவிர தேர்ந்தெடுக்கப்பட மாட்டார். ஜனநாயக முறைக்கு மாறாக முற்றிலும் மத்தியத்துவமயமாக்கப்பட்ட சர்வாதிகார முறையைத் தெரிவு செய்துகொண்டதற்குக் காரணமே இராணுவ மற்றும் மத குருபீட அடிப்படையிலான நிறுவனமாகக் கட்டும் நோக்கம்தான்.

1929 டிசம்பரில் லாகூர் காங்கிரசு ''பூரண சுதந்திரத்'' தீர்மாமனம் நிறைவேற்றிய போது, ''நமது இலட்சியத்தை காங்கிரசு ஏற்றுக் கொண்டு விட்டது'' என்று ஆர்.எஸ்.எஸ். பீற்றிக் கொண்டது. ஆனால் மூன்று மாதங்களுக்குப் பிறகு காங்கிரசு துவக்கிய சட்டமறுப்பு, உப்பு சத்தியா கிரகங்களில் கலந்து கொள்ள மறுத்தது; அதே சமயம் ''இராணுவ'' வலிமை திரட்டிய ஆர்.எஸ்.எஸ், தானாகவும் காலனிய எதிர்ப்புப் போராட்டம் எதையும் நடத்த வில்லை. அது தனது பலம் முழுவதையும் இசுலாமிய எதிர்ப்புப் போருக்காகக் காத்து வந்தது. சட்ட மறுப்பு இயக்கம் தோல்வியடைந்ததைப் பயன்படுத்தி காங்கிரசு தொண்டர்களை ஈர்த்து ஆர்.எஸ்.எஸ்.-ஐ விரிவுபடுத்தியது. அதன் மீதும், இந்து மகா சபாவின் மீதும் காங்கிரசு சந்தேகம் கொண்டதைத் தொடர்ந்து தொழிலதிபர் ஜம்னாலால் பஜாஜ் சமரசம் செய்து வைக்க முயன்றார். இருப்பினும் தமக்குப் போட்டி அமைப்புகளாக காங்கிரசு கருதிய ஆர்.எஸ்.எஸ்., இந்து மகா சபா, முஸ்லீம் லீக் ஆகியவற்றில் சேருவதற்கு காங்கிரசாரைத் தடை செய்தது.

ஹெட்கேவாருடன் மராட்டியம் முழுவதும் சுற்றி ஆர்.எஸ்.எஸ்.-ஐ உருவாக்கிய நாதுராம் கோட்சே, கலாச்சார, சித்தாந்த வேலைகள் மட்டும் போதாது, தீவிர அரசியல் ஈடுபாடும் வேண்டும் எனக் கோரி அதிலிருந்து விலகி இந்து மகா சபாவில் இணைந்தார். இவர்தான் பின்னாளில் காந்தியைச் சுட்டுக் கொன்றவர். மராட்டியத்தில் அதிக அளவு பரவியிருந்த ஆர்.எஸ்.எஸ்., பிறகு ''ஆரிய சமாஜ''த்துடன் கூடிக் குலாவி இந்தி பேசும் மாநிலங்களிலும் பரவியது. இதற்கு ''ஆரிய சமாஜ''த்தின் கல்வி சாலைகள் பெரிதும் உதவின.

1940-இல் ஹெட்கேவார் இறந்து போய் கோல்வால்கர் ஆர்.எஸ்.எஸ். குருவானார். அதற்குள்ளாகவே தமிழ்நாடு, காஷ்மீர் உட்பட நாடு முழுவதும் 400 மையங்களில் ஒரு லட்சம் பேரைக் கொண்ட அமைப்பாக அது வளர்ந்து விட்டது. சவார்கரும் ஹெட்கேவாரும் ஊன்றி விட்டுப்போன அந்த நச்சுச் செடியை பெரும் இந்து மதவெறி நச்சு மரமாகவே வளர்த்தெடுத்தார் கோல்வால்கர். நாட்டுப் பிரிவினையையொட்டி மதவெறிப் படுகொலைகளை நடத்தி நாலுகால் பாய்ச்சலில் வளர்வதற்கான சாதக நிலைமையோடு காந்தி கொலையைத் தொடர்ந்து நெருக்கடியான நிலைமையிலும் ஆர்.எஸ்.எஸ்.-ஐ கோல்வால்கர் எப்படிக் காத்து வளர்த்தார் என்பதைப் பிறகு பார்ப்போம்.

—தொடரும்

படிப்பகம்

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015
Printed by him at EZHIL PRINTS, 381, Arcot Road, Madras - 600 024. Editor: R.SHANMUGARAJ

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd.No. TN/MS(S) 34



# இதுதான் இன்றைய இந்தியா





பல ஆண்டுகளாக சென்னை
நகரை வாட்டி வதைக்கும் குடிநீர் அவலத்
தினை எதிர்த்துப் போராடுவதற்காக அணி
திரண்டுள்ள நகரின் பல்வேறு பகுதிகளைச்
சேர்ந்த பெண்கள் இவர்கள். அதிகாரிகளிடம்
முறையிட்டாகிவிட்டது, எம்.எல்.ஏ.-
க்களைச் சந்தித்துக் கூறியாகிவிட்டது,
அமைச்சர்களிடம் மனு கொடுத்தாகிவிட்டது.
பயனில்லாததால் சாலை மறியலில் ஈடுபட்ட
போது குண்டாந்தடிகளின் தாக்குதலால் மண்
டைகள் உடைந்து போனது. இருப்பினும்
வாளாயிருந்துவிடவில்லை இவர்கள்.
போராட்டத்தை விரிவாக எடுத்துச் செல்வதற்
காக அனைத்துக் குடிசைவாழ் மக்களையும்
இப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள பிற
தட்டு மக்களையும் ஒன்று திரட்ட திட்டம்
தீட்டி, மே 1-ல் இக்கூட்டத்தை நடத்தி முடித்
துள்ளனர். 'ரயில் மூலம் தண்ணீர்', 'லாரி
மூலம் தண்ணீர்', அடுத்து 'வீராணம் திட்டம்'
எனக் கண்துடைப்புக்காகத் திட்டங்களை
அறிவித்து வருகிறது ஜெயா அரசு. ஒரு குடம்
தண்ணீருக்காக மக்கள் ஆளாய்ப் பறக்கும்
நிலை குறைந்தபாடில்லை.

இது காஞ்சி மடத்தைச் சேர்ந்த பெரிய
சங்கராச்சாரியின் நூற்றாண்டு விழா கொண்
டாட்டங்களில் கலந்து கொண்ட அரசு தலை
வர்களின் கூட்டம். இவ்விழாவை மிக ஆடம்ப
ரமாக நடத்த ஒரு வருடத்திற்கு முன்பே திட்
டம் தீட்டினார்கள். மாநிலங்களெங்கும் ஆளு
நரைத் தலைவராகக் கொண்ட விழா குழுக்
கள் கட்டப்பட்டன. நன்கொடை என்ற பெய
ரில் கோடிக்கணக்கான ரூபாய் வசூலிக்கப்பட்
டது. காஞ்சி மடம் 5 கோடி ரூபாய் செலவில்
புதுப்பிக்கப்பட்டது. முக்கிய நிகழ்ச்சிகள் மே
7 தொடங்கி தொடர்ச்சியாக மூன்று வாரத்திற்
குக் கொண்டாடுகிறார்கள். அவரின்
வாழ்க்கை வரலாறு வீடியோ திரைப்படமாக
தயாரிக்கப்பட்டு, மே 7 அன்றே தொலைக்
காட்சியின் தேசிய நிகழ்ச்சியில் ஒளிபரப்பப்
பட்டது. தொலைக்காட்சியில் கொண்டாட்
டத்தினை நேரடியாக ஒளிபரப்புவதில் தடங்
கல் ஏற்பட்டதால் உடனடியாக விசாரணைக்
கமிஷன் அமைக்கப்பட்டது. மேடையிலேயே
காஞ்சிப் பெரியவரின் பெயரில் பல்கலைக்
கழகம் அமைக்கவிருப்பதைப் பிரதமர் அறி
வித்தார். இது தவிர 'முற்றும் துறந்த' பெரியவ
ருக்கு தங்கக் கிரீடம், தங்கக்காசு அபிஷேகம்
விழாவின் இறுதியில் பல யாகங்கள் நடத்தி
விலையுயர்ந்த பொருட்களைக் கொட்டி
அழிக்கப் போகிறார்கள்.

ஒருபுறம் தங்களது குறைந்தபட்ச அடிப்ப
டைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கோரிப்
போராடும் மக்களை அலட்சியப்படுத்தும்
அரசு, மறுபுறம் இந்துமத வெறியை எதிர்த்துப்
போராடுவதாகக் கூறிக்கொண்டே, தனது
ஜாதிப் பற்றின் காரணமாக இப் பார்ப்பன
மடத் தலைமைக் குருவின் பிறந்த நாளை
அரசு விழா போல் நடத்தி முடிக்கிறது. இக்
கொடுமைகளை இன்னும் எத்தனை நாள்
தான் பொறுத்துக் கொள்வது?

படிப்பகம்